# தமிழக சட்டமன்றத் தேர்தல் - 2016

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை

வெளியீடு :

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி**

சத்தியமூர்த்தி பவன்
40, திரு.வி.க. சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி : 044-28601949
Website: www.tncc.org.in
Facebook:www.facebook.com/ tamilnaducongresscommittee

# இது அறிக்கை அல்ல; ஆவணம்!

**ஈ.வெ.கி.ச.இளங்கோவன்**
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

தமிழகத்தில் நடைபெறவுள்ள 15வது சட்டப்பேரவை தேர்தலுக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தேர்தல் அறிக்கை தயாரிக்க நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் இ.எம்.சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் 14 உறுப்பினர்கள்கொண்ட குழுவை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களின் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள முன்னணி காங்கிரஸ் தலைவர்கள், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் உள்ளிட்ட பலருக்குத் தேர்தல் அறிக்கைக்குத் தேவையான கருத்துக்களை வழங்குமாறு கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதையொட்டி பெறப்பட்ட பல்வேறு பரிந்துரைகள் மற்றும் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு பலமுறை கூடி விவாதித்து திரட்டப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் வரைவு தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த வரைவு தேர்தல் அறிக்கை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, காங்கிரஸ் தேர்தல் அறிக்கை இறுதி வடிவத்தைப் பெற்றிருக்கிறது. இந்தத் தேர்தல் அறிக்கையில் ஏறத்தாழ 55 தலைப்புகளின்கீழ் தமிழகத்தில் எதிர்கொள்ளவேண்டிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து காங்கிரஸ் கட்சியின் கருத்துக்களைத் தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கட்சி எத்தகைய அணுகுமுறையை ஆட்சிமுறையில் கையாளவேண்டும் என்பதற்குக் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை மிகச்சிறந்த வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறோம். இதன்மூலம் பல்வேறு பிரச்சினைகளில் நமது நிலை என்ன என்பதை மிகத்தெளிவாக அறுதியிட்டுக் கூறியிருக்கிறோம். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை மற்ற கட்சிகளின் தேர்தல் அறிக்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவே அமைந்திருக்கிறது. எங்களது புதிய பார்வை தமிழக வாக்காளர்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெறும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்தத் தேர்தல் அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள், முன்னணி அமைப்புகள், சொற்பொழிவாளர்கள், காங்கிரஸ் வேட்பாளர்கள் தங்களது பிரச்சாரத்தில் மிகப்பெருமளவில் பயன்படுத்தவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2016 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவில் இடம்பெற்று மிகச்சிறப்பான கருத்துக்களைக் கூறி, இது அறிக்கை அல்ல, ஆவணம் என்று சொல்லுகிற அளவில் அமைவதற்குக் காரணமான குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மனதார பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு

டாக்டர் இ.எம்.சுதர்சன நாச்சியப்பன், எம்.பி., தலைவர்

உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. உ.பலராமன் | திரு. மாணிக்கம் தாகூர் |
| திரு. ஆ.கோபண்ணா | திரு. சி.ஆர்.கேசவன் |
| திரு. எம்.ஜோதி | திரு. கு.செல்வப்பெருந்தகை |
| திரு. சி.டி.மெய்யப்பன் | திரு. எஸ்.சோலையப்பன் |
| திரு. எம்.எஸ்.திரவியம் | திரு. கோ.சூரியமூர்த்தி |
| திருமதி. ஜான்சிராணி | திரு. பெருமாள்சாமி |
| திருமதி. பி.இந்திராகாந்தி | திருமதி. இமயா கக்கன் |

## பொருளடக்கம்


- **மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் மகத்தான பத்து சட்டங்கள் : 2004-2014**
- **அராஜக அ.தி.மு.க. ஆட்சியை ஏன் அகற்ற வேண்டும்?**
- **காங்கிரஸ் தேர்தல் அறிக்கை - சிறப்பு அம்சங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊழலை ஒழிப்போம்; நல்லாட்சி அமைப்போம் | - | 20 |
| 2. | பூரண மது விலக்கை அமல்படுத்துவோம் | - | 21 |
| 3. | விவசாயக் கொள்கையை விரிவாக வகுப்போம் | - | 22 |
| 4. | புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவோம் | - | 29 |
| 5. | தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவோம் | - | 32 |
| 6. | மின் உற்பத்தியைப் பெருக்குவோம் | - | 35 |
| 7. | அரசு நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்வோம் | - | 37 |
| 8. | உள்ளாட்சியில் நல்லாட்சி அமைத்திடுவோம் | - | 38 |
| 9. | இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் | - | 42 |
| 10. | நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்போம் | - | 43 |
| 11. | சமூக நீதியைப் பாதுகாப்போம் | - | 43 |
| 12. | நீதித்துறையைச் சீரமைப்போம் | - | 44 |
| 13. | பொது சுகாதாரக் கொள்கையைப் புனரமைப்போம் | - | 45 |
| 14. | பொது விநியோக திட்டத்தைச் சீரமைப்போம் | - | 46 |
| 15. | சமூக நலக் கொள்கை விரிவாக்குவோம் | - | 47 |
| 16. | தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நலன் | - | 48 |
| 17. | மீனவர் பிரச்சினைகளும் தீர்வுகளும் | - | 51 |
| 18. | தொழிலாளர் நலன் | - | 53 |
| 19. | அமைப்புசாரா தொழிலாளர் நலன் | - | 54 |
| 20. | நெசவாளர் நலன் | - | 54 |
| 21. | அரசு ஊழியர் - ஆசிரியர் - ஓய்வூதியர் நலன் | - | 55 |
| 22. | வணிகர் நலன் | - | 56 |
| 23. | மாற்றுத்திறனாளிகள் நலன் | - | 56 |
| 24. | சிறுபான்மையினர் நலன் | - | 56 |
| 25. | மகளிர் நலன் | - | 57 |

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 26. | முதியோர் நலன் | - | 58 |
| 27. | திருநங்கையர் நலன் | - | 58 |
| 28. | பால் உற்பத்தியாளர் - நுகர்வோர் நலன் | - | 59 |
| 29. | அரசு நிதிக் கொள்கையை மேம்படுத்துவோம் | - | 59 |
| 30. | காவல் துறையைச் சீரமைப்போம் | - | 60 |
| 31. | இந்துசமய அறநிலையத் துறையை மேம்படுத்துவோம் | - | 60 |
| 32. | போக்குவரத்துத் துறையில் சீர்திருத்தம் செய்வோம் | - | 61 |
| 33. | நுகர்வோர் நீதிமன்றங்களைச் செம்மைப்படுத்துவோம் | - | 61 |
| 34. | சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துவோம் | - | 61 |
| 35. | சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பேணிக் காப்போம் | - | 62 |
| 36. | கூவம் சீரமைப்புத் திட்டம் | - | 62 |
| 37. | மெட்ரோ ரயில் திட்டத்தை விரிவுபடுத்துவோம் | - | 62 |
| 38. | மரபு சாரா எரிசக்தியை ஊக்கப்படுத்துவோம் | - | 63 |
| 39. | காஞ்சிபுரம் பட்டுப் பூங்கா | - | 63 |
| 40. | நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு மணிமண்டபம் | - | 64 |
| 41. | சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வோம் | - | 64 |
| 42. | திரையரங்குகளில் கட்டணக் கொள்ளையைத் தடுத்திடுவோம் | - | 64 |
| 43. | தமிழ் வளர்ச்சி | - | 65 |
| 44. | நதிகளை இணைப்போம் | - | 65 |
| 45. | வேலைவாய்ப்பைப் பெருக்குவோம் | - | 68 |
| 46. | இலங்கைத் தமிழர் உரிமை காத்திடுவோம் | - | 69 |
| 47. | தகவல் அறியும் ஆணையத்தைச் சீரமைப்போம் | - | 70 |
| 48. | சேதுசமுத்திரத் திட்டம் ; சென்னை - மதுரவாயல் திட்டம் | - | 70 |
| 49. | இயற்கை பேரிடர் மேலாண்மையை உறுதிசெய்வோம் | - | 70 |
| 50. | கூட்டுறவு தேர்தல் | - | 71 |
| 51. | பொது நூலகத்துறையைச் சீரமைப்போம் | - | 71 |
| 52. | தமிழகத்தில் மீண்டும் மேலவை அமைப்போம் | - | 72 |
| 53. | பத்திரிகையாளர் நலன் | - | 72 |
| 54. | திரைப்படத்துறையைச் சீர்செய்வோம் | - | 72 |
| 55. | கிராமியக் கலை - ஜல்லிகட்டு | - | 72 |

# மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் மகத்தான பத்து சட்டங்கள் : 2004-2014

இந்திய விடுதலைக்காக 60 ஆண்டுகாலம் போராடி விடுதலை பெற்றுத்தந்த பிறகு, கடந்த 68 ஆண்டுகளில் 55 ஆண்டுகள் இந்தியாவை ஆட்சிசெய்த பெருமை காங்கிரசுக்கு உண்டு. இந்தியாவை ஆள்வதற்குத் தகுதியுள்ள கட்சியாகக் காங்கிரஸ் கட்சியினையே மக்கள் நம்பினார்கள். ஆதரித்தார்கள், வாக்களித்தார்கள், ஆட்சியில் அமரவைத்து அழகு பார்த்தார்கள்.

கடந்த 2014 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைச் சந்தித்தாலும், ஜனநாயகத்தின் அடிப்படையில் இத்தீர்ப்பைக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டது. அந்தத் தேர்தலில் மொத்தம் பதிவான 53 கோடி வாக்குகளில், பா.ஜ.க.வுக்குக் கிடைத்தது 17 கோடி வாக்குகள், பெற்ற இடம் 283. காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்குகள் 11 கோடி, மக்களவையில் கிடைத்த இடங்கள் 44. பா.ஜ.க.வுக்கு 29 சதவிதக வாக்குகளும் காங்கிரசுக்கு 19 சதவிகித வாக்குகளும் கிடைத்துள்ளன. பா.ஜ.க.வுக்கும் காங்கிரசுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 6 கோடி. இதைத் தோல்வியாக ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் கட்சி, பொறுப்புள்ள எதிர்கட்சியாக அன்னை சோனியாகாந்தி தலைமையில், இளந்தலைவர் ராகுல்காந்தி வழிகாட்டுதலில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

2004இல் தொடங்கி 2014 வரை டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு வரலாறு காணாத வகையில் பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. சுதந்திர இந்தியாவில் என்றுமே காணாத வளர்ச்சி விகிதமான 9 சதவிகித வளர்ச்சியைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் காண நேர்ந்தது மிகப்பெரிய சாதனையாகும்.

நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை உருவாக, தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டடது. இதன்மூலம் ஆட்சியில் நடைபெறும் அனைத்து விவரங்களையும் சாதாரணக் குடிமகன்கூட அறிந்துகொள்ள உரிமை வழங்கப்பட்டது. இது ஒரு புரட்சிகரமான நடவடிக்கையாகும்.

மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு அமைந்ததும் புரட்சிகரமான சட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுஇணையற்ற சாதனைகளைப் படைத்தது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப் புனிதமாகக் கருதுகிற ஒரே கட்சி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிதான். கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சி பாதையில் அழைத்துச்செல்ல சிறப்பான பத்து சட்டங்களை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நிறைவேற்றியுள்ளது.

**மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் மகத்தான சட்டங்கள் - சாதனைகள் :**

**உணவு பாதுகாப்புச் சட்டம் :** அன்னை சோனியா காந்தியின் கனவுத் திட்டம்தான் உணவு பாதுகாப்புச் சட்டம். கடந்த சில வருடங்களாக இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். இச்சட்டத்தை நிறைவேற்றியதற்காக அன்னை சோனியாவை 'மணிமேகலை', 'அன்னபூரணி' என்று வாய்மணக்க அழைத்து, நாட்டுமக்கள் மகிழ்ச்சியடைந்து வரவேற்றனர்.

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் உணவு பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு. 81 கோடி மக்களுக்கு ஒரு கிலோ கோதுமை ரூ.2, ஒரு கிலோ அரிசி ரூ.3, ஒரு கிலோ பருப்பு வகைகள் ரூ.1 என்கிற அளவில் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஐந்து கிலோ வீதம் உணவு தானியங்கள் வழங்குவது சட்டப்பூர்வமாக உறுதிசெய்யப்பட்டது. இதற்குத் தேவைப்படும் உணவு தானியங்களின் அளவு 72.6 மில்லியன் டன் ஆகும். இதற்காக மத்திய அரசு 2013-14ஆம் ஆண்டு விலைகளின்படி, மானியத் தொகையாக ரூபாய் 1 லட்சத்து 27 ஆயிரத்து 747 கோடி ஒதுக்கியது. ஆனால், மத்திய பா.ஜ.க. ஆட்சியில் 2003-04இல் உணவு மானியம் ரூ.25,160 கோடியாகத்தான் இருந்தது என்பது நினைவுகூரத்தக்கது.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிற ஒரு கிலோ அரிசிக்கு மத்திய அரசு வழங்குகிற விலை ரூ.23.80. இந்த உணவு பாதுகாப்புச் சட்டடப்படி, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ரூ.3 என்கிற விலையில் வழங்குகிறது. இதற்காக மத்திய அரசு ஒரு கிலோ அரிசிக்கு வழங்குகிற மானியம் ரூ.20.80. அதேபோல, லெவி சர்க்கரையை மத்திய காங்கிரஸ் அரசு ரத்துசெய்தபிறகு, ஒரு கிலோ சர்க்கரையைப் பொது சந்தையில் ரூ.34 விலைக்கு வாங்கி, ரூ.13.50 விலையில் மாநில அரசுகளுக்கு அளித்து வருகிறது. இதனால் ஒரு கிலோ

சர்க்கரைக்கு மத்திய அரசு ஏற்றுக்கொள்கிற மானியம் ரூ.20.50. ஏழை எளிய மக்களுக்காக இத்தகைய சுமையைச் சுமந்துக்கொண்டு, இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற காங்கிரஸ் ஆட்சியை நாட்டுமக்கள் நன்றியோடு இன்றும் நினைத்துப் பார்க்கிறார்கள்.

**நிலம் கையகப்படுத்துதல் சட்டம் :** விவசாயிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அநீதியைத் துடைத்தெறிய இளந்தலைவர் ராகுல்காந்தி மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாகக் கொண்டுவரப்பட்டதுதான் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதல் சட்டம் - 2013. இந்தப் புதிய சட்டத்தின்படி கிராமப்புறங்களில் நிலம் கையகப்படுத்தப்படும்போது சந்தை மதிப்பைவிட நான்கு மடங்கு அதிகமாகவும், நகர்ப்புறங்களில் இரண்டு மடங்கு அதிகமாகவும் இழப்பீடு வழங்கப்படவேண்டும். நிலம் கையகப்படுத்துவதால் பாதிக்கப்படும் விவசாயத் தொழிலாளர்கள் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்குச் சட்டத்தில் விரிவாக வகைசெய்யப்பட்டிருந்தது.

இச்சட்டம் 2011ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் முன்தேதியிட்டு அமல்படுத்தப்பட்டது. எந்தவொரு நிலம் கையகப்படுத்தும்போதும், கையகப்படுத்தும் நடவடிக்கைகளிலும் உள்ளாட்சி அமைப்புகளின் ஒப்புதல் அவசியம் பெறவேண்டும். கிராம சபைகளின் அனுமதியில்லாமல் நிலம் கையகப்படுத்த முடியாது. நில உரிமையாளர்களுக்கு முழு இழப்பீட்டுத் தொகையும் வழங்கி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நடவடிக்கைகள் முழுமையாக முடிந்தபின்னரே, நில உரிமையாளர்களை நிலம் கையகப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து வெளியேறுமாறு கூறமுடியும்.

அரசு மற்றும் தனியார் துறை இணைந்து செயல்படுத்தும் இத்திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்த 70 சதவிகித நில உரிமையாளர்களிடமிருந்து ஒப்புதல் பெறவேண்டும். தனியார் திட்டங்களுக்கு 80 சதவிகித உரிமையாளர்களிடம் ஒப்புதல் பெறவேண்டும். இத்தகைய உரிமைகளை விவசாயிகளுக்கு வழங்கிய நில உரிமைச் சட்டத்திற்கு மாற்றாக, விவசாயிகளின் உரிமைகளைப் பறிக்கிற வகையில் மத்திய பா.ஜ.க. அரசு அவசரச் சட்டம் கொண்டுவந்தது. இச்சட்டத்திற்கு எதிராக ராகுல்காந்தி தலைமையில் நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் கிளர்ந்தெழுந்த காரணத்தால் அந்த அவசரச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வால் நிறைவேற்ற முடியாமல் காலாவதியாகிற நிலை ஏற்பட்டது. இது விவசாயிகளின் வெற்றி, இளந்தலைவர் ராகுல்காந்தியின் வெற்றி, காங்கிரசின் வெற்றி.

**வறுமையை ஒழித்த மகத்தான சட்டம் :** கிராமப்புற மக்களிடையே நிலவுகிற வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குகிற வகையில் 2006ஆம் ஆண்டு மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு கொண்டுவந்ததுதான் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம். ஒரு நிதியாண்டில் நூறு நாள்கள் வேலைவாய்ப்பு வழங்கி, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை வளர்த்து வருகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆண்டுதோறும் சராசரியாக 5 கோடி குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது. 2006ஆம் ஆண்டில் 65 ரூபாயாக இருந்த ஒரு நாள் ஊதியம், இன்று ரூ.193 ஆக உயர்ந்திருக்கிறது. விலைவாசி உயரும்போது இந்த ஊதியமும் உயருகிற வகையில் மத்திய காங்கிரஸ் அரசு வழிவகை செய்திருக்கிறது.

**கல்வி உரிமைச் சட்டம் :** குழந்தைகளுக்கான இலவசம் மற்றும் கட்டாய கல்விபெறும் உரிமைச் சட்டம் 2009இல் நிறைவேற்றப்பட்டு, நாடு முழுவதும் உள்ள பள்ளி மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்கப்பட்டது. 6 முதல் 14 வயதுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசக் கட்டாய கல்வி வழங்க இச்சட்டம் வழிசெய்கிறது. இச்சட்டத்தினால் இடைநிலை மற்றும் உயர்கல்வி அளவில் பள்ளியிலிருந்து மாணவர்கள் பாதியிலேயே விலகிவிடுவது பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது.

பத்தாண்டுகளுக்குமுன்பு வங்கிகளில் கல்விக்கடன் என்பது எவரும் எளிதில் பெறமுடியாத, அரிதிலும் அரிதாக இருந்தது. மத்திய காங்கிரஸ் அரசு அறிமுகம் செய்த கல்விக்கடன் டிசம்பர் 2013 நிலவரப்படி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 25 லட்சத்து 70 ஆயிரத்து 254 மாணவர்கள் பெற்ற கடன் நிலுவைத்தொகை ரூபாய் 57 ஆயிரத்து 700 கோடியாக உள்ளது. இந்தக் கடனுதவி மூலம் ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த, குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழ்கிற குடும்பத்தைச் சார்ந்தவர்கள், மருத்துவர்களாகவும் பொறியாளர்களாகவும், மேலும் உயர்கல்வி படித்து பட்டம் பெற்று, வாழ்க்கையில் மிகப்பெரிய வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் சாதனையாகும்.

அன்று பெருந்தலைவர் காமராஜர் தொடக்கிவைத்த கல்விப் புரட்சி, இன்று மிகப்பெரிய பலனைத் தந்துகொண்டிருக்கிறது. தமிழகத்தில் மட்டும் ஒரு ஆண்டில் 2 லட்சம் பொறியியல் பட்டதாரிகள் படித்து முடிக்கிறார்கள் என்று சொன்னால் இதைவிட மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு, வேறு ஏதாவது இருக்கமுடியுமா என்பதை மனசாட்சியுள்ளவர்கள் சிந்திக்கவேண்டும்.

**குற்றவியல் சட்ட (திருத்த) மசோதா - 2013 :** பணியிடங்களில் பாலியல் தொல்லைகளிலிருந்து மகளிரைப் பாதுகாப்பதற்கான சட்டம் - 2013 - மகளிரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தத்தைக் காங்கிரஸ் கட்சிதான் தலைமையேற்று கொண்டுவந்தது. நமது பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதற்குரிய வலிமையை நமது நிர்வாக அமைப்புக்கு இந்தச் சட்டங்கள் அளித்தன. இச்சட்டங்களின்படி பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு விதிக்கப்படும் தண்டனையின் அளவு அதிகரிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறப்பான முறையில் இச்சட்டம் செயல்படுவதை உறுதிசெய்வதற்காக, மகளிருக்குச் சாதகமான வகையில் புதிய குற்றங்கள் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டன.

**கம்பெனிகள் நிர்வாக நடைமுறை**யில் தெளிவை ஏற்படுத்துவதற்காகப் புதிய கம்பெனிகள் சட்டத்தைக் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டுவந்து நிறைவேற்றியது. இதில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் விரிவான முறையில் ஆலோசனை நடத்தப்பட்டு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம், புதிய வணிகங்கள் தொடங்குவதை எளிதாக்குவதுடன், பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புகளையும் ஊக்குவிக்கிறது.

இந்தியாவின் குடிமக்கள், குறிப்பாக நமது மூத்த குடிமக்களுக்கு அவர்களின் ஓய்வூதிய நிதி தொடர்பாக முழுமையான பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதை கருத்தில்கொண்டு **ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணைய சட்டம் - 2013** என்ற சட்டத்தைக் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டுவந்து நிறைவேற்றியது. மனசாட்சியற்ற தனிநபர்களிடமிருந்து ஓய்வூதிய நிதி பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக, ஓர் ஒழுங்குமுறை அமைப்பு ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

நிர்வாக ஊழலுக்கு எதிராகக் கண்காணிப்பை மேற்கொள்வதற்காக வலிமையான, சுதந்திரமான ஆணையத்தை மக்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகக் கொண்டுவரப்பட்டதுதான், **லோக்பால் மற்றும் லோக் அயுக்தா சட்டம் - 2013** ஆகும். நிர்வாகம் மற்றும் அரசியல் அமைப்பில் நிலவும் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக ஓர் அமைப்பை ஏற்படுத்துவதன்மூலம் இந்தச் சட்டம் மக்களுக்கு மிகப்பெரிய அதிகாரத்தை வழங்குகிறது.

நமது நாட்டின் வனம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, **தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் - 2009** என்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் வனம் சார்ந்த பிரச்சினைகளை விசாரிப்பதற்காக விரைவு நீதிமன்றங்களை அமைக்க இச்சட்டம் வகைசெய்கிறது.

**தெரு வணிகர்கள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் - 2004** இந்திய தேசிய காங்கிரஸ் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது. லட்சக்கணக்கான தெரு வணிகர்களின் வாழ்வாதாரத்தை இச்சட்டம் பாதுகாக்கிறது.

**மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளுவதைத் தடைசெய்தல் மற்றும் ஒழுங்குமுறை சட்டம் - 2013** என்னும் புரட்சிக்கரமான சட்டம் காங்கிரஸ் கட்சி கொண்டுவந்து நிறைவேற்றியது. மனித கழிவுகளை அள்ள மனிதர்களைப் பயன்படுத்துவோருக்குக் கடுமையான தண்டனைகளை விதிக்கவும், கழிவுகளை அகற்றும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் இச்சட்டம் வகைசெய்கிறது. இதன்மூலம் காலம்காலமாக நமது சமுதாயத்தின்மீது படிந்திருந்த கறை ஒருவழியாக அகற்றப்படும்.

**விவசாயக் கடன் :** 2003-04இல் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசால் வழங்கப்பட்ட விவசாயக்கடன் ரூபாய் 83 ஆயிரம் கோடி. 2015-16இல் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு நிர்ணயித்த கடன் இலக்கு ரூபாய் 8 லட்சத்து 50 ஆயிரம் கோடி. விவசாயிகள் நலனில் மத்திய காங்கிரஸ் அரசுக்கு அக்கறை இருக்கிறதா? பா.ஜ.க. அரசுக்கு அக்கறை இருக்கிறதா? என்பது விவசாயிகளுக்குப் புரியாமல் இல்லை.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடந்த பத்து ஆண்டுகளில் 14 கோடி மக்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்டிருக்கிறது. முந்தைய பத்து ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, கடந்த பத்தாண்டுகளில் வறுமை ஒழிப்பு வேகம் மும்மடங்கு அதிகரித்திருக்கிறது. இது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் மிகப்பெரிய சாதனையாகும்.

**செல்பேசி புரட்சி :** இந்தியாவில் தற்போதைய செல்பேசிகளின் எண்ணிக்கை 100 கோடியைத் தாண்டிவிட்டது. பத்தாண்டுகளுக்குமுன்பு இது வெறும் 3.36 கோடியாக இருந்தது. ஊரகப் பகுதிகளில் தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் 26 மடங்கு அதிகரித்திருக்கிறது. தொலைத்தொடர்புத் துறையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இத்தகைய சாதனையைப் புரிந்து மிகப்பெரிய புரட்சியைச் செய்திருக்கிறது. ஆனால், இதை மூடிமறைக்க எதிர்கட்சிகள் 2ஜி பூச்சாண்டி காட்டி, அவதூறு பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதை நாட்டுமக்கள் நிச்சயம் ஏற்க மாட்டார்கள்.

2004 முதல் 2014 வரை அன்னை சோனியா காந்தியின் வழிகாட்டுதலோடு, டாக்டர் மன்மோகன்சிங் தலைமையில் பத்தாண்டு காலம் பல்வேறு துறைகளில் வரலாறு காணாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியதை எவரும் மறுத்திட இயலாது. ஆனால், நாட்டுமக்கள் மாற்றம் வேண்டுமென்று விரும்பியதால் நரேந்திரமோடி தலைமையில் ஆட்சி, பொய்ப் பிரச்சார - மாயாஜால வேலைகளால் அமைந்திருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் பா.ஜ.க.வின் சாயம் வெளுத்துவருவதை நாட்டுமக்கள், குறிப்பாக வாக்களித்து ஆதரித்த இளைஞர்கள் கவனித்து வருகிறார்கள். இந்நிலையில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசின் சாதனைகளை நினைவுகூர்ந்து ஆதரவு தரவேண்டிய பொறுப்பு தமிழக மக்களுக்கு இருக்கிறது.

## அராஜக அ.தி.மு.க. ஆட்சியை ஏன் அகற்ற வேண்டும்?

கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்து தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்த ஜெயலலிதா, கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றவில்லை. இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவேன் என்று பலமுறை கூறினார். மத்தியப் புள்ளியல்துறை அறிக்கையின்படி மாநிலங்களுக்கான வளர்ச்சி வரிசையில் ஐந்தாவது இடத்தில் இருந்த தமிழகம் 18வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது.

தமிழகத்தில் மின்வெட்டு கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலை, ஊழலை நோக்கமாகக்கொண்ட அணுகுமுறை, முதலமைச்சரை எவரும் சந்திக்க முடியாதநிலை போன்ற காரணங்களால், தொழில் முனைவோர் யாரும் தொழில் தொடங்க ஆர்வம் காட்டவில்லை. துறைமுகம், விமானப் போக்குவரத்து, நெடுஞ்சாலை வசதிகள் இருந்தும், தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. ஆண்டுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள் படித்து வெளிவருகின்ற மாநிலத்தில் ஏன் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை? இதற்கு யார் காரணம்?

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி 2009-2010இல் 20.93 சதவிகிதமாக இருந்தது. 2013-14இல் அது 1.61 சதவிகிதமாகக் குறைந்தது. அதேபோல, தமிழக உற்பத்தி வளர்ச்சி 2009-10இல் 29.18 சதவிகிதமாக இருந்தது, அது 2012-13இல் 1.31 சதவிகிதமாகக் குறைந்தது. இதனால்தான் தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தற்போது 94 லட்சம் படித்த பட்டதாரிகள் பதிவுசெய்து காத்திருக்கிற அவலம் ஏற்பட்டுள்ளது.

இந்த அவலத்தை மூடிமறைக்கவே ரூ.100 கோடி செலவில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை ஜெயலலிதா நடத்தினார். கடந்த நான்காண்டுகளாகத் தூங்கிவிட்டு தேர்தல் நெருங்குகிற நேரத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்துவது அவசியம்தானா? மக்கள் வரிப் பணத்தை விரயமாக்கலாமா?

**தமிழகத்தின் நிதிநிலைமை :**

தமிழகத்தின் இன்றைய நிதி நிலைமை அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதை எவறும் மறுக்க முடியாது. இதை இல்லை என்று எவரும் சாதித்துவிட முடியாது. 2015-16ஆம் ஆண்டிற்கான தமிழகத்தின் மொத்த பட்ஜெட் தொகை ரூபாய் 1 லட்சத்தது 47ஆயிரத்து 297 கோடி. இதில் இலவசங்களுக்கும், மானியங்களுக்கும் வழங்கப்படுகிற தொகை ரூபாய் 59ஆயிரத்து 185 கோடி. அரசு ஊழியர்களுக்கு ஊதியம், ஓய்வூதியம் ரூபாய் 59 ஆயிரத்து 882 கோடி. தமிழக அரசின் மொத்த வரி வருவாய் ரூபாய் 29 ஆயிரத்து 672 கோடி. தமிழகத்தின் அவலத்தைப் பார்த்தீர்களா?

**தமிழக அரசின் மொத்தக் கடன் :**

தமிழக அரசின் நேரடிக் கடன் ரூபாய் 2 லட்சத்து 7 ஆயிரம் கோடி. பொதுத்துறை நிறுவனங்களின் கடன் ரூபாய் 2 லட்சம் கோடி. மொத்தக் கடன் ரூபாய் 4 லட்சத்தது 7 ஆயிரம் கோடி. தமிழக அரசின் நேரடிக் கடனுக்கு வட்டி ரூபாய் 17 ஆயிரத்து 446 கோடி. ஆண்டுக்குச் செலுத்தவேண்டிய மொத்த வட்டித்தொகை ரூபாய் 35 ஆயிரத்து 391 கோடி. திவாலாகும் நிலையில் இருக்கிற தமிழக அரசின் நிதி நிலைமையைப் பார்த்தீர்களா? இதற்கு ஜெயலலிதாதான் பொறுப்பேற்க வேண்டும்.

2011-12இல் தமிழக அரசின் மொத்தக் கடன் ரூபாய் 1 லட்சத்து 14 ஆயிரத்து 470 ஆக இருந்தது. அது 2015-16இல் ரூபாய் 1 லட்சத்து 95 ஆயிரத்து 290 கோடி என்று உயர்ந்திருக்கிறது. இத்தகைய கடன் உயர்வுதான் ஜெயலலிதாவின் ஐந்தாண்டு சாதனையா? தமிழக மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டிய நேரம் வந்துவிட்டது.

தமிழக அரசின் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன் நிலுவை 2013-14இல் ரூபாய் 73 ஆயிரத்து 541 கோடி. அந்தக் கடன் 2012-13இல் ரூபாய் 58 ஆயிரத்து 883 கோடியாகத்தான் இருந்தது. 2013-14இல் ஒரே ஆண்டில் கடன் சுமை ரூபாய் 14 ஆயிரத்து 631 கோடி. ஏன் உயர்ந்தது? எதற்காக உயர்ந்தது? தமிழக மின்வாரிய வல்லுநர்களின் ஆலோசனையை மீறி தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்ததால்தான் ரூபாய் 15 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டது. இதை ஜெயலலிதாவால் மறுக்க முடியுமா? இதனால்தான் மின்சார வாரியத்தின் கடன்பெறும் தகுதியைத் தர நிர்ணய அமைப்பு நான்காம் இடத்தில் தள்ளிவைத்துள்ளது. இந்த அவலநிலை தமிழகத்தில் நீடிக்கலாமா?

**வீழ்ந்து வரும் வேளாண்மை :**

தமிழ்நாட்டில் 56 சதவிகித மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், தமிழகத்தில் மொத்த உற்பத்தியில் 10 முதல் 13 சதவிகிதம் மட்டுமே வேளாண்மை துறைமூலம் உற்பத்தியாகிறது. அதாவது, மாநிலத்தின் மொத்த வருவாயில் 13 சதவிகிதம் மட்டுமே கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கிறது. இதனால்தான் கிராமப்புறங்களில் வசிக்கின்ற மக்களின் வருவாய் மிகவும் குறைவாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டின் மொத்த உணவு தானிய தேவை 125 லட்சம் டன். ஆனால், உற்பத்தியாவதோ 80 லட்சம் டன். ஏறத்தாழ 45 லட்சம் டன் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டின் தேவையைச் சந்திக்க வெளி மாநிலங்களிலிருந்து வாங்கவேண்டிய அவலநிலையில் இருந்து வருகிறோம்.

**தலித்துகளுக்கு எதிரான தாக்குதல் :**

தமிழகத்தில் தலித்துகளுக்கு எதிரான தாக்குதல்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாகத் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் புள்ளிவிவரங்களோடு வெளியிட்டுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டில் வடஇந்திய மாநிலங்களைவிட, தமிழகத்தில் தலித்துகள் அதிக அளவில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 2013இல் தமிழகத்தில் 28 ஆக இருந்த தலித் படுகொலைகள் 2014இல் 72ஆக உயர்ந்திருக்கிறது. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறித்துவருவதில் அ.இ.அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு இணையான இன்னொரு ஆட்சி இந்தியாவில் இல்லை.

**பூரண மதுவிலக்கே நமது நோக்கம் :**

நமது நாடு சுதந்திரம் பெறுவதற்குமுன்பே 1937இல் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக ராஜாஜி பதவி வகித்தபோது மதுவிலக்கை அமல்படுத்திய பெருமை காங்கிரஸ் கட்சிக்கு உண்டு. விடுதலைப் போராட்டக் காலத்திலேயே காந்தியடிகளால் மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டது மதுவிலக்கு கொள்கைக்குத்தான். 1937இலிருந்து 1967வரை தமிழகத்தில் மதுவிலக்கை தொடர்ந்து நடைமுறைப்படுத்திய பெருமையும் காங்கிரஸ் ஆட்சிக்கு உண்டு.

1946இல் ஓமந்தூரார் முதல்வராக இருந்தபோது, சென்னை மாகாணத்தின் வருவாய் ரூ.25 கோடியாக மட்டுமே இருந்தது. குறைந்த வருவாய் உள்ளநிலையில் மதுவிலக்கை ஓமந்தூரார் அமல்படுத்தியதைப்போல, இன்று தமிழகத்தின் வருவாய் ரூபாய் 1 லட்சத்து 47 ஆயிரம் கோடியாக இருக்கிறபோது மதுவிலக்கை அமல்படுத்த ஜெயலலிதா முன்வராதது ஏன்? மதுவிலக்குக்கு எதிராக ஜெயலலிதா இருப்பதன் மர்மம் என்ன? அதற்குப் பின்னாலே இருக்கிற ஆதாயம் என்ன? நாட்டுமக்கள் கேட்கிறார்கள், ஜெயலலிதா பதில் கூறுவாரா?

**தாழ்ந்த தமிழகமாக மாறியது ஏன்?**

இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன். அதற்காக ஒரு நாளில் 24 மணிநேரத்தில் 18 மணி நேரம் உழைப்பேன் என்று கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது சூளுரைத்து, மக்களை நம்பவைத்து, அரியணையில் அமர்ந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியின் அவலமான நிதி நிலைமைதான் இங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தாங்கமுடியாத கடன் சுமையோடு இருக்கிற அ.தி.மு.க. ஆட்சியாளர்களை நம்பி உலக முதலீட்டாளர்கள் அல்ல, இந்திய முதலீட்டாளர்கள் அல்ல, தமிழக முதலீட்டாளர்கள்கூட முதலீடுசெய்ய முன்வருவார்களா?

நாட்டோரே! நல்லோரே!! நிமிர்ந்து நடைபோடவேண்டிய தமிழகம் தாழ்நிலைக்குச் சென்றுகொண்டிருப்பதைத் தடுத்துநிறுத்த வேண்டாமா? வளர்ச்சிப் பாதையில் தமிழகம் பயணம் செய்யவேண்டாமா? மதுவிலக்கை அமல்செய்து வளமான தமிழகத்தை உருவாக்க வேண்டாமா?

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்காலத்தில் நடத்திக்காட்டப்பட்ட பொற்கால ஆட்சியைப்போல மீண்டும் ஒருஆட்சி அமையவேண்டாமா? அத்தகைய ஆட்சி தமிழகத்தில் அமையவேண்டும் என்பதே காங்கிரசின் குறிக்கோள். இதற்காகக் கடந்த 15 மாதங்களாகத் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் பல்வேறு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், சிறைவாசங்கள் எனப் பல்வேறு முனைகளில் அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராகப் பலமுனை தாக்குதல்கள் தொடுக்கப்பட்டது. இதன் விளைவாக மக்கள் விரோத ஜெயலலிதா ஆட்சி அகற்றப்படுகிற சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், நடைபெறவுள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்று கலைஞர் தலைமையில் அமையவிருக்கிற மக்கள் நலன்சார்ந்த ஆட்சியின்மூலமே தமிழகம் இழந்த பெருமையை மீட்கமுடியும் என்று காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து வருபவர்கள் அன்னை சோனியா காந்தியும், இளந்தலைவர் ராகுல்காந்தியும் என்பதை நாட்டுமக்கள் புரிந்துகொண்டு காங்கிரசை ஆதரிக்க முடிவு செய்திருக்கிறார்கள். கடந்த காலத்தில், 2004 இல் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு அமைய அன்னை சோனியா காந்தி எடுத்த முயற்சிகளுக்கு முதலில் ஆதரவு குரல் கொடுத்தவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர். 2004இல் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி ஏற்பட்டு, தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் வெற்றிபெற முடிந்தது. 2006 சட்டமன்றத் தேர்தலிலும் அதே கூட்டணி வெற்றிபெற்று தி.மு.க. தலைமையில் தமிழகத்தில் ஆட்சி அமைந்தது.

மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நிலையான ஆட்சியை வழங்க தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி மிகச்சிறப்பாகச் செயல்பட்டது. 2013இல் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெறியேறினாலும், 2016இல் மீண்டும் கூட்டணியில் இணைந்து தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற மகத்தான பயணம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழக மக்கள் பேராதரவோடு 2016 சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் அராஜக அ.தி.மு.க. ஆட்சி அகற்றப்பட்டு, மீண்டும் மக்கள் நலன்சார்ந்த நல்லாட்சி தி.மு.க. தலைமையில் அமைந்திட ஆதரவு கேட்பதே காங்கிரஸ் கட்சியின் தலையாய நோக்கமாகும். தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை ஆதரிப்பதன் மூலமாகத் தாழ்ந்த தமிழகம் தலைநிமிர்ந்து பீடுநடைபோடுவதற்கான பயணம் தொடங்கிவிட்டது. மாற்றத்தை வழங்க மக்கள் தயாராகிவிட்டார்கள். மாற்றத்தை வழங்க முடியாதவர்களை மக்கள் புறக்கணித்து வருகிறார்கள். எனவே, மாற்றம் உறுதியாகிவிட்டது. தி.மு.க. தலைமையில் மக்கள் நலன்சார்ந்த நல்லாட்சி காங்கிரஸ் ஆதரவோடு அமைந்திட தமிழக மக்கள் ஆதரிப்பார்கள் என்று உறுதியாகக் காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

**தமிழகத்தில் ஊழலற்ற நல்லாட்சி அமைந்து...**
**மதுவை ஒழித்து... மக்கள் நலன்காக்க ஆதரவு தாரீர்!**

**காங்கிரசின் சின்னம் கை சின்னம்!**
**வாக்குறுதிகள் கைகூட வாக்களிப்பீர் கை சின்னம்!**

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை - 2016

## சிறப்பு அம்சங்கள்

**1. ஊழலை ஒழிப்போம் ; நல்லாட்சி அமைப்போம்**

**2. லோக் அயுக்தா அமைப்போம்**

**3. பூரண மதுவிலக்கை அமல்படுத்துவோம்**

4. **விவசாயக் கொள்கையை விரிவாக வகுப்போம்**

* விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்க டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையை அமல்படுத்துவோம். இதன்படி நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு உற்பத்தி செலவைவிட 50 சதவிகிதம் அதிக விலை கிடைக்க உறுதி செய்யப்படும்.

* உழவர் சந்தைகளை விரிவுபடுத்துவோம்

* சொட்டு நீர் பாசனத்திற்கு 100 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

* விவசாயிகள் உற்பத்தி செய்கிற காய்கறிகள், கனிகள் ஆகியவற்றிற்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும். விவசாயிகளுக்குக் குளிர்பதனக் கிடங்குகள் வசதி வட்டார அளவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* காய்கறிகள், கனிகள் ஆகியவற்றிலிருந்து மதிப்புக்கூட்டுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கிராமப்புறங்களில் உருவாக்கப்படும்.

* மூன்றுபோக சாகுபடி செய்யும் விளைநிலங்கள் வீட்டுமனைகளாகக் கிராமப்புறங்களில் மாறுவது தடைசெய்ய முயற்சி செய்வோம்.

* கடும் வறட்சி, வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டட பாதிப்பு காரணங்களால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற அனைத்துக் கடன்களும் ரத்து ஆவன செய்வோம்.

* தேசிய வேளாண் பயிர் காப்பீடுத் திட்டத்திற்குத் தனிநபர் மற்றும் தனிநிலம் பாதிப்பிற்கு இழப்பீடு கிடைக்கும் வகையில் திட்டத்தை மாற்றியமைக்க ஆவன செய்யப்படும்.

* அ.தி.மு.க ஆட்சியில் கரும்பு விவசாயிகள் சந்தித்த இன்னல்களைப் போக்கும் வகையில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,500, குவிண்டால் நெல் ஒன்றுக்கு ரூ.2,000 என விலை நிர்ணயிக்கப்படும்.

* புதிய மின் திட்டங்களை வகுத்து வேளாண்மைக்கு இலவசமாக மின்சாரம் தடையின்றி நாள்முழுவதும் கிடைக்க உறுதி செய்யப்படும். பயிர்களின் நீர்ப்பாசன முறைக்கேற்ப மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

* சிட்டா, அடங்கல் கேட்டு விவசாயிகளை அலையவிடாமல், விவசாயக் கடன் அட்டை (credit card) ஆதாரமாகக்கொண்டு வேளாண் நகைக்கடன் 4 சதவிகித வட்டியில் வழங்க ஆவன செய்யப்படும். விவசாயிகளுக்கு மின் இணைப்பு உடனடியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனாகப் பயிர்கடன் வழங்க ஆவன செய்யப்படும்.

* கிராமப்புறங்களில் நீர்ஆதாரங்களைச் செழுமைப்படுத்த பண்ணைக்குட்டைகள் அமைக்க பாடுபடுவோம்.

* தேங்காய் கொப்பரைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.
* சூரிய சக்தி மின்சாரத்தை விவசாயிகள் பயன்படுத்த 100 சதவிகித மானியம் வழங்க செய்யப்படும்.
* தமிழக மக்களின் அடையாளச் சின்னமாகக் கருதப்படுகிற பனைமரங்கள் பாதுகாக்கப்படும்.
* விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான தினக்கூலி வழங்குவது உறுதிசெய்யப்படும்.
* வனவிலங்குகளிடமிருந்து பயிர்கள் பாதுகாக்கப்படும்.
* மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி, விவசாயப் பணிகள் பாதிக்காத காலங்களில் செயல்படுத்தப்படும். விவசாய வேலையோடு இணைக்க முயற்சி செய்வோம்.
* அறுபது வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மாதம் ரூ.2,000 ஓய்வூதியம் வழங்கப்படும்.
* ஏரி, குளம், குட்டைகள் தூர்வாரப்படும். அங்குள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துச்சென்று அவர்களது நிலத்தில் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.
* இயற்கை விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. **புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவோம்**

* Pre K.G முதல் P.G வரை அனைத்து மாணவர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் இலவசக் கல்வி வழங்கப்படும்.
* கல்வி வணிகமயமாக்குவதைத் தடுக்கப்படும்.
* தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* மாவட்டந்தோறும் நவோதயா பள்ளிகள் தொடங்கப்படும்.
* கல்வித்துறைக்கான ஒதுக்கீடு உயர்த்தப்படும்.
* பிற்படுத்தப்பட்ட, தலித் மாணவர்கள் தங்கிப்படிக்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகள் முழுமையாக செய்துத்தரப்படும். தரமான உணவு வழங்கப்படும்.
* மொழி சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில் அவர்களது தேவைகளுக்கு ஏற்ப வகுப்புகள் தொடங்கப்படும்.
* தனியார் பள்ளிகளில் அதிகக் கட்டணம், நன்கொடை வசூலிப்பதைத் தடைசெய்யப்படும்.
* உயர் கல்வியை உலகத்தரத்திற்கு ஈடாக அமைக்கப்படும்.
* காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2006இல் கொண்டுவந்த கல்வி உரிமைச் சட்டத்தின் பயன்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். தனியார் பள்ளிகளில் ஏழை எளிய மாணவர்களுக்கான 25 சதவிகிதம் ஒதுக்கீடு தமிழகத்தில் முழுமையாக நிறைவேற்றப்படுவதில்லை. அதை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
* தமிழகத்தில் சீரழிந்து வரும் கல்வித்துறை சீரமைக்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் தரமான நூலகங்கள் அமைக்கப்படும். மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.
* ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

* I.I.T., I.I.M. போன்ற மத்திய கல்வி நிறுவனங்களுக்கு ஈடாகத் தமிழகத்தில் தரம் உயர்ந்த கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படும்.
* தமிழக மாணவர்கள் அனைவரும் ஒரு கட்டாயப் பாடமாகத் தமிழ்மொழியைக் கற்க அரசாணை பிறப்பிக்கப்படும்.
* விளையாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.
* மதிய உணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற முட்டை, வாழைப்பழத்துடன் பாலும் சேர்த்து வழங்கப்படும்.

## 6. தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவோம்

* கடந்த சில வருடங்களாக அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாகத் தொழில் வளர்ச்சி மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில் இருந்து தமிழகத்தை மீட்டு தொழில் வளர்ச்சி ஏற்பட புதிய தொழில் கொள்கை வகுக்கப்படும்.
* தொழில் தொடங்க ஒற்றைச்சாரள முறையில் அனுமதி வழங்கப்படும். சிறு, குறு தொழில்கள் சந்திக்கும் பிரச்சினைகளைப் போக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 7. மின் உற்பத்தியைப் பெருக்குவோம்

* தமிழகத்தில் தொடர்ந்து மின் பற்றாக்குறை நிலவி வருவதால், தொழில் வளர்ச்சி பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் உற்பத்தி செய்ய முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படும். மின் உற்பத்தி செய்ய புதிய மின் திட்டங்கள் தொடங்கப்படும். காற்றாலைகள், சூரியசக்தி வாயிலாக மின் உற்பத்தி செய்ய திட்டங்கள் ஊக்கப்படுத்தப்படும். குறிப்பாக, ஓராண்டில் ஒன்பது மாதத்தில் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள சூரிய மின்சக்திக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 8. அரசு நிர்வாகத்தில் சீர்திருத்தம்

* தமிழகத்தில் சில ஆண்டுகளாக அரசு நிர்வாகத்தில் ஆளுங்கட்சியினரின் தலையீட்டின் காரணமாக நிர்வாகம் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வருகிறது. அரசு நிர்வாகம் வெளிப்படைத்தன்மையோடு செயல்படுவதற்குச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும்.
* பொதுமக்களின் மனுக்கள்மீது 15 தினங்களுக்குள் பதில் அளிப்பது கட்டாயமாக்கப்படும். அரசு சேவைகள் உரிய காலத்தில் கிடைக்க சேவை உரிமைச் சட்டம் நிறைவேற்றப்படும்.

## 9. உள்ளாட்சியில் நல்லாட்சி அமைத்திடுவோம்

* முன்னாள் பாரத பிரதமர் ராஜிவ்காந்தி கொண்டுவந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் செயலுக்குக் கொண்டுவர தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள் அதிக அதிகாரமோ, நிதி ஒதுக்கீடோ இல்லாமல் அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இது மக்கள் பங்கேற்கும் ஜனநாயகத்திற்கு விரோதமாக உள்ளது.
* தன்னாட்சியுடன் கூடிய பஞ்சாயத்து அமைப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது உள்ள ஆளும்கட்சி கட்டுப்பாட்டில் இருந்து உள்ளாட்சி அமைப்புகள் விடுவிக்கப்பட்டு சுதந்திரமாகச் செயல்பட வழிவகுக்கப்படும்.

* உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் சுதந்திரமாகச் செயல்பட தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சீரமைக்கப்படும்.

* பெண்களுக்கான இடஒதுக்கீடு 33 சதவிகித்தில் இருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

### 10. இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

* தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபிறகு இயற்கை வளங்கள் தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டு வருகிறது. இதை ஐ.ஏ.எஸ். உயர் அதிகாரி சகாயம் தலைமையிலான குழு உறுதி செய்துள்ளது. இந்நிலையிலிருந்து மீட்டெடுக்க இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதை வெளிப்படைத்தன்மையான புதிய கொள்கை வகுக்கப்படும்.

### 11. நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்போம்

* காவிரி, முல்லை பெரியாறு, பாலாறு ஆகியவற்றில் நமது உரிமைகளைப் பறிக்கிற வகையில் அண்டை மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இந்நிலையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட தமிழக காங்கிரஸ் கட்சி அனைத்து நிலைகளிலும் குரல் கொடுத்து போராடும்.

### 12. சமூக நீதியைப் பாதுகாப்போம்

* மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் வகையில் மத்திய காங்கிரஸ் அரசு 2006இல் கொண்டுவந்த சட்டத்தின் பயன்களை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* தனியார் துறையில் இடஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்யப்படும்.

### 13. பொது சுகாதாரக் கொள்கை

* பொது சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடுகள் உயர்த்தப்படும். மருத்துவமனைகளில் உள்ள காலி பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் அதிகரிக்கப்படும்.

### 14. பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைப்போம்

* குடும்ப அட்டை கோருபவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும். ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதந்தோறும் வழங்கவேண்டிய அனைத்துப் பொருள்களும் ஒரே நாளில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

### 15. அரசு ஊழியர் நலன்

* மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ஊதியத்தைத் தமிழக அரசு ஊழியர்களுக்குக் குறைபாடு இல்லாமல் ஊதியம் வழங்கப்படும். மத்திய அரசுக்கு இணையான சலுகைகள் தமிழக அரசு ஊழியர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யப்படும்.

* சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள், சமையல் உதவியாளர்கள், குடிநீர் தேக்கத்தொட்டி பணியாளர்கள், அரசுத்துறைகளில் பணிபுரியும் தொகுப்பூதிய, குறைந்த காலமுறை ஊதிய

பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு அரசு ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.

* அரசு ஊழியர் நல வாரியம், காவலர் நல வாரியம் அமைக்கப்படும்.

## 16. சிறுபான்மையினர் நலன் காக்கப்படும்

* சிறுபான்மையினரின் மதம் சார்ந்த சொத்துக்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும், சீரமைக்கவும் உரிய உதவிகள் செய்துதரப்படும்.
* சிறுபான்மையினரின் மத ரீதியான ஆன்மிகப் பயணங்களுக்கு உரிய உதவிகள் செய்துதரப்படும்.

## 17. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் நலன்

* தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்குச் சட்டப்படி ஒதுக்கவேண்டிய பின்னடைவு காலி பணியிடங்களை (Backlog of vacancies) சிறப்புத் தேர்வு மூலமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
* இந்தியாவில் 12 மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் நல ஆணையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அதேபோல தமிழ்நாட்டிலும் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்குத் தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்க ஆவன செய்யப்படும்.
* ஆங்கிலேயர் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலம் சட்டவிரோதமாக மற்ற சமூகத்தினரால் அபகரிக்கப்பட்டு உடமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதை ரத்துசெய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பை வழங்க மானியங்களை வழங்கும் தாட்கோ நிறுவனம் கடனையும் சேர்த்து வழங்க ‘தாட்கோ வங்கி’ தொடங்க ஆவன செய்யப்படும்.
* தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு நிதிநிலை அறிக்கையில் எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ அந்த நிதியை வேறு எந்த வகையிலும் செலவழித்தால் தண்டனைக்குரிய குற்றம் என்று ஆந்திர மாநிலக் காங்கிரஸ் அரசு ஏற்கெனவே சட்டம் நிறைவேற்றியது. அதேபோல தமிழகத்திலும் சட்டம் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* பழங்குடியினர் உரிமைகளைக் காக்க, மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு 2006இல் நிறைவேற்றிய பழங்குடியினர் வன உரிமைச்சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்கிற தலித் மக்கள் சுடுகாட்டிற்குச் செல்கிற பாதை அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பகுதிகளைச் சேரி, காலனி என்று இழிவாகத் தனிமைப்படுத்தி அழைப்பதைச் சட்டப்படி தடைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 18. மீனவர் பிரச்சினைகளும் தீர்வுகளும்

* தமிழகத்தில் உள்ள மீனவர் சமுதாயத்தினரைப் பழங்குடியினரின் பட்டியலில் சேர்க்க ஆவன செய்யப்படும்.

* மீன்பிடி தடை காலத்தில் ஒரு நாளைக்கு ரூ.150 வீதம் 40 நாள்களுக்கு ரூ.6,500 வழங்கப்படும்.
* ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கு ஏற்ற வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மூக்கையூர் மீன்பிடி துறைமுகம் உருவாக்கப்படும். குளச்சல் துறைமுகத்தை இணையம் பகுதிக்குக் கொண்டுசெல்ல பா.ஜ.க.வினர் முயற்சி செய்வதை மீனவச் சமுதாயத்தினர் கடுமையாக எதிர்க்கின்றனர். திட்டமிட்டபடி குளச்சல் வர்த்தகத் துறைமுகம் அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 19. தொழிலாளர் நலன்

* அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.15,000 கிடைக்க ஆவன செய்யப்படும்.
* கல் உடைக்கும் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்படும்.
* தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் சீர்திருத்தம் செய்யப்படும்.
* உப்பள தொழிலாளர்களுக்கு மழை காலங்களில் மாதம் ரூ.3,000 வாழ்வூதியமாகவும், வீடு அற்றோருக்கு இலவச வீடுகளும் நியாயமான கூலி கிடைக்க ஆவன செய்யப்படும்.

## 20. அமைப்புச்சாரா தொழிலாளர் நலன்

* அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கென அமைக்கப்பட்ட 17 நல வாரியங்களும் ஜெயலலிதா அரசால் முடக்கப்பட்டு செயலிழந்த நிலையில் உள்ளன. இதைச் செயல்படுத்த ஆவன செய்யபப்படும்.
* விபத்தில் இறக்கும் அனைத்துத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் ரூ.5 லட்சம் நஷ்டஈடு வழங்கப்படும். விபத்தில் சிக்கியவர்களுக்கு இலவச சிகிச்சை வழங்கப்படும்.
* ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்தும் வகையில் சொந்த வாகனம் வாங்க குறைந்த வட்டியில் கடன் வழங்க ஆவன செய்யப்படும். வாடகை முறைகள் ஒழுங்குபடுத்தப்படும்.

## 21. நெசவாளர் நலன்

* விவசாயிகளுக்கு வழங்குவதைப்போல நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.
* நெசவாளர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்க கைத்தறி சந்தை அமைக்கப்படும்.
* நெசவாளர்கள் பயன்பட நெசவாளர் கூட்டுறவு வங்கி அமைக்கப்படும்.

## 22. மாற்றுத்திறனாளிகள் நலன்

* மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் சீரமைக்கப்படும்.
* மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 3 சதவிகித இடஒதுக்கீடு அமல்படுத்த ஆவன செய்யப்படும்.
* வேலைவாய்ப்பு இல்லாத மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர தொகை ரூ.1,500 வழங்கப்படும்.

### 23. சிறுபான்மையினர் நலன்

* பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 3.5 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்குவதில் நிலவுகிற குறைபாடுகள் களையப்படும்.
* சிறுபான்மையினரின் மதம் சார்ந்த சொத்துக்கள் பாதுகாக்கப்படும்.

### 24. முதியோர் நலன்

* முதியோர் உதவித்தொகை குறைந்தபட்ச ரூ.2,000ஆக உயர்த்தப்படும். அனைத்து முதியோர்களுக்கும் பேருந்தில் இலவசக் கட்டணச் சலுகை வழங்கப்படும். முதியோர் மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

### 25. மகளிர் நலன்

* நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்குகின்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தம் செய்யப்படும்.

### 26. திருநங்கையர் நலன்

* திருநங்கையருக்கு அரசுப் பணிகளில் 2 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும்.

### 27. இந்துசமய அறநிலையத் துறை

* திருக்கோயில் சொத்துக்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

### 28. கூவம் சீரமைப்புத் திட்டம்

* கூவம் சீரமைப்புத் திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுக்கப்படும்.

### 29. மெட்ரோ ரெயில் திட்டத்தை விரிவுபடுத்துவோம்

* காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஆட்சிசெய்த காலத்தில் ரூபாய் 14 ஆயிரம் கோடி முதலீட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.
* மெட்ரோ ரயில் திட்டத்தை கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களுக்கு விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 30. மரபு சாரா எரிசக்தியை ஊக்கப்படுத்துவோம்

* சூரிய மின்சக்தி உற்பத்தியை ஊக்குவிக்க தெளிவான கொள்கை வகுக்கப்படும். காற்றாலை மின் உற்பத்தியாளருக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 31. காஞ்சிபுரம் பட்டுப் பூங்கா

* கடந்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் காஞ்சிபுரத்தை அடுத்த கீழ்க்கதிர்பூர் கிராமத்தில் 75 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 266 கோடி மதிப்பில் பட்டுப்பூங்கா அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பூங்கா விரைவில் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 32. நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு மணி மண்டபம்

* நடிகர் திலகம் சிவாஜி பிறந்தநாளான அக்டோபர் 1ஆம் தேதியைக் கலை எழுச்சி நாளாகக் கொண்டாட ஆவன செய்யப்படும். சிவாஜிக்கு மணி மண்டபம் கட்டப்படும்.

* சென்னைக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள சிவாஜி சிலையை நீதிமன்ற ஆணையின்படி காந்தியடிகள் சிலைக்கும் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கும் இடையில் அமைக்க ஆவன செய்யப்படும்.

### 33. சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்புதல்

* ஆந்திரம், மகாராஷ்டிரா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. ஆனால், தமிழகத்தில் சட்டமன்றம் துதிபாடும் மன்றமாக ஜெயலலிதாவால் மாற்றப்பட்டதால் சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்ப அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் பல தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.
* கடந்த காலங்களில் தமிழக சட்டமன்ற விவாதங்களில் கரைபுரண்டோடிய கருத்து மோதல்களை நாளேடுகளில் படித்து அறிந்ததைப்போல, தொலைக்காட்சிகளின் மூலமாக நேரடி ஒளிபரப்பு செய்து ஜனநாயகத்தைத் தழைக்கச்செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 34. தமிழ் வளர்ச்சி

* தமிழகத்தில் அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் தமிழை ஒரு பாடமாக மாணவர்கள் கட்டாயம் கற்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* நீதிமன்றங்களில் வழக்காடு மொழியாகத் தமிழ்மொழியைக் கொண்டுவரப்படும்.
* வரலாற்றுச் சிறப்புமிக்க மாமல்லபுரத்தில் சிற்பக் கலை வளர்சியை மேம்படுத்தும் வகையில் சிற்பக் கலை பூங்கா அமைக்கப்படும்.
* உலகத்தில் சிறந்த பல்கலைக்கழகமாக 380 ஆண்டுகளாக இயங்கிவரும் ஹார்வேர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு என்று ஓர் இருக்கை (Chair) உருவாக்கப்படும்.

### 35. நதிகளை இணைப்போம்

* விவசாயத்திற்கு நீர்ப்பாசனத்தை வழங்குகின்ற வகையில் பல்வேறு திட்டங்கள் தொடங்க ஆவன செய்யப்படும். அதில் குறிப்பாக, அத்திக்கடவு - அவிநாசி திட்டம், செண்பகவல்லி அருவி நீர்த்தேக்கத் திட்டம், எலுமிச்சை ஆறு அணை திட்டம், நொய்யல் நதி மீட்பு திட்டம், தாமிரபரணி நீர் திட்டம், தாமிரபரணி, நம்பியாறு, கருமேனியாறு, வெள்ளைநீர் கால்வாய் திட்டம், பம்பா, அச்சன்கோயில் வைப்பாறு இணைப்புத் திட்டம் ஆகியவற்றிற்குக் காலவரையறை நிர்ணயம் செய்து நிறைவேற்றப்படும்.

### 36. வேலைவாய்ப்பைப் பெருக்குவோம்

* கடந்த ஆகஸ்ட் 2015 வரை தமிழகம் முழுவதும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 92 லட்சத்தைத் தாண்டியிருக்கிறது. 2011இல் 67 லட்சமாக இருந்தது, தற்போது 92 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இதுதான் அ.தி.மு.க. ஆட்சியின் சாதனை.
* வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்த அனைவருக்கும் ஐந்தாண்டுகளுக்குள் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 37. இலங்கைத் தமிழர் உரிமை காத்திடுவோம்

* முன்னாள் பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தி உடன்படிக்கையின் அடிப்படையில் உருவான 13வது அரசமைப்புச் சட்டத்திருத்தப்படி இலங்கைத் தமிழர்களுக்குச் சமஉரிமை, சமவாய்ப்பு கிடைக்க ஆவன செய்வோம்.

* இலங்கைத் தமிழர்களுக்குக் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு நிறைவேற்றிய பல்வேறு நலத் திட்டடங்கள் மீண்டும் தொடர ஆவன செய்வோம்.

### 38. தகவல் அறியும் ஆணையத்தைச் சீரமைப்போம்

* அரசு நிர்வாகம் குறித்து அனைத்துத் தகவல்களையும் ஒவ்வொரு குடிமகனும் அறிந்துகொள்ளவே தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் அமைக்கப்பட்ட தமிழக தகவல் அறியும் ஆணையம் அ.தி.மு.க. அரசின் கைப்பாவையாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையைப் போக்கி தகவல் அறியும் ஆணையத்தைச் சீரமைக்க ஆவன செய்வோம்.

### 39. சேதுசமுத்திரத் திட்டம்

* தமிழக மக்களின் நீண்டகால கனவான சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்வோம்.
* அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் முடக்கி வைக்கப்பட்டுள்ள சென்னைத் துறைமுகம் -மதுரவாயல் 19 கி.மீ. உயர்மட்டச் சாலைத் திட்டத்தை மீண்டும் தொடங்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 40. இயற்கை பேரிடர் மேலாண்மையை உறுதிசெய்வோம்

* காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2005இல் நிறைவேற்றிய தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைக்க அ.தி.மு.க. அரசு தொடர்ந்து காலதாமதம் செய்தது.
* பிறகு, மாநிலப் பேரிடர் மேலாண்மை அமைக்கப்பட்டாலும் அது செயலற்ற நிலையில் முடக்கப்பட்டு வந்தது. இந்நிலையிலிருந்து மாநிலப் பேரிடர் ஆணையத்தைச் செயலுக்குக் கொண்டுவந்து மாவட்ட, வட்டாரந்தோறும் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பிரிவுகளைத் தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 41. கூட்டுறவு தேர்தல்

* கூட்டுறவு தேர்தல்கள் பாரபட்சமுறையில் நேர்மையாக நடக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 42. பொது நூலகத்துறை

* அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்த தமிழ்நாடு நூலகத்துறை கடந்த சில வருடங்களாகச் சீரழிந்து செயல்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. இதைச் சீரமைத்து செம்மையாகச் செயல்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
* அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைச் செயல்படவிடாமல் முடக்கப்பட்ட நிலையிலிருந்து அதனை மீட்டு, சர்வதேச தரத்தில் சீரமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 43. தமிழகத்தில் மீண்டும் மேலவை

* தமிழகத்தில் மீண்டும் மேலவை கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க ஆவன செய்வோம். இதில் திருநங்கைகள் மற்றும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கிப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

விரிவான தேர்தல் அறிக்கையை அடுத்து வரும் பக்கங்களில் காண்போம்

# தமிழக சட்டமன்றத் தேர்தல் - 2016

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை

## 1. ஊழலை ஒழிப்போம் - நல்லாட்சி அமைப்போம்!

நேர்மை, எளிமை, தூய்மை ஆகியவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் ஆட்சி அமைக்கப்பட்டு பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டு வந்தன. சமீபகாலமாக அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவரித்தாடி வருகிறது. ஆளுங்கட்சியினர் ஊழலைத் தொழிலாக வளர்த்து வருகிறார்கள். அவர்களது வளர்ச்சியே ஊழல்மயமான வளர்ச்சியாக மாறிவருவது மிகுந்த வேதனையைத் தருகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சர் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டு, பதவியை இழக்கவேண்டிய அவலநிலை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ஏற்பட்டுள்ளது. இதற்காகத் தமிழக மக்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. முதற்கோணல் முற்றும் கோணல் என்பதைப்போல அ.தி.மு.க. ஆட்சியே ஊழல் ஆட்சியாகக் கடந்த ஐந்தாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இதிலிருந்து தமிழகத்தை விடுவிக்கவேண்டிய பொறுப்பு, நேர்மையான ஆட்சியில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு இருக்கிறது.

எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் லஞ்சம் ஊடுருவி, மக்கள் நலனைச் சீர்குலைக்கும் காரணியாக வேரூன்றி வருவதை நாம் எல்லாரும் கண்கூடாகக் காண்கிறோம். சரியான லஞ்ச ஒழிப்புமுறைகளைக் கையாண்டு, அதை வளரவிடாமல் தடுக்கவேண்டிய திட்டங்களை வரையறுக்க வல்லுநர் குழு அமைக்கப்படும். இக்குழுவின் பரிந்துரைகள் ஆய்வுசெய்யப்பட்டு, சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அவசியமானால் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும். அரசு ஊழியர்கள் மத்தியிலிருக்கும் லஞ்சத்தை ஒழிப்பதற்குத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டு, வியூகங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

### தமிழகத்தில் லோக் அயுக்தா

நாடாளுமன்றத்தில் லோக்பால் சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனே மாநில அரசுகள் ஓராண்டுக்குள் லோக் அயுக்தா அமைக்கவேண்டும். ஆனால், கடந்த இருபது மாதங்களாகத் தமிழகத்தில் லோக் அயுக்தா அமைப்பதற்கு அ.தி.மு.க. அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதன்மூலம் ஊழலை ஒழிப்பதில் அ.தி.மு.க. அரசுக்கு அக்கறையில்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகிறது.

தமிழகத்தில் வெளிப்படையான, பொறுப்புமிக்க, ஊழலற்ற நிர்வாகத்தை மக்களுக்கு உறுதிசெய்யும் வகையில் லோக் அயுக்தா நீதிமன்றம் உடனடியாக அமைக்கப்படும். இந்தியாவில் சுமார் 22 மாநிலங்களில் லோக் அயுக்தா நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

*கர்நாடக மாநிலத்தில் முதலமைச்சராகப் பதவிவகித்த எடியூரப்பா, கிரானைட் முறைகேடு காரணமாக அவருடைய பதவி பறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் தமிழகத்திலும் லோக் அயுக்தா அமைப்பு உடனடியாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*முதலமைச்சர், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள், தொண்டு நிறுவனங்கள், தொழிற்சங்க அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசு உதவிபெறும் அமைப்புகள்மீது கூறப்படும் புகார்கள் பற்றி விசாரிப்பதற்காக லோக் அயுக்தா அமைப்பு செயல்படும். இதன்மூலம் ஊழலை ஒழித்து நல்லாட்சி அமைக்க முடியும்.*

## உ. பூரண மதுவிலக்கை அமல்படுத்துவோம்

சென்னை மாகாணத்தின் முதல்வராக மூதறிஞர் இராஜாஜி பொறுப்பு வகித்தபோது, 1937ஆம் ஆண்டில் மதுவிலக்கு கொள்கை முதன்முதலாக அமல்படுத்தப்பட்டது. அப்போது எட்டு மாவட்டங்களில் மட்டுமே இக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. 1946இல் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் எஞ்சிய 17 மாவட்டங்களிலும் ஒரே நாளில் ஒரே உத்தரவில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது. அதற்குப்பிறகு, 1971வரை தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது.

1971இல் தமிழகத்தில் மதுவிலக்கு ரத்துசெய்யப்பட்டாலும், 1974இல் தி.மு.க. கழக ஆட்சிக்காலத்தில் மீண்டும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது. ஆனால், 1981இல் முதலமைச்சராக எம்.ஜி.ஆர். பொறுப்பேற்றதும் மதுவிலக்கு ரத்துசெய்யப்பட்டு கள், சாராய விற்பனை அனுமதிக்கப்பட்டது. மதுபானங்கள் தயாரிக்கின்ற உரிமை நான்கு தனியாரிடமும், சாராய உற்பத்தியைப் பத்து தனிப்பட்ட நபர்களிடமும் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வழங்கியதை எவரும் மறந்திருக்க முடியாது. அதேபோல், மொத்த விநியோக வியாபாரம் 15 தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் தமிழகத்தில் சாராய சாம்ராஜ்யங்கள் நிறுவிய பெருமை அ.தி.மு.க. ஆட்சியாளர்களுக்கு உண்டு. அதற்குப்பிறகு சாராயமும் அரசியலும் இரண்டறக் கலந்த நடைமுறை தமிழகத்தில் நிலவி வந்தது.

ஜனவரி 2002 வரை ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் அந்நிய மதுவகைகள் விற்பனை செய்ய தமிழக அரசே 'டாஸ்மாக்' நிறுவியது. இதன்மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் வரியாக ஏறத்தாழ 25 ஆயிரம் கோடி வருவாய் பெருகுவதற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதேநேரத்தில், அ.தி.மு.க.வினரால் நடத்தப்படுகிற 'மிடாஸ்' போன்ற மதுபானத் தயாரிப்பு ஆலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, மிகப்பெரிய அளவில் வருவாயைப் பெருக்கிக்கொள்ளவும், 'பார்'கள் நடத்திப் பகல் கொள்ளை அடிக்கவும் அ.தி.மு.க. ஆட்சியில் வழிவகை செய்யப்பட்டது.

மது ஒழிப்பிற்காக நீண்டகாலமாகப் போராடி வந்த காந்தியவாதி சசிபெருமாள் தமது உயிரை மாய்த்துகொண்ட பிறகுதான் மதுவிலக்குக்கு ஆதரவாகத் தமிழக அரசியல் கட்சிகள் அணி திரண்டன. ஓமந்தூரார் ஆட்சிக் காலத்தில் அரசு வருமானம் ரூபாய் 25 கோடியாக மட்டுமே இருந்தபோது மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது. ஆனால் இன்று தமிழக அரசின் வருமானம் ரூபாய் 1 லட்சத்து 47 ஆயிரமாக இருக்கிறபோது மதுவிலக்கு அமல்படுத்த என்ன தயக்கம்? இராஜாஜிக்கும் ஓமந்தூராருக்கும் இருந்த மக்கள் நலன் ஏன் ஜெயலலிதாவுக்கு இல்லை?

1. தமிழகத்தில் புதிய அரசு பதவி ஏற்றதும் பூரண மதுவிலக்கை அமல்படுத்தப்படும் என்பதே முதல் ஆணையாக இருக்க ஆவன செய்யப்படும்.

2. குடியால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்க ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மறுவாழ்வுச் சிகிச்சை மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

3. பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்களில் மதுவின் பாதிப்புகள் குறித்துப் பாடங்கள் இடம்பெற ஆவன செய்யப்படும்.

4. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகளை மிக விரைவாக வழங்க ஆவன செய்யப்படும்.

5. கள்ளச்சாராயம் காய்ச்சப்பட்டால் அதற்கு உள்ளூர் கிராம நிர்வாக அலுவலர், காவல்துறை ஆய்வாளர், பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்க ஆவன செய்யப்படும்.

6. மதுவிலக்கு துறைக்குத் தனி அமைச்சகம் அமைக்கப்படும்.

7. தேசிய அளவில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட தமிழக அரசு குரல் கொடுக்கும்.

8. மதுவிலக்கு அமலாக்கப் பணியில், மதுவிலக்கு கோரும் அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்களையும் இணைத்துக்கொண்டு செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. விவசாயக் கொள்கையை விரிவாக வகுப்போம்

*தமிழக மக்கள்தொகையில் 40 சதவிகிதம் பேர் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். ஆனால், மாநிலத்தில் உள்நாட்டு உற்பத்தியில் 1960—1961இல் 42.46 சதவிகிதமாக இருந்த வேளாண்மையின் பங்கு அடுத்த 50 ஆண்டுகளில் 7.5 சதவிகிதமாக மிகப்பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. இந்தச் சரிவுக்கு என்ன காரணம்? தமிழகத்தின் வளர்ச்சியில் விவசாயத்தின் பங்களிப்பு குறைந்தது குறித்து எவரும் கவலைப்படாமல் இருக்கமுடியாது. இதைச் சரிசெய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பது குறித்துக் கவனம் செலுத்துவது மிகமிக அவசியம்.*

1. *விவசாயிகளின் வாழ்வில் வளம்பெறுவதன் மூலமாகத்தான் சுயசார்பு நிலையை அடையமுடியும். இந்நிலை ஏற்படவில்லையெனில், கிராமத்தில் வாழ்கிற மக்கள் வேலைவாய்ப்புகளைத் தேடி நகரங்களுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படும். காலப்போக்கில் நகரங்களிலேயே குடியிருக்கவேண்டிய நிலையும் ஏற்படும். இதைத் தடுத்து நிறுத்துகிற வகையில், கிராமப் பொருளாதாரத்தை மையமாக வைத்து தன்னிறைவுப் பெறுகிறவகையில் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். எனவே, கிராம மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு, விவசாயம் சார்ந்த துணைத் தொழில்கள் தொடங்குவதற்கு வழிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

2. *விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை வணிகர்களிடம் விற்பனை செய்வதால் உரிய விலை கிடைக்காமல் பெருத்த நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இதிலிருந்து விவசாயிகளை மீட்பதற்காகத்தான் கடந்த மத்திய காங்கிரஸ் அரசு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் குழு அமைத்து, வேளாண் விளைபொருள்களுக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொண்டது. அக்குழுவின் பரிந்துரையை மத்திய பா.ஜ.க. அரசு இதுவரை நிறைவேற்றாமல் விவசாயிகளை வஞ்சித்து வருகிறது. இக்குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டால் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு உற்பத்தி செலவைவிட 50 சதவிகிதம் அதிக விலை கிடைக்க உறுதிசெய்யப்படும். இதைச்*

செயலுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இயற்கை வேளாண்மை செய்வதற்கு ஊக்கப்படுத்தும் வகையில் அதற்குத் தேவையான விதைகள், இடுபொருள்கள், உரங்களை மானிய விலையில் வழங்க ஆவன செய்யப்படும்.

3. நமது பாரம்பரிய விதைகள் பல அழியும் நிலையில் உள்ளன. வேளாண் விஞ்ஞானிகளின் துணையோடு அதைப் பாதுகாத்து பரப்புவது அவசியமாகும். அதேபோல நாட்டுவகை பசுக்கள், காளைகள், எருமைகள், ஆடுகளைப் பாதுகாத்து இனப்பெருக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

4. 25 ஆயிரம் ஹெக்டேருக்குமேல் தென்னை விவசாயத்தைக்கொண்ட குமரி மாவட்டத்தில், தேங்காய் மற்றும் தென்னங்கீற்று போன்ற சார்பு பொருள்களுக்கான தொழிற்சாலைகள் இல்லை. இதை உடனடியாக அமைத்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு, தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ரேஷன் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாகச் சத்தான தேங்காய் எண்ணெய்யை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

5. சிறு, குறு விவசாயிகளால் எந்திரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்வது கட்டுப்படியாகக் கூடியநிலையில் இல்லை. பெரு விவசாயிகளின் நிலவுடைமை பெருமளவில் குறைந்துவிட்டதால், விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், விவசாயத்தில் நவீனக் கருவிகளைப் பயன்படுத்த இயலாதநிலை உள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக விவசாய எந்திரங்கள் வாங்குவதற்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைத்தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விவசாய எந்திரங்களை மிகக்குறைந்த வாடகை செலுத்தி விவசாயிகள் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யப்படும்.

6. விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களை விற்க தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட உழவர் சந்தைகளை அ.தி.மு.க. ஆட்சியில் மூடுவிழா நடத்தப்பட்டது. இத்தகைய உழவர் சந்தைகளை அதிக அளவில் மீண்டும் தொடங்கி, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை நியாயவிலையில் விற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. தமிழகத்தில் 530 பொறியியல் கல்லூரிகளில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் விவசாயக் கல்லூரிகளோ மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே உள்ளது. விவசாயத்துறை என்பது விரும்பத்தகாத துறையாக இருப்பது மிகமிகத் துரதிருஷ்டமானதாகும். எனவே, விவசாயம் சார்ந்த மாவட்டங்களில், விவசாயக் கல்லூரிகள் தொடங்கப்படவேண்டும். அதன்மூலம் விவசாயத்தைப் படித்த, நவீன பார்வைகொண்ட இளைஞர்கள் உருவாக்க முடியும் என்பதால் வேளாண் கல்லூரிகள் தொடங்க ஆவன செய்யப்படும். மண்டலம் தோறும் விவசாயப் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்படும்.

8. விவசாயக் கூலித் தொழிலாளர்களைப் பொருத்தவரை, விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து வருகின்றனர். சமீபத்தில் எல்லாத் தொழிலிலும் எந்திரமயம் புகுந்துவிட்டது. அதேபோல் விவசாயத்தில் களைப்பறித்தலைத் தவிர, நாற்றங்கால் தயாரிப்பது, நடவு, உழவு, மருந்து தெளிப்பது, கதிரறுப்பது என எல்லாப் பணிகளிலும் எந்திரம் புகுந்துவிட்டது. எனவே, விவசாயத் தொழிலைமட்டுமே நம்பி இருந்தவர்கள் வேறு தொழிலைத் தேடி இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளிகளுக்கோ, கல்லூரிகளுக்கோ சென்று கல்வி அறிவு பெறாதவர்களின் உழைப்பை எந்திரம் பிடித்துக்கொண்டதால் காவிரி டெல்டா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வெளியேறும்நிலை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இத்தகைய

நிலையைத் தவிர்த்திடும் வகையில் மாற்றுத் தொழில் திட்டம் உருவாக்கப்பட்டு, அந்தந்தப் பகுதியிலேயே வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

9. வேளாண்மையை ஊக்கப்படுத்த மத்திய, மாநில அரசுகள் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தது. வங்கிகள்மூலம் டிராக்டர், பவர் டிரில்லர் உள்ளிட்ட விவசாயக் கருவிகளை மானிய விலையில் கடனாக வழங்கி வந்தன. இதைப் பெரிய விவசாயிகள்தான் வாங்குகிற நிலை உள்ளது. சிறிய விவசாயிகளுக்கு இத்தகைய வசதிகள் கிடைப்பதில்லை. சிறிய விவசாயிகளுக்கும் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

10. சொட்டு நீர்ப்பாசனத்திற்கு 100 சதவிகித மானியம் வழங்கவும்; இதைப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்த ஆவன செய்யப்படும். மேலும், இதைப் பெறுவதற்கான வழிமுறைகள் கடுமையாக உள்ளதை மாற்றி எளிமைப்படுத்துவதுடன் சிறு, குறு, பெரு விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் நடைமுறைகள் சீரமைக்கப்படும்.

11. விவசாயிகள் உற்பத்தி செய்கிற வெங்காயம், பீன்ஸ், நெல்லி, எலுமிச்சை, கத்தரிகாய், பாகற்காய், புடலங்காய், தக்காளி போன்ற தோட்டப் பயிர்களின் விலை, உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் வரத்தைப் பொருத்தே நிர்ணயம் செய்யப்படுகிறது. சந்தையில் காய்கறிகளின் வரத்து அதிகமாக இருந்தால் விலை குறைகிறது, வரத்து குறைவாக இருந்தால் விலை ஏறுகிறது. இந்த நிச்சயமற்றத்தன்மை விவசாயிகளை வெகுவாகப் பாதிக்கிறது. எனவே, அனைத்துக் காய்கறிகளுக்கும், தோட்டப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச விலையை அரசு நிர்ணயிக்க ஆவன செய்யப்படும்.

12. காய்கறிகள், பழங்களைச் சேமித்து வைத்து விவசாயிகள் விரும்புகிற நேரத்தில் விற்பனை செய்வதற்குக் குளிர்பதனக் கிடங்குகளை ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்க ஆவன செய்யப்படும். இதற்காக விவசாயிகளிடமிருந்து சலுகைக் கட்டணம் வசூலிக்கப்படும். கர்நாடக மாநிலத்தில் காய்கறிகள் விலை வீழ்ச்சி ஏற்படும்போது, அரசு நிவாரண உதவி வழங்குகிறது. அதேபோல் தமிழக அரசும் வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஆவன செய்யப்படும்.

13. காய்கறிகளிலிருந்து மதிப்புக்கூட்டுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைக் கிராமப்புறங்களில் உருவாக்கவேண்டும். ஒட்டன்சத்திரம், ஊட்டி, கொடைக்கானல், பண்ருட்டி போன்ற பகுதிகளில் காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களின் உற்பத்தி அதிகமாக இருப்பதால் அதைச் சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்க ஆவன செய்யப்படும். குறிப்பாக முருங்கை பவுடர், வாசனைத் தைலம் மற்றும் பழச்சாறு தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படும். தென் தமிழகத்தின் பெரிய காய்கறி சந்தையாகத் திகழும் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டை விரிவுபடுத்தி அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

14. சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, தினை போன்ற நவதானிய வகைகள், தட்டப்பயறு, உளுந்து, பாசிப்பயறு, துவரை போன்ற பயறு வகைகள் பயிரிடுவதற்குத் தமிழக அரசின் விவசாயத் துறையின்மூலம் பல்வேறு ஊக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். உடல் நலன்சார்ந்த இவ்வுணவுப் பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விரிவான முறையில் விளம்பரம் செய்து, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

15. விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறிவருவதைத் தடைசெய்ய வேண்டும். மூன்று போகம் சாகுபடி செய்கிற நஞ்சை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்குத் தடைவிதிக்க ஆவன செய்யப்படும்.

16. கடந்த சில வருடங்களாகத் தொடரும் வறட்சி, விளைச்சல் இழப்பு, விளைபொருள்களின் விலை வீழ்ச்சி, வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்பினைக் கருத்தில்கொண்டு விவசாயிகளுக்கு அனைத்துத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளில் உள்ள வேளாண் சார்ந்த நகைக்கடன் உள்பட கடன்கள் அனைத்தும் ரத்துசெய்ய ஆவன செய்யப்படும்.

17. வேளாண்மைக்கு தனித் திட்ட அறிக்கையும், நிதிநிலை அறிக்கையும் விரிவான முறையில் வெளியிட ஆவன செய்யப்படும்.

18. தேசிய வேளாண் பயிர் காப்பீடுத் திட்டத்திற்குத் தனிநபர் மற்றும் தனிநிலம் பாதிப்பிற்கு இழப்பீடு கிடைக்கும் வகையில், திட்டத்தை மாற்றி அமைக்க ஆவன செய்யப்படும். குறிப்பிட்ட பகுதி முழுவதும் பாதிப்பு ஏற்பட்டால்தான் காப்பீடுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தவிர்க்கப்படும். எலி, குரங்கு, மயில், பன்றி, யானை போன்ற விலங்குகளால் ஏற்படும் சேதத்திற்கும் இழப்பீடு கிடைக்க திருத்தம் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தப்படும். மேலும், மத்திய மாநில அரசுகள் இணைந்து பயிர் காப்பீடு இழப்பீடு வழங்கும் திட்டம் தொடர வழிவகை செய்யப்படும்.

19. வேளாண் உற்பத்தியாளர் நலன்கருதி பயிர் காப்பீடு இழப்பீடுத் திட்டங்களைத் தனியார் நிறுவனங்களின் பொறுப்பில் ஒப்படைக்கக்கூடாது என்பதில் உறுதிப்பாட்டுடன் செயல்பட ஆவன செய்யப்படும்.

20. கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 என வயல் விலை நிர்ணயம் செய்யவும், வெட்டுக்கூலி, போக்குவரத்துச் செலவை ஆலை நிர்வாகமே ஏற்கவும் ஆவன செய்யப்படும். சர்க்கரைக்கு விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி (VAT) ரத்துசெய்யப்படும்.

21. தமிழக சர்க்கரை ஆலைகளில் எத்தனால் பயன்பாடு தற்போது 5 சதவிகிதத்திற்குமேல் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்படுவதால் சர்க்கரை ஆலைகள் அனைத்திலும் 10 சதவிகித எத்தனால் பயன்பாட்டிற்கு அனுமதி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

22. நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,000 என நிர்ணயிக்க ஆவன செய்யப்படும். மேலும், ஈரப்பதம் கணக்கீட்டுக்கு மத்திய மாநில அரசுகள் வழங்கும் மானியத் தொகைகள் விவசாயிகளைச் சென்றடையவும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

23. புதிய மின் உற்பத்தித் திட்டங்களை வகுத்து வேளாண்மைக்கு இலவசமாக மின்சாரம் தடையின்றி நாள்முழுவதும் கிடைக்க உறுதிசெய்யப்படும். பயிர்களின் நீர்ப்பாசன முறைக்கேற்ப மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

24. வேளாண் தொழில் அனுபவப் பகிர்வு, துல்லிய வானிலை மற்றும் சந்தை நிலவரங்களை அறிந்துகொள்ள பன்பலை ஒலிபரப்பில் (FM-KRISHIVENI) தேசிய அளவில் வானொலி நிலையங்கள் அமைக்கப்படும்.

25. சிட்டா, அடங்கல் கேட்டு விவசாயிகளை அலையவிடாமல், விவசாயக் கடன் அட்டையை (KISSAN CREDIT CARD) ஆதாரமாகக்கொண்டு வேளாண் நகைக்கடன் 4 சதவிகித வட்டியில் வழங்க ஆவன செய்யப்படும்.

26. மலர்கள், மா, வாழை, தேங்காய், பருத்தி, மஞ்சள் போன்ற விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு ஏற்றுமதி மண்டலங்கள் தேவையான இடங்களில் அமைக்க ஆவன செய்யப்படும்.

27. தமிழ்நாட்டில் பால் பண்ணைத் தொழிலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அரசியல் தலையீட்டால் சீரழிந்து கிடக்கும் ஆவின் நிர்வாகத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்ட அளவிலான பால் உற்பத்தியாளர் சங்கங்களின் தேர்தல்களில் உண்மையான பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே பங்கேற்று நிர்வாகப் பொறுப்பிற்கு வருவதற்கு வழிவகைகள் செய்யப்படும். மேலும், பாலிற்குக் கிடைக்கும் விலை கட்டுப்படியானதாக இல்லையென்பதால், தமிழக அரசு 1 லிட்டர் பாலிற்கு 4 ரூபாய் மானியம் வழங்க ஆவன செய்யப்படும். கர்நாடகாவில் இத்தகைய மானியம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவமனை களைவிட வயல்வெளியில் மாடுகளுக்குச் சிகிச்சை அளிப்பது எளிதானது என்பதால், கால்நடை மருத்துவர்களுக்குக் களப்பணியாற்ற வாகன வசதி செய்துதரப்படும்.

28. விவசாயிகளின் மின் இணைப்பு கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும். விவசாய மின் இணைப்புகளுக்காகத் தற்போது 10 ஆண்டுகள்வரை காத்திருக்கவேண்டிய அவலநிலை உள்ளது. மின் இணைப்புகள் வழங்குவது சலுகைகள் அல்ல, அவை உணவுப் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் என்பதால், உடனடியாக விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் அரசு முன்னுரிமை வழங்கும். விவசாயப் பகுதிகளுக்கும் மற்ற முன்னேறிய தொழில் வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கும் மின் விநியோகத்தில் இருக்கும் பாரபட்சபோக்கு தவிர்க்கப்படும். விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் 24மணி நேரமும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

29. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் முற்றிலும் விவசாயிகள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க அனுமதிக்கப்படுவார்கள். விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களின் நலனுக்காக மட்டுமே செயல்படும் வகையில் நிர்வாக நடைமுறைகள் மாற்றி அமைக்கப்படும்.

30. விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வட்டியில்லாக் கடனாகப் பயிர்க்கடன் வழங்கப்படும். விவசாய உற்பத்திப் பொருள்கள்மீது வட்டியில்லாக் கடன்கள் வழங்கப்படும். கடன் வழங்கும் உச்சவரம்பு உயர்த்தப்படும்.

31. பயிறுவகை உற்பத்திக்கு உரிய கவனம் செலுத்தப்படும். புரதசத்து நுகர்வோர் தமிழ்நாட்டில் மிகவும் குறைவாகவே இருக்கின்றனர். தமிழகத்தில் போதுமான அளவு பருப்பு வகைகளை உற்பத்திசெய்ய வாய்ப்பு இருந்தும், அரசின் கவனக் குறைவால் உற்பத்தி போதுமான அளவு இல்லை. விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவும், தொழில் நுட்பம், இடுபொருள்களை மலிவான விலையில் கிடைக்கவும் கவனம் செலுத்தப்படும்.

32. எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய்க்குப் பதிலாக உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கு ஊக்கம் கொடுக்கப்படும்.

33. விவசாயிகள் தாங்கள் கொண்டுவரும் காய்கறிகள், பழங்கள் போன்ற உற்பத்திப் பொருள்களை உள்ளூர்ச் சந்தைகளில் இருப்புவைக்கக் குளிர்பதன வசதியுடன் கிடங்குகள் அமைக்கப்படும். உழவர் சந்தைகளை மேம்படுத்தவும், கூடுதலாக உழவர் சந்தைகளை உருவாக்கவும் வழிகள் மேற்கொள்ளப்படும்.

34. விவசாயத் துறைக்கும், விவசாயிகளுக்கும் உள்ள தொடர்பு குறைந்து வருகிறது. பழைய பஞ்சாயத்து ஆட்சிமுறையில் சமுதாய வளர்ச்சி திட்டங்கள் மூலமாக நவீன கருவிகள், விதைகள், உரங்கள் போன்றவை வழங்கப்பட்டு வந்தன. தற்போது அந்த நிலை மாற்றப்பட்டதால் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். விவசாயப் பல்கலைக் கழகங்களில் உருவாக்கப்படும் விவசாயத் தொழில் நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைவதில்லை. இக்குறையினைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

35. கிராமப்புறங்களில் நீராதாரங்களைச் செழுமைப்படுத்த பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும். இதன்மூலம் மழைநீர் சேகரிக்கப்படவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் வாய்ப்புகள் ஏற்படும். கால்வாய் பாசனங்களை நவீனப்படுத்தித் தண்ணீர் விரயமாவதைத் தடுக்கப்படும்.

36. தேங்காய் கொப்பரைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தென்னை விவசாயிகளின் நலன்காக்கும் வகையில் தென்னை வளர்ச்சி வாரியம், தென்னை விவசாயிகள் நலவாரியம் ஆகியவற்றின்மூலம் தேங்காயை நேரடியாகக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

37. விவசாயத்தில் சூரியசக்தி மின்சாரத்தை 100 சதவிகித அளவில் பயன்படுத்த மானியங்கள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படும்.

38. உலர் நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றை மண்வளப் பாதுகாப்புத் துறைமூலமாக மேம்படுத்தப்பட்டு, மண்ணின் தரம் ஆய்வுசெய்யப்பட்டு, சதவிகிதச்சத்து குறைபாடுள்ள நிலங்களுக்கு ஈட்டு உரம் இலவசமாக வழங்கப்படும்.

39. வேலைவாய்ப்பில்லாத விவசாயப் பட்டதாரிகளைப் பயன்படுத்த விவசாய ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்க ஆலோசனை மையங்கள் அமைக்கக் கடன் வழங்கப்படும். இதன்மூலம் விவசாயத் தொழில் நுட்பங்கள், நவீன வேளாண்முறை குறித்துக் கிராமப்புற விவசாயிகள் நவீனமுறையில் விவசாயம் செய்ய ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கிச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

40. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களைச் சேமிப்பதற்குக் கிராமங்களிலே எந்த வசதியும் இல்லாத நிலை உள்ளது. எனவே, நவீன கிடங்கு வசதிகளை ஏற்படுத்திச் சேமிப்பிற்கு வழிவகை செய்யப்படும். சேமிக்கப்படுகிற காலத்திற்குக் குறைந்த வாடகை கட்டணம் வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

41. தமிழக மக்களின் அடையாளச் சின்னமாகக் கருதப்படுகிற பனைமரங்கள் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும். பனைமரங்களை வெட்டுவது முற்றிலும் தடுக்கப்படும். பனைவெல்லம், பனங்கற்கண்டு, பதநீர் ஆகியவை மதிப்பூட்டப்பட்ட பொருள்களாக மாற்றப்பட்டு விற்பனை வாய்ப்புகள் விரிவாக்கப்படும். பனை சார்ந்த கலைப்பொருள்கள் தயாரிப்பது ஊக்குவிக்கப்படும்.

42. கிராமப் புறங்களில் வாழ்கிற மக்கள் விவசாயத்தையே முழுமையாக நம்பி இருக்காமல் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்படும். குறிப்பாகக் கூட்டுறவு பால் சங்கங்கள் தொடங்கப்படும். இதற்காகக் கறவை மாடுகள் வாங்குவதற்குக் கூட்டுறவு வங்கி மூலமாக எளிய வட்டியில் கடன் வழங்கப்படும். கிராமங்களுக்கே வாகனங்களை அனுப்பி பால் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

43. குறைந்த நீரில் விவசாயம் மற்றும் நீர் மறுசுழற்சிமுறை விவசாயம் அறிமுகப்படுத்தப்படும். வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய சிறு தானியங்களின் சாகுபடி ஊக்கப்படுத்தப்படும்.

44. விவசாயத்திற்குத் தேவையான விதை, பூச்சிகொல்லி, களைக்கொல்லி, உரம் போன்ற இடுபொருள்களை விற்கக் கூட்டுறவுத் துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், டிராக்டர், மருந்துதெளிப்பான் உள்ளிட்ட விவசாயக் கருவிகள் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் கூட்டுறவு சங்கங்கள்மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

45. விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான தினக்கூலி வழங்குவது உறுதிசெய்யப்படும். இது சம்பந்தமாக மாவட்டந்தோறும் ஆய்வுசெய்து, சமநோக்கிலான ஊதியமும், வேலை நேரமும் வரையறை செய்து நடைமுறைப்படுத்தப்படும்.

46. வன விலங்குகள் மற்றும் குரங்குகள், பறவைகள் ஆகியவற்றிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க நிரந்தர ஏற்படுகள் செய்யப்படும். தடுப்பு வேலிகள் மற்றும் மின்வேலிகள் அமைக்கக் குறைந்த வட்டியில் நீண்டகாலக் கடன் வழங்க ஆவன செய்யப்படும்.

47. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தைக் கிராம மக்கள் அதிக அளவில் பயன்பெற ஆவன செய்யவதுடன் மேலும் விரிவுபடுத்தி, விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் பணித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

48. 60 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மாதம் ரூ.2,000 ஓய்வூதியம் வழங்கவும், இல்லம் தேடி மருத்துவ உதவிகள் கிடைத்திடவும் ஆவன செய்யப்படும்.

49. ஏரி, குளம், குட்டைகள் தூர்வாரப்படும். அங்குள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் தங்குதடையின்றி இலவசமாக எடுத்துச்சென்று விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும், நீர்வழிப் பகுதிகளில் உள்ள சீமைக் கருவேல் மரங்கள் முற்றிலுமாக அப்புறப்படுத்தப்படும். நீர்நிலைகளைச் சார்ந்த அரசுப் புறம்போக்கு நில ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் நீர்வரத்து அதிகரிக்கப்படும். மேய்ச்சல் நிலம் பாதுகாக்க ஆவன செய்யப்படும்.

50. காபி மற்றும் தேயிலையின் குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க ஆய்வுக்குழு அமைத்து, தற்போது நடைமுறையில் உள்ள விலையை இருமடங்காக உயர்த்த ஆவன செய்யப்படும்.

51. தமிழ்நாட்டில் விவசாயத்துறை கடந்த ஐம்பது ஆண்டுகளில் பின்தங்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாகக் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு விவசாயத்துறையில் அரசின் பங்களிப்பு சரியாக இல்லாததே முக்கியக் காரணமாகும். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சரியான உள்கட்டமைப்பு இல்லாததாலும், நீர்ப்பாசனவசதி மேம்பாடும் சரிவர செய்யப்படாததாலும், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாய உற்பத்தியினால் விவசாயிகளுக்குச் சரியான வருமானம் கிடைக்க வழிசெய்வது மிகவும் முக்கியமானதாகும். ஆகவே, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிக்கு முன்னுரிமை அளிப்பதுடன், அரசின் பங்களிப்பு முழுஅளவில் இருக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52. தமிழ்நாட்டில் பாசன நீர்வசதி குறைவாக இருப்பதாலும், அதிகமான விளைநிலங்கள் மழையை நம்பி இருப்பதாலும், விவசாய உற்பத்தி பல ஆண்டுகளாக மந்தநிலையில் இருக்கிறது. அதேநேரத்தில், மழைவரத்து அதிகமாக இருக்கும் காலங்களில், மழைநீரைத் தேக்கிவைக்கும் வசதியை அநேக ஆண்டுகளாகப் பெருக்காததினால், மழைநீர் வீணாகிக் கடலில் போய்ச் சேர்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நீர் சேமிப்பு முறைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துவோம். இதில், தடுப்பணைகள் கட்டப்பட்டு நீர்த்தேக்கத்தையும் நிலநீர் மேம்பாட்டையும் அதிகரிக்கத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்படும்.

53. விவசாயம் செய்யும் விவசாயிகளின் வருவாயைச் சீராக வைக்கவும், மேம்படுத்தவும் முனைப்பான செயல் திட்டங்கள் மிக அவசியமானதாகும். விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்தும்போது இடைத்தரகர்களினால் விவசாயிகளுக்கு ஏற்படும் வருமான இழப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு விவசாயப் பொருள்களின் சந்தைக்கொள்கை வரையப்படும்.

*54.* *விவசாயப் பொருள்களை மதிப்புக்கூடுதல் செய்து, விவசாயிகள் பெறும் விலையை அதிகரிக்க, ஊரகச் சிறு தொழில்களை விவசாயிகளே ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான முதலீடுகளுக்கு அரசு அளவில் மானியம் அளிக்கவும், குறைந்த வட்டியில் கடன் வழங்கவும் ஆவன செய்யப்படும்.*

*55.* *இயற்கை விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து வேளாண் துறையில் தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தி, இயற்கை வேளாண்மைக்கான கொள்கை வகுக்கப்படவும்; விவசாயிகளுக்கு நாட்டு விதைகளையும், இயற்கை உரங்களையும் அரசே வழங்கவும்; ரசாயன உரங்களால் கெட்டுவிட்ட மண் வளத்தை மீட்டெடுக்க, பசுந்தாள் உரச்செடிகளின் விதைகளைப் பெருமளவில் இலவசமாக வழங்கவும்; இயற்கை வேளாண்மைக்கான உரத்தை விவசாயிகளே தயாரித்துக்கொள்ளும் வகையில் பயிற்சியும் நிதியுதவியும் மானியத்துடன் வழங்கவும்; இயற்கை விவசாயத்தின்மூலம் அதிக மகசூலைப் பெறமுடியும் என்கிற நம்பிக்கையைத் தெளிவுப்படுத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும்; தமிழகத்தில் இயற்கை வேளாண்மைக்குத் தடையாக உள்ள நடைமுறை சிக்கல்களைப் போக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

## 4. புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவோம்

கல்வித்துறையில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து, பெருமைபெற்ற தமிழகம், இன்று சீரழிந்தநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து விடுவிக்கப் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்படும். அதன்மூலமாகத் தமிழகத்தின் கல்வித்துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ Pre KG முதல் PG வரை அனைத்து மாணவர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் இலவசக் கல்வி வழங்கப்படும். மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும்.

❖ கல்வி தனியார் மயமாக்கப்பட்டு வணிகமயமாவதைத் தடுத்து நிறுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ அரசுப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

❖ தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

❖ மாவட்டந்தோறும் நவோதயா பள்ளிகள் தொடங்கப்படும்.

❖ கல்வித்துறைக்கான ஒதுக்கீடு நிதிநிலை அறிக்கையின்படியான மொத்த வருவாயில் 5 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

❖ அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதற்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

❖ கல்வித்தரத்தை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சியும் ஊக்கமும் அளிப்பதுடன், அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகிற தொகுப்பூதிய ஆசிரியர்கள் அனைவரும் நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

❖ பிற்படுத்தப்பட்ட, தலித் மாணவர்கள் தங்கிப்படிக்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்துதரப்படும். உணவு விடுதிகளில் தரமான உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ மொழி சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கிற வகையில் அவர்களது தேவைகளுக்கேற்ப வகுப்புகள் தொடங்கப்படும்.

❖ தனியார் பள்ளிகளில் அதிகக் கட்டணம், நன்கொடை வசூலிப்பதைத் தடைசெய்யும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும். அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளம் உள்ளிட்ட சலுகைகள் ஆய்வுசெய்யப்பட்டு மேம்படுத்தப்படும்.

❖ மாணவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித்தொகைகள் உரிய காலத்தில் பயனாளிகளுக்குப் போய் சேர்கிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதில் வெளிப்படைத்தன்மை உருவாக்கப்பட்டு, தவறுகள் நடக்காமல் இருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

❖ 30 மாணவர்களுக்கு ஓராசிரியர் என்று ஆசிரியர் - மாணவர் விகிதத்தை நடைமுறைப்படுத்த ஆவனச் செய்யப்படும்.

❖ நாட்டுப்பற்று, மொழிப்பற்றை வளர்ப்பதுடன், நமது பாரம்பரிய சமுதாயக் கலாச்சாரப் பண்பாட்டை வளர்க்கும் நோக்குடையதாகவும் இருக்க கல்விமுறையில் வழிவகை செய்யப்படும்.

❖ உயர் கல்வியை உலகத்தரத்திற்கு ஈடாக அமைக்கப்படும்.

## அ.தி.மு.க. அரசால் செயல்படுத்தப்படாத மத்திய கல்வி உரிமைச் சட்டம்:

காங்கிரஸ் தலைமையில் அமைந்த மத்திய கூட்டணி அரசு அனைவருக்கும் கல்வியை வழங்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் 2006இல் கல்வி உரிமைச் சட்டம் கொண்டுவந்தது. இச்சட்டத்தின்படி 6 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வியை அளிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்தவேண்டிய பொறுப்பு தமிழகத் தொடக்கக் கல்வித்துறைக்கு இருக்கிறது.

தொடக்கக் கல்வித்துறையின்கீழ் ஏறத்தாழ 55 லட்சம் மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். தொடக்கத்தில் ஒரேயொரு பொதுக்கல்வி இயக்குநரைக் கொண்டிருந்த தமிழகக் கல்வித்துறை, இன்று பல்வேறு இயக்குநர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதிகாரங்கள் கல்வித்துறை அமைச்சரிடம் குவிந்திருப்பதால், பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டு, கல்வித்துறை சீரழிந்து வருகிறது. ஊழல், திறமையின்மை எனக் கல்வித்துறை சீரழிக்கப்பட்டு வருகிறது. இதனை ஒழுங்குப்படுத்திக் கல்வித்துறையைச் சீரமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மத்திய அரசில் காங்கிரஸ் அரசு கொண்டுவந்த இலவசக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, அனைத்துத் தனியார் பள்ளிகளும் ஒவ்வொரு வகுப்பிலும் 25 சதவிகித இடங்களில் ஏழை எளிய மாணவர்களை சேர்க்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கல்விக் கட்டணத்தை மத்திய அரசே மாநில அரசு மூலமாக செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் முறையான மாணவர் சேர்க்கை நடத்தப்படுவதில்லை. அதை தட்டிக் கேட்பதற்கு அ.தி.மு.க. அரசு தயாராக இல்லை என்பதுதான் தமிழகத்தின் உண்மை நிலை!

2013-14 கல்வி ஆண்டில் 25 சதவிகித ஒதுக்கீட்டின்படி தமிழகத்தில் மொத்த இடங்கள் 1 லட்சத்து 43 ஆயிரம். ஆனால், நிரப்பப்பட்ட இடங்கள் 16 ஆயிரத்து 194 இடங்கள்தான். 25 சதவிகித ஒதுக்கீடு வழங்க வேண்டிய தனியார் பள்ளிகள் 8.8. சதவிகிதம்தான் ஒதுக்கியிருக்கின்றன. இது மத்திய பிரதேச மாநிலத்தில் 89 சதவிகிதமாகவும், ராஜஸ்தான் மாநிலத்தில் 69 சதவிகிதமாகவும், கர்நாடக மாநிலத்தில் 25 சதவிகிதமாகவும் உள்ளன.

எல்லாவற்றையும் மிஞ்சுகிற கொடுமை என்னவெனில், தமிழகத்தில் உள்ள 10 ஆயிரத்து 758 தனியார் பள்ளிகளில் 1392 பள்ளிகளில் ஒரே ஒரு மாணவரைத்தான் 25 சதவிகித ஒதுக்கீட்டின்படி சேர்க்கப்பட்டுள்ளது.

இச்சட்டப்படி பள்ளிகளுக்கு சேரவேண்டிய முழு கட்டணத்தை மத்திய அரசு வழங்கும்போது இந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு ஜெயலலிதா அரசுக்கு என்ன தயக்கம்? ஏன் இந்த பாராமுகம்? மத்திய கல்வி உரிமைச் சட்டத்தின்படி 25 சதவிகித ஒதுக்கீட்டை நிறைவேற்றதாத பள்ளிகள் மீது நடவடிக்கை எடுப்பதிலே தமிழக கல்வித் துறையின் அலட்சியப்போக்கிற்கு என்ன காரணம்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இதைவிட மக்கள் விரோத நடவடிக்கை வேறு எதுவும் இருக்கமுடியுமா? எனவே, மத்திய காங்கிரஸ் அரசு நிறைவேற்றிய கல்வி உரிமைச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் ஏழை எளிய மாணவர்களுக்கான 25 சதவிகித ஒதுக்கீட்டை முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**கல்வித்துறையில் சீரமைப்பு:**

தமிழ்நாட்டில் இன்றைய கல்வி வளர்ச்சி வணிகமயமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் கல்வித்துறையில் நிறைய சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டியுள்ளது.

1. அரசுப் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்படாததால் மாணவர்கள் தனியார் பள்ளிகளுக்குப் படையெடுக்கிற நிலையினை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில், ஆசிரியர்களின் தரம் உயர்த்தப்பட்டு கற்பிக்கும் திறன் மேம்படுத்தப்படும். அதேபோல் பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 100 சதவிகிதக் கழிவறை வசதி, பதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி உறுதிசெய்யப்படும்.

3. மாணவியர்களுக்கு இலவச சானிடரி நாப்கின் வழங்கப்படும்.

4. பள்ளிகளிலேயே திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம் மொழி பயிற்சி வழங்கப்படும். இதன்மூலம் மாணவர்களிடையே சமநிலைத்தன்மை உருவாக்கப்படும்.

5. அனைத்து மாவட்டங்களிலும் தரம்வாய்ந்த நூலகங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு அரசு உயர்நிலைப் பள்ளியிலும் தேவையான நூல்கள் அடங்கிய நூலகங்கள் உருவாக்கப்படும்.

6. பெரும்பகுதி கல்வி நிறுவனங்கள் அறக்கட்டளைகளால் நிர்வகிக்கப்படுகின்றன. பெரும்பாலான அறக்கட்டளைகள் சேவை மனப்பான்மையை இழந்துவிட்டன. அறக்கட்டளைகள் என்ற போர்வைக்குள் வணிகம் செய்யும் எண்ணம்கொண்ட பலர் புகுந்துவிட்டனர். இந்த அறக்கட்டளைகளை ஒழுங்குபடுத்த உடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

8. மாணவர்களை வேலைவாய்ப்புக்குத் தகுந்தவர்களாக வெளியேரும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் கல்லூரிகளில் வழங்க வழிவகை செய்யப்படும்.

9. அரசு கலைக் கல்லூரிகள் தேவை இருக்கின்ற இடங்களில் அரசு கலைக் கல்லூரிகள் அமைக்கப்படும்.

10. IIT, IIM போன்ற மத்திய கல்வி நிறுவனங்கள் போன்று தமிழகத்தில் தரம் உயர்த்த கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படும்.

11. மாநிலத்தின் ஆட்சிமொழியாம் அன்னைத் தமிழ் மொழியை அநேகக் கல்வி நிலையங்களிலும் புறக்கணிக்கப்பட்டும் சூழ்நிலை இருக்கின்றது. தாய்மொழியைப் பயிற்று மொழியாகக்கொண்ட நாடுகள்தான் எல்லாத் துறைகளிலும் வேகமாக முன்னேறுகின்றன. எனவே, தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஒரு கட்டாயப்பாடமாகத் தமிழ் மொழிப் பாடம் இருக்க அரசாணை பிறப்பிக்கப்படும்.

12. அரசினர் மாணவர் விடுதிகள் மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கின்றன. இந்த விடுதிகளில் உணவு தரமாக இருப்பதில்லை, கட்டடங்கள் பராமரிக்கப்படுவதில்லை. இந்தக் குறைபாடுகள் களையப்படும். மாணவ, மாணவியர் உற்சாகத்தோடு கல்வி பயிலும் வகையில் சுற்றுச்சூழலை அமைத்துக்கொடுக்க ஆவனச் செய்யப்படும்.

13. விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சிறப்பாக விளையாடும் மாணவர்களைக் கண்டறிந்து இந்திய அளவிலும், உலக அளவிலும் போட்டிகளில் கலந்துகொள்ள உதவிகள் செய்யப்படும். தேர்ச்சியான பயிற்சியாளர்களைக்கொண்டு தொடர் பயிற்சிகள் அளிக்கப்படும்.

14. தமிழ்நாடு அரசின் கல்வித்துறையின் பாடத்திட்டங்கள் மத்திய அரசின் மேல்நிலைப் பாடத்திட்டத்திற்கு இணையாகவோ அல்லது சர்வ தேசப் பாடத்திட்டங்களுக்கு இணையாகவோ மாற்றப்படும்.

15. அனைத்து மாணவர்களுக்கும் கணினிப் பயிற்சி வழங்கப்படும். தரமான கணிப்பொறி அனைவருக்கும் வழங்கப்படும்.

16. இணைய தள நூல் விற்பனை பெரும் சந்தையாக உருவெடுத்துள்ளது. இதற்கு இந்தியப் புத்தகத் தர நிர்ணய எண் (ISBN) அவசியம். இதற்கான நடைமுறைகளில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கத் தலைநகர் தில்லியிலுள்ள அலுவலகத்தின் கிளை ஒன்றைச் சென்னையில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

17. அனைத்து மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளிலும் குறைந்தபட்சம் 20 கணினிகளைக்கொண்ட மேம்படுத்தப்பட்ட கணினி ஆய்வகங்கள் ஏற்படுத்த ஆவன செய்யப்படும்.

18. தமிழக அரசுப் பள்ளிகளில் தற்போது காலியாக உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

19. தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைக் கிராமப்புறங்களில் தொடங்குவதில் அ.தி.மு.க. அரசு ஆர்வம் காட்டாமல் புறக்கணித்து வருகிறது. கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் நவீன கல்வியைப் பெறுவதற்கு நவோதயா பள்ளிகளைத் தமிழகம் முழுவதும் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

20. மதிய உணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற முட்டையுடன் பால் சேர்த்து வழங்கப்படும்.

## 5. தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவோம்

*தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி சதவிகிதம் கடந்த சில வருடங்களாகக் குறைந்துவருவதே இதற்குச் சாட்சியாக விளங்கி வருகிறது. 2010—11ஆம் ஆண்டில் 10.36 சதவிகிதமாக இருந்த மாநில உள்நாட்டு உற்பத்தி, 2012—13ஆம் ஆண்டில் 4.61 சதவிகிதமாகக் குறைந்தது. தமிழக ஆட்சியாளர்களின் ஊழல்மயமான அணுகுமுறைதான் இத்தகைய பின்தங்கிய நிலைக்குக் காரணமாகும். தமிழகப் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாகத் திகழும் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகள், தொடர் மின்வெட்டால் பாதிக்கப்பட்டதும் இந்தப் பின்னடைவுக்குக் காரணமாகும்.*

1. *தமிழ்நாட்டில் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள நாங்குநேரி உயர் தொழிற் நுட்பப் பூங்கா 2500 ஏக்கர் பரப்பளவில் வரியற்ற ஏற்றுமதி மண்டலம் (சிறப்புப் பொருளாதார மண்டலம்) அமைக்க நிலம் கையகப்படுத்தபட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரே காரணத்துக்காக அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் முடக்கி வைத்துள்ளார்கள். இதனைச் செயலுக்குக் கொண்டுவந்து வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

2. தமிழ்நாட்டில் சுமார் 7.60 லட்சம் சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் சுமார் 53 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் பெரும்பாலான தொழிற்சாலைகள் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டு உற்பத்தியில்லாமல் முடங்கிக் கிடக்கின்றன. இதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். சிறு, குறு, நடுத்தர தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு 2013இல் அறிமுகப்படுத்திய பத்து அம்சத் திட்டத்தால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. தற்போது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தித் துறையின் பங்கு 17 சதவிகிதமாகத்தான் இருக்கிறது.

அ) தொழில் முனைவோரை ஈர்க்கும் வகையில், கட்டமைப்பு வசதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், அரசாங்கத்தின் நேரடி முதலீடு செய்யப்படும்.

ஆ) தொழில் முதலீட்டாளர்களைப் பல்வேறு தொல்லைகளுக்கு உட்படுத்தும் நிர்வாகச் சிக்கல்களைக் களைந்து, ஒற்றைச்சாரள முறையில் அனுமதிகள் வழங்கப்படும். தொழில் முனைவோர்களுடன் அடிக்கடி பேசி பிரச்சினைகளைத் தீர்க்கத் தனித்துறை தொடங்கப்படும்.

இ) வேலைவாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன் கிராமப்புறங்களில் ஊரகத் தொழில்களை ஊக்குவிக்க, கிராமப்புறத்தில் தொழில்களைத் தொடங்கக் கூடுதல் சலுகைகள் வழங்கி வாய்ப்புகளை உருவாக்குவோம்.

3. தொழில் முனைவோர்க்குத் தமிழ்நாட்டில் குறைவில்லை. அவர்களுக்கு ஊக்கம்தரத்தான் தற்போதைய அரசிற்கு மனமில்லை. காற்றாலை மின்சாரத்தினை வாங்கக்கூட அரசிற்கு மனமில்லை. சுற்றுச்சூழல் மாசு போன்ற பல விவகாரங்களில் தற்போதைய அரசு வேடிக்கை பார்த்ததே தவிர, வேறு எந்தப் பணியும் செய்யவில்லை. தொழில் வளர்ச்சிக்கு உகந்த வகையில் உள்நோக்கம் இல்லாமலும், ஊக்கப்படுத்தும் வகையிலும் அரசு செயல்பட ஆவனச் செய்யப்படும்.

4. தொழில் வர்த்தக அமைப்புகளுடன் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசு சந்தித்துப் பேசி, அவர்களின் கருத்துகளை அறிந்து தொழில்வளத்தினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

5. புதிய தொழில் தொடங்குவதில் அனுமதி பெறுவதில் உள்ள சிக்கல்களைக் களையவும், காலதாமத்தினைத் தவிர்க்கவும், லஞ்ச ஊழல்களை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து நிலையிலும் வெளிப்படைத்தன்மை நிலைநாட்டப்படும்.

6. சிறந்த சாலைகளை அமைக்கவும், தடையற்ற மின்சாரம், தண்ணீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் தொழில் வளர்ச்சிக்கு உரிய சூழ்நிலை ஏற்படுத்தப்படும்.

7. காற்றாலை மின்சார உற்பத்தி போன்ற துறைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தினைக் கொள்முதல் செய்வதில் உள்ள இடர்பாடுகள் களையப்படும்.

8. தொழில் வளர்ச்சியற்ற தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ஆராயப்படும். மாவட்டச் சுற்றுச்சூழ்நிலைக்கேற்ப தொழில் நிறுவனத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் மாசுபடுகிற இடங்களில் அரசாங்கம் ஒரு வெறும் பார்வையாளராக இல்லாமல் சூழல் மாசுபாட்டைக் குறைப்பதில் அரசாங்கம் செய்யக்கூடிய உதவிகளை உடனே செய்யக்கூடிய ஒரு பங்கேற்பாளராக அரசு இருக்கும் வகையில் விதிமுறைகள் வகுக்கப்படும்.

10. தொழில் தொடங்க மாவட்ட அளவில் ஒற்றைச்சாரள முறையில் அனுமதி வழங்கவும், குறிப்பிட்ட கால அளவில் அனுமதி விண்ணப்பங்களைப் பரிசீலிக்கவும் விதிமுறைகள் வகுக்கப்படும். தொழில் முனைவோர் மிரட்சியடைந்திடும் வகையில் செயல்படாமல் இணக்கச்சூழலில் பணிகள் நடந்திட நடைமுறைகள் மாற்றியமைக்கப்படும்.

11. சிறு, குறு தொழில்களில் ஈடுபட்டவர்களின் நலன்காக்க இத்தகைய நிறுவனங்களிடமிருந்து அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் கொள்முதல் செய்யப்படவேண்டிய பொருள்களின் அளவு 20 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

12. சிறு தொழில் முன்னேற்றம் தமிழ்நாட்டின் வருவாயைப் பெருக்குவதற்கும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் முக்கியமானதாகும். சிறு தொழில் முனைவோர் பயன்பெறும் வகையாக முதலீட்டுக் கடன் வசதி, சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

13. தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் ஆகிய கொள்கைகள் முனைப்பாகச் செயல்படுத்தும் வேளையில், தமிழ்நாட்டின் பாரம்பரிய குடிசைத் தொழில்கள் மற்றும் மரபுவழி தொழில்கள் ஆகியனப் பின்தங்க வாய்ப்பளிக்காமல், சாமான்ய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அவர்கள் ஏழ்மைநிலைக்குத் தள்ளப்படாமல் பாதுகாக்கும் வகையிலும், இம்மக்களின் வாழ்க்கையில் புத்தொளி பிறக்கச் செய்து, அவர்களுக்கெனத் தனித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, குடிசை மற்றும் மரபுவழித் தொழில்களைத் திரும்பவும் மேன்மைப்படுத்த ஆவன செய்யப்படும்.

14. **சேவைத்துறை :** தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் சுமார் 55 சதவிகிதம் சேவைத்துறையின் மூலமாக வருமானம் வருகிறது. தகவல் தொழில் நுட்பச் சேவை வேகமாக வளர்ந்து வருகிறது. சேவைத்துறை மேம்படுவதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும்.

15. **ஏற்றுமதி மற்றும் இறங்குமதி :** தாராளமயமாக்கல் கொள்கை உலக ஏற்றுமதி, இறக்குமதியை அதிகப்படுத்தி இருக்கிறது. தமிழ்நாட்டில் ஏற்றுமதி அதிகரிக்க ஊக்கப்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்படும். உலக நாடுகளில் இந்திய விவசாயப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிகமான தேவையைக் கண்டறிந்து, அந்த விவசாயப் பொருள்கள் (உதாரணமாக மூலிகைகள்) ஏற்றுமதியை ஊக்கப்படுத்த வேண்டிய திட்டங்கள் வகுக்கப்படும்.

16. **உள்கட்டமைப்பு வசதி :** தொழில்துறை முதலீடுகளை வெளிநாட்டிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்கு உலகத் தரம்வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் மிகவும் அவசியமானதாகும். உள்கட்டமைப்புத்துறை Department of Infrastructure Development ஏற்படுத்தப்படும். இந்தத் துறையின் மூலமாக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் தேவைகளைக் கணக்கிட்டு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

17. **மேலாண்மைக் கொள்கை :** உற்பத்தி பெருக்கம் நாட்டின் வருவாய் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தாமல் இருக்க சரியான, பலமான மேலாண்மைக் கொள்கையும், அக்கொள்கையைச் சரியாகச் செயல்படுத்தும் நிர்வாக அமைப்பும் முக்கியமானதாகும். நாட்டின் மொத்த உற்பத்தியைப் பெருக்குவதால் மொத்த வருவாய் உயர்ந்து மக்கள் நலன் மேம்பட்டுவிட்டது என்று கூறமுடியாது.

*அரசின் ஒத்துழைப்பு கொடுக்கும் ஊக்கத்தினால் உற்பத்தியைப் பெருக்கவும், அதன்மூலமாக வருவாய் பெருக்கமும், திசைமாற்றத்தை ஏற்படுத்திவிடாமல் உற்பத்தி பெருக்கமும் பொருளாதார உயர்வும் அடித்தட்டு மக்கள் வரைக்கும் சென்றடையும் வகையில் மேலாண்மைக் கொள்கை விவேகத்தோடு வகுத்து மக்கள் நலன் பாதுகாக்க ஆவனச் செய்யப்படும். இதற்காக ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு சரியான மேலாண்மைக் கொள்கை கோட்பாடுகள் வரையப்படும்.*

18. *இப்பொழுதுள்ள அரசுத் துறைகளின் கட்டமைப்பு கால வளர்ச்சிக்கேற்ப மாறாத பழைமையான முறையைக்கொண்டதாக உள்ளது. அது அன்றைய நாள்களில் இருந்த தேவைக்கேற்ப அரசு நிர்வாகத்தை மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பாகும். இன்றைய நிலைமைக்கேற்ப, மக்களின் எதிர்பார்ப்புக்கேற்ற அரசுத் துறைகளில் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இந்தக் கட்டமைப்பு இப்பொழுதுள்ள மக்கள் தொகைக்கேற்ப அமைக்கப்படும்.*

19. ***துறைகளின் செயல் நிறைவேற்ற அறிக்கை :*** *தொழில் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் குறித்து ஒவ்வொரு அரசுத் துறைக்கும் உள்ள பொறுப்புகள், செயல்படுத்தும் காலக்கெடு போன்றவைக் குறிக்கப்பட்டு, செயல் திட்டங்களை நிறைவேற்றும் அறிக்கைகள் மக்களுக்கு வெள்ளை அறிக்கையாகக் கொடுக்கப்படும். இச்செயல் நிறைவேற்ற அறிக்கைகள் சீராய்வு செய்து, காலம் தாழ்த்தாமல், மக்கள் பணத்தை வீணடிக்காமல் திட்டங்களை நிறைவேற்ற உரிய வகையில் செயல்படுத்தப்படும்.*

20. ***மக்களுக்குக் கணக்கு கொடுத்தல் :*** *தொழில் வளர்ச்சி தொடர்பான ஒவ்வொரு துறையும் பணிநிறைவுகளைக் காண்பிக்கும் அறிக்கைகள் சட்டசபையில் காலமுறைப்படி சமர்ப்பிக்கப்படும். மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும், தேவைகளுக்கும் முதலிடம் கொடுத்து, அரசுத் திட்டங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு சட்டசபையில் சமர்ப்பிக்கப்படும்.*

## 6. மின் உற்பத்தியைப் பெருக்குவோம்

தமிழகத்தில் ஐந்தாண்டுகளுக்குமுன்பு தினசரி 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. அ.தி.மு.க ஆட்சி அமைந்து, முதலீடு செய்து ஒரு மெகாவாட் மின்சாரத்தைக்கூட கடந்த ஐந்தாண்டுகளில் உற்பத்தி செய்ததில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் முதலீடு செய்து தொடங்கப்பட்ட வடசென்னை அனல்மின் நிலையம் மூலம் 600 மெகா வாட், தூத்துக்குடியில் தேசிய அனல் மின் நிலையம் மூலம் 400 மெகா வாட் கூடுதலாகத் தற்போது கிடைத்து வருகிறது. இதன்மூலம் சராசரியாக 8000 மெகா வாட் வரை மின்சாரம் கிடைக்கிறது.

ஆனால், தமிழகத்தில் தினசரி மின்சாரத் தேவை 12 ஆயிரம் மெகா வாட் முதல் 13 ஆயிரம் மெகா வாட். தமிழகத்திலுள்ள மின் உற்பத்தி நிலையங்களைப் பொருத்தவரை, புனல் மின் நிலையங்கள் மூலம் 1180 மெகா வாட், அனல் மின் நிலையங்கள் மூலம் 3555 மெகா வாட், கூடங்குளம் அணுமின் நிலையம் மூலம் 563 மெகா வாட், காற்றாலை மூலம் 497 மெகா வாட், எரிவாயு மூலம் 177 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார் துறைமூலம் 316 மெகா வாட் உள்பட மொத்தம் 6 ஆயிரத்து 288 மெகா வாட் உற்பத்தி செய்யப்படுகிறது. இதுதவிர மேலும் பல்வேறு வழிகளில் 1800 மெகா வாட் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழகத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து 5 ஆயிரத்து 429 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. இது விசாகப்பட்டிணத்திலுள்ள தேசிய அனல் மின் நிலையம் 887 மெகா வாட், நெய்வேலி அனல் மின் நிலையம் 474 மெகா வாட், நெய்வேலி முதல் விரிவாக்கம் 228 மெகா வாட், நெய்வேலி 2வது விரிவாக்கம் 271 மெகா வாட், ஒடிசா மாநிலம் தாள்சர் 490 மெகா வாட், வல்லூர் அனல் மின் நிலையம் 1067 மெகா வாட் மின்சாரம்

கிடைக்கிறது. குஜராத் உள்ளிட்ட வடமாநிலங்களிலுள்ள தேசிய அனல் மின் நிலையங்கள் மூலம் 415 மெகா வாட், கல்பாக்கம் அணுமின் நிலையம் மூலம் 331 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. இப்புள்ளிவிவரத்தின்படி மின் பற்றாக்குறை மாநிலமாகவே தமிழ்நாடு உள்ளது.

தற்காலிகமாக உற்பத்தி செய்யும் காற்றாலை மின்சாரத்தை நம்பி தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வை இருக்கிறது. மின்சாரத்தை உற்பத்தி செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வருகிற வருமானத்தை விரயம் செய்யும் வகையில்தான் அ.தி.மு.க. அரசாங்கம் நடந்துகொள்கிறது.

தமிழ்நாட்டில் 2 கோடியே 30 லட்சம் மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் ரூபாய் 900 கோடி வரை மின்சாரத் திருட்டு நடப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், மின்சார வாரியம் ரூபாய் 60 கோடி மட்டுமே அபராதமாக வசூலித்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் ஐந்தில் ஒருபங்குதான் பயன்பாட்டுக்குக் கிடைக்கிறது. மீதமுள்ள நான்கு பங்கு மின்சாரம் வீணாகி வருகிறது. திருவிழா, பொதுக்கூட்டம், அரசியல் கட்சி கூட்டம் போன்ற நிகழ்வுகளின்போது மின்சாரத் திருட்டு அதிகமாக நடக்கிறது. இது ஆளுங்கட்சியினரின் உதவியோடு நடப்பதால், மின்வாரிய அதிகாரிகள் கண்டுங்காணாமல் இருந்து வருகிறார்கள்.

மின்சார விநியோகத்தைப் பொருத்தவரை, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே பெரிய இடைவெளியிருக்கிறது. மின் பற்றாக்குறை நேரங்களில் கிராமங்களில் அதிகமாக மின்வெட்டு ஏற்படுகிறது. இதை முற்றிலும் தவிர்த்து சமநிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

சமீபகாலமாகச் சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து விவசாய மோட்டாரை இயக்க அரசு மானியம் வழங்குகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் சூரியசக்தியில் மின்சாரம் தயாரிக்க சாதனங்கள், அதற்குரிய மின்மோட்டார்கள் இலவசமாக வழங்க ஆவன செய்யப்படும்.

தற்போது மின்கட்டண உயர்வு என்பது பெரும் சுமையாக அமைந்துள்ளது. ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்த மின்கட்டணத்தைவிட தற்போது பலமடங்கு மின் கட்டணம் உயர்ந்துவிட்டது. கட்டட வாடகைக்கு நிகராக மின் கட்டணம் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. விசைத்தறி கூடங்களுக்கு மின் சலுகை அளிப்பதைப்போல, சிறு, குறு பனியன் தொழில் துறையினருக்கும் மின் கட்டணச் சலுகை அறிவித்தால், மேலும் வர்த்தக வளர்ச்சி ஏற்பட வாய்ப்பாக இருக்கும். திருப்பூர் போன்ற தொழில் வளம் அதிகமாகக் குவிந்துள்ள நகரங்களில் தனியாகத் துணை மின் நிலையம் அமைக்கப்படுவதன்மூலம் மின் தேவையை ஈடுகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் காற்றாலை மின்சாரம், சூரியஒளி மின்சாரம் ஆகியவற்றைத் தமிழக மின்சார வாரியம் மூலமாகக் கொள்முதல் செய்யவேண்டும். இதன்மூலம் மின்தட்டுப்பாட்டைப் பெருமளவில் குறைக்க முடியும். ஆனால், தமிழக அரசு தனியார் துறையிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதால், தமிழ்நாடு மின்சார வாரியம் திவாலாகிற நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றி அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மின்சார வாரியத்தில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கணக்கெடுக்கப்பட்டு மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இது பொதுமக்களிடையே கடும் அதிருப்தி உருவாகி வருகிறது. ஒரே நேரத்தில் அதிகக் கட்டணம் செலுத்துவதைத் தவிர்க்கும் வகையில் மாதம் ஒருமுறை கணக்கெடுப்பு நடத்தி, மின் கட்டணம் செலுத்தும் நடைமுறை கொண்டுவர ஆவன செய்யப்படும்.

தமிழக அரசின் அனைத்து அரசு அலுவலகக் கட்டடங்கள், கோயில்கள், கல்விக் கூடங்கள் ஆகியவற்றில் சூரியஒளி மின் உற்பத்தி செய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அ.தி.மு.க. அரசால் முடக்கப்பட்ட செய்யூர், உடன்குடி அனல் மின் திட்டத்தை நிறைவேற்றுவோம்.

**சூரிய மின்சக்திக்கு முன்னுரிமை**

காற்றாலைகள், சூரியசக்தி, நீர்மின் திட்டங்கள் வாயிலாக மின்சாரம் உற்பத்தி செய்யும்போது சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுவதில்லை. எனவே, மரபு சாரா எரிசக்தி திட்டங்களுக்கு அனைத்து நாடுகளிலிருந்தும் ஆதரவு அதிகரித்து வருகிறது. இந்தியாவில் தற்போது ராஜஸ்தான் மாநிலம் சூரிய மின்சக்தி உற்பத்தியில் முதல்இடம் வகிக்கிறது. 2022ஆம் ஆண்டுக்குள் மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களில் மின் உற்பத்தித் திறனை 1 லட்சத்து 75 ஆயிரம் மெகா வாட் அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. தற்போது நாட்டின் சூரிய மின் உற்பத்தித்திறன் 5400 மெகா வாட் என்கிற அளவில்தான் உள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் சூரியசக்தி மின் உற்பத்தித் திறனை 18 ஆயிரம் மெகா வாட்டாக உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இச்சூழலில், தமிழக அரசு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுகிற வகையில் பல்வேறு சலுகைகள், மானியங்கள் வழங்கப்பட்டு சூரிய மின்சக்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படும். இதன்மூலம் தமிழக மக்கள் அனுபவித்து வருகின்ற மின் பற்றாக்குறையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும். **வீடுகளில் அமைக்கப்படும் சூரியசக்தி மின் திட்டத்திற்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்க ஆவன செய்யப்படும்.**

குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களில் சூரிய மின்சக்தியைப் பயன்படுத்த தொழில்நுட்பக் கட்டமைப்புகளை மேம்படுத்துகிற வகையில் Net Metering கொள்கை வகுக்கப்படும். தமிழக மின்சார வாரிய ஊழியர்களுக்கு இதுகுறித்து பயிற்சிகள் வழங்கப்படும். தமிழகத்தில் ஒரு லட்சம் Net Metering அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தீவிர நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்யப்படும்.

## 7. அரசு நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்வோம்

அரசு நிர்வாகம் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பு. இதில் அமைச்சர்கள் சுதந்திரமாகச் செயல்படவேண்டியது அவசியம். அப்போதுதான் அந்தந்தத் துறைகளின் தேவைகள் உடனே பூர்த்தியாகும். அரசு நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் அவசியம் என்ற குரல் தமிழ்நாட்டில் இப்போது வலுவாக இருகின்றது. முடங்கிப்போயிருக்கும் அரசு நிர்வாகத்தினை மேம்படுத்தும் வகையில் காங்கிரஸ் கீழ்க்கண்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்.

1. பொதுமக்களின் மனுக்கள்மீது பதினைந்து தினங்களுக்குள் பதிலளிப்பது கட்டாயமாக்கப்படும்.
2. அரசு சேவைகள், அரசு நிறுவனங்களின் சேவைகள் உரிய காலத்தில் வழங்கப்படாவிட்டால் புகார்கள் பதிவு செய்வதற்கும், விசாரிப்பதற்கும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நிர்வாகச் சேவை குறைபாடு விசாரணை நீதிமன்றங்கள் அமைக்கப்படும். இன்றைய சூழ்நிலையில் உயர்நீதிமன்றங்களின் ரிட் அதிகாரத்தினைப் பயன்படுத்துவது எல்லாருக்கும் இயலாது. எனவே, மாவட்ட அளவில் அரசுப் பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும்.
3. அரசு நிர்வாகத்தில் ஊழல்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். மாநில அளவில் உயர்மட்ட ஊழல் புகார்களைப் புலனாய்வு செய்யவும், விசாரணை செய்யவும் தற்போதுள்ள அமைப்புகளைச் சீரமைப்பு செய்து உரிய அதிகாரங்களுடன் வலிமைப்படுத்தப்படும்.
4. பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், சொத்து தொடர்பான சான்றிதழ்கள், ஓய்வூதியப் பயன்கள், குடும்ப அட்டைகள் மற்றும் அரசின் நலத் திட்டங்கள் ஆகியவை தங்குதடையின்றிக் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் சேவை உரிமைச் சட்டம் நிறைவேற்றப்படும்.
5. அரசு துறைகளில் உள்ள காலியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும். வெளிப்படையான தேர்வு முறைகள்மூலம் அரசுப் பணிகள் நிரப்பப்படும். நேர்முகத் தேர்விற்கான முக்கியத்துவம் குறைக்கப்படும்.
6. லட்சக்கணக்கான மாணவர்கள் அரசின் குரூப் 1 போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகின்றனர். இந்தத் தேர்வுகள் மத்திய அரசின் தேர்வுகளைப்போன்றே வருடாவருடம் குறிப்பிட்ட காலத்தில் வெளிப்படையாக

நடைபெறுவது உறுதிசெய்யப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தனி அதிகாரம் உறுதிசெய்யப்பட்டு, இறையாண்மையும் மாண்பும் பழுதுபடாமல் பாதுகாக்கப்படும்.

7. அரசு அலுவலகங்கள் அலுவல் நேரத்தில்மட்டும் இயங்குவது கண்காணிக்கப்படும். இது பணியாளர்களுக்குப் பணிச்சுமையைக் குறைப்பதுடன், இடைத்தரகர் நடமாட்டத்தைக் குறைக்கும். CCTV காமிரா பொருத்தி அலுவலகம் இயங்குவது கண்காணிக்கப்படும்.

## 8. உள்ளாட்சியில் நல்லாட்சி அமைத்திடுவோம்

*கிராமப் பஞ்சாயத்து சட்டம்மூலம் கிராமப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட பஞ்சாயத்து என மூன்றடுக்குகள் கொண்டதாகத் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. மத்திய — மாநில அரசுக்கு நிகரான ஓர் அங்கீகாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தி எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் விளைவாக, அவரது மறைவிற்குப்பிறகு, 1993ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டதுதான் 'பஞ்சாயத்ராஜ் அரசியல் சாசன திருத்த சட்டம்' ஆகும். அதனடிப்படையில் தமிழக ஊராட்சிகள் சட்டம் 1994இல் நிறைவேற்றப்பட்டது.*

*இச்சட்டத்தின்படி மாநிலத்தில் நேரடி வரி வருவாயில் 8 சதவிகிதத்தைப் பஞ்சாயத்துக்கு ஒதுக்கீடு செய்வதென்றும், அதில் மூன்றடுக்கு அமைப்புகளாகக் கருதப்படும் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றுக்கு முறையே 55 சதவிகிதம், 35 சதவிகிதம், 10 சதவிகிதம் எனப் பிரித்து வழங்கப்பட வேண்டும். கேரள மாநிலத்தை எடுத்துக்கொண்டால், அம் மாநிலத் திட்ட ஒதுக்கீட்டில் 44 சதவிகித அளவுக்குப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டில் ஒவ்வொரு பஞ்சாயத்தையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், ஒதுக்கும் நிதி சராசரியாக 2 லட்சம் ரூபாயாகவும், கேரள அரசு ஒதுக்கும் நிதி 4 கோடி ரூபாயாகவும் உள்ளதை நம்மால் ஆச்சரியத்துடன் உணரமுடிகிறது.*

*பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தி கொண்டுவந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தினை நடைமுறைப்படுத்த, 1994இல் மாநில அரசு கொண்டுவந்த தமிழ்நாட்டின் சட்டத்தில் கிராம சபையின் அதிகாரங்கள் தெளிவாகக் கூறப்படவில்லை. குறிப்பாக, ஆண்டு வரவு செலவு திட்டத்தை முடிவுசெய்வது கிராம சபை அல்ல. பட்ஜெட் தயாரிப்பதில் அல்லது பட்ஜெட்டை அங்கீகரிப்பதில் உறுதியான அதிகாரம் ஏதும் கிராம சபைக்கு இருப்பதாகத் தெரியவில்லை. கிராமப் பஞ்சாயத்து நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் கிராம சபைக்குக் கொடுக்கப்படவில்லை. கிராம சபை என்ற அமைப்பு ஏட்டளவில் இருந்ததே தவிர, எந்த ஒரு பஞ்சாயத்திலும் செயல் அளவில் இல்லை. எனவே, பஞ்சாயத்து செயல்படுகிறது என்பதைக் கட்டாயமாக்கும் வகையில் தமிழக ஊராட்சிகள் சட்டத்தைத் திருத்தம் செய்யவேண்டும்.*

*மாவட்டப் பஞ்சாயத்தின் நிலை மிக பரிதாபகரமாகத் தோன்றுகிறது. இந்த அமைப்புக்கு எந்த முக்கிய அதிகாரமும் தரப்படவில்லை. மாவட்ட அளவிலான தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்குத் தரவேண்டிய அந்தஸ்தோ, அதிகாரமோ இவ்வமைப்புக்கு இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்பட்டு நடப்பவராகவே மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் செயல்படுவது ராஜிவ் கண்ட கனவுக்கு விரோதமானதாகும். அதேபோல், மாவட்டப் பஞ்சாயத்தின் அதிகாரத்துக்கு மாவட்டக் கிராமப்புற வளர்ச்சி முகமை கொண்டுவரப்படவில்லை. கர்நாடக மாநிலத்தில் இருப்பதைப்போல், மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவரே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவராக இருக்கும்வகையில், சட்டத்திருத்தம் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்தப் பஞ்சாயத்துராஜ் சட்டமே ஒரு கேலி கூத்தாக முடியும். இச்சட்டத் திருத்தத்தின்மூலம்தான் 73வது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் உண்மையான நோக்கத்தை அடையமுடியும்.*

தமிழகத்தில் பஞ்சாயத்துராஜ் அமைப்புமுறை எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை கள ஆய்வுசெய்து பார்த்ததில் நமக்கு வேதனைதான் மிஞ்சுகிறது. அமரர் ராஜிவ்காந்தி எந்த நோக்கத்திற்காகப் பஞ்சாயத்துராஜ் அமைப்பைக் கொண்டுவந்தாரோ, அவரது கனவு நிறைவேறியதா எனப் பார்க்கும்போது தமிழ்நாட்டைப் பொருத்தவரை நமக்கு அதிர்ச்சிதான் ஏற்படுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல், ஜனநாயகமுறையில் — சுதந்திரமாக — நியாயமாக நடைபெறுகிறதா என்பதைச் சீர்தூக்கிப் பார்த்ததில் மிகப்பெரிய ஏமாற்றம்தான் ஏற்படுகிறது. மாநிலத் தேர்தல் ஆணையம் என்பது மாநிலத்தை ஆளுகிற கட்சியின் கைப்பாவையாகச் செயல்படுவதால் உள்ளாட்சித் தேர்தல்களில் தில்லுமுல்லுகள் தலைவிரித்தாடுகிறது. எனவே, அரசு கட்டுப்பாட்டில் இல்லாதவகையில் மாநிலத் தேர்தல் ஆணையம் செயல்படவேண்டும். அப்படிச் செயல்படுவதற்கு உரிய சட்டத்திருத்தம் கொண்டுவரவேண்டும். அதன்மூலம்தான் சுதந்திரமான தேர்தலை உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடத்தமுடியம்.

பஞ்சாயத்துக்களில் உண்மையான நிர்வாகத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கவேண்டும் என்பது பஞ்சாயத்துராஜ் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாகும். இந்தக் கருத்தைத் தமிழ்நாடு பஞ்சாயத்துராஜ் சட்டம் — 1958 பெருமளவிற்கு அங்கீகரித்தது. 1983ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கர்நாடகப் பஞ்சாயத்துராஜ் சட்டம் இக்கோட்பாட்டை உறுதியாக அங்கீகரித்தது. ஆனால், தமிழகத்தில் பஞ்சாயத்து அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதற்கு மாநில அரசு தயாராக இல்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கப்படுகிற அதேநேரத்தில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் கொடுக்க எவரும் முன்வருவதில்லை. இது மிகப்பெரிய அநீதியாகும். மக்களுக்கே அதிகாரம் என்ற லட்சியம் நிறைவேற வேண்டுமானில், மக்கள் பங்கேற்கும் ஜனநாயகம் தழைக்கவேண்டுமெனில், உள்ளாட்சி அமைப்புகள் சுயமாக — சுதந்திரமாகப் போதிய நிதிவசதியுடன் செயல்பட சட்டத்திருத்தம் கொண்டுவரவேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குவதில் ஆளுங்கட்சி ஆதாயநோக்கத்தோடு, சிண்டிகேட் அமைத்து, மாவட்ட — வட்டார ஒப்பந்தகாரர்கள் அளவில் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தங்களை அதிகாரவர்க்கத்தின் துணையோடு சட்டவிரோதமாகப் பகிர்ந்துகொள்வது இன்றைக்குத் தமிழகம் முழுவதும் நடந்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளில் ஊழலின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிற இந்த நடைமுறை உடனடியாகக் களையப்படவேண்டும். இதை முற்றிலும் போக்குகிறவகையில் மாவட்ட நீதிபதி தலைமையில் ஊழல் தடுப்புக்குழு அமைக்கப்படவேண்டும். அதனைக் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தும்.

- ❖ உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் சிறப்பான முறையில் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- ❖ ஊழலுக்கு வழிவகுக்கும் கட்டட அனுமதிமுறைகளில் உள்ள ஓட்டைகள் களையப்படும்.
- ❖ உள்ளாட்சியில் வாங்கப்படும் பொருள்கள் சந்தை விலையைவிட பலமடங்கு அதிகமாக வாங்கப்படுவதால் ஊராட்சிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்படுகின்றது. உள்ளாட்சிகள் பொருள் கொள்முதல் செய்வதற்கு உரிய விதிமுறைகள் ஏற்படுத்தப்படும்.
- ❖ அனைவருக்கும் குழாய்மூலம் குடிநீர் பெறுவது அடிப்படை உரிமையாக்கப்படும். குடிநீர் இணைப்பு வழங்குவதில் உள்ள ஊழல்கள் களையப்படும். கட்டணமின்றிக் குடிநீர் வழங்கப்படும்.
- ❖ அனைத்து வீடுகளிலும் கழிப்பறை கட்டாயமாக்கப்படும். கழிப்பறை கட்ட அரசு மானியம் 100 சதவிகிதம் வழங்கப்படும். சாலைகளில், தெருக்களில் மலம் கழிப்பது இழிவானது, சுகாதாரக்கேடானது என்பதை மக்கள் உணர்ந்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

❖ உள்ளாட்சி அமைப்புகளில் நடக்கும் ஊழல்களைப் புலன்விசாரணை செய்யவும் நடவடிக்கை எடுக்கவும் புதிய அமைப்புகள் நிறுவப்படும்.

❖ உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவேண்டிய நிதியுதவிகள் அனைத்தும் உரிய காலத்தில் வழங்கப்படும்.

❖ ஒவ்வொரு பேருந்து நிறுத்தத்திலும் தூய்மையான கழிப்பறை வசதி செய்யப்படும். உள்ளாட்சி அமைப்புகள் தெருக்களில் பொதுக்கழிப்பறை செய்து கொடுப்பது கண்டிப்பாக்கப்படும். பெண்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் வகையில் தனிக் கழிப்பறை உருவாக்கப்படும்.

❖ நகரங்களுக்கு இணையாகக் கிராமங்களிலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். சாலை வசதி, தெருவிளக்குகள், குடிநீர், சூரியசக்தி மின்சாரம், மருத்துவமனை, காய்கறி அங்காடி போன்ற வசதிகள் கிராமத்திலேயே கிடைப்பதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ கிராமப்புற இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்கப்படும். சுய தொழில்கள் தொடங்குவதற்கு வங்கிக் கடன் வழங்கப்படும்.

## அமரர் ராஜிவ்காந்தி அவர்களின் கனவு மெய்ப்பட...

❖ இந்திய மக்கள் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கவும், அதிக அளவு குடியாட்சியையும், பொறுப்புணர்ச்சியையும் உறுதிப்படுத்துகிற வகையில் மக்களுக்கு அதிகாரம் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

❖ கிராம அளவில் பொறுப்பும் அக்கறையும் மனிதப் பண்பும்கொண்ட நிர்வாகத்தை உருவாக்குவோம்.

❖ தன்னாட்சியுடன் கூடிய பஞ்சாயத்து அமைப்புகளை உருவாக்குவோம் என்பதே, 73வது சட்டத்திருத்தத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். இந்தக் கொள்கை தமிழக அரசு நிறைவேற்றிய சட்டத்தால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதை உடனடியாக நிவர்த்தி செய்கிற வகையில், தமிழக அரசின் சட்டத்தில் மாற்றம் செய்வோம்.

❖ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துராஜ், நகர்பாலிகா பிரதிநிதிகள், அரசு அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதைப்போன்ற தற்போதைய நடைமுறை முற்றிலும் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அரசு அதிகாரிகளுக்குத் தவறுகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும்தான் அதிகாரம் இருக்கவேண்டும். மற்ற வகையில், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் செயல்பாட்டில் தலையீடு இருக்கக்கூடாது.

❖ உரிமைகளும் அதனைக் கவனிக்கும் பொறுப்பையும் அதற்கு அடுத்த உயர்நிலைப் பஞ்சாயத்துக்கே வழங்கவேண்டும். அதாவது களைக்கும் உரிமையும், கண்காணிக்கும் பொறுப்பும், கிராமப் பஞ்சாயத்திடமும், ஒன்றிய பஞ்சாயத்திடமும் அமையவேண்டும். இவ்வுரிமையினை அரசு அதிகாரிகளிடம் அளிக்கக்கூடாது. இதன்மூலம் மூன்றடுக்குப் பஞ்சாயத்து முறையில் இணக்கமும் ஒருங்கிணைப்பும் ஏற்பட்டு, ஆரோக்கியமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும்.

❖ கீழ்த்தட்டு நிலையில் செய்யவேண்டியதை அந்த நிலையிலேயே செய்தல் வேண்டும்; மேல்தட்டு நிலையில் அதனை செய்தல் கூடாது. இதுவே, அதிகாரப் பங்கீடு மற்றும் செயல்பாட்டின் அடிப்படைக் கொள்கை யாகும். ஒவ்வொரு தட்டுக்கும் உரிய அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் சட்டத்தின் மூலமாகப் பகிர்ந்தளித்துவிட்டால், அரசு நிர்வாகத்தின் தலையீடு இல்லாமல் பாதுகாக்கப்படும்.

❖ ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டப் பஞ்சாயத்துக் கட்டமைப்பு, அல்லது பஞ்சாயத்துக்களின் பேரவை அமைக்கப்படவேண்டும். இதன் தலைவராக முதலமைச்சர் இருக்கவேண்டும்.

இப்பேரவையின்மூலம் பஞ்சாயத்துக்கள் குறித்த பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, தீர்வுகாணப்பட வேண்டும்.

❖ மத்திய, மாநில அரசுகளால் தீட்டப்பட்ட நிதி உதவியுடன் அளிக்கப்படும் திட்டங்களை நிறைவேற்றும் முகவராக மட்டும் பஞ்சாயத்துக்கள் செயல்படக்கூடாது. கிராமம், ஒன்றியம், மாவட்டம் ஆகியவற்றின் பஞ்சாயத்துக்களால் உருவாக்கப்பட்டு அளிக்கப்படும் திட்டங்களாக மாவட்ட அளவிலான திட்டங்களாக அமையவேண்டும். இவ்வாறின்றி, அதற்கு மேல்நிலையில் தீட்டப்பட்டு, ஒப்படைக்கப் படும் திட்டங்களாக அவை அமையக்கூடாது.

❖ மாநிலத் திட்ட நிதியிலிருந்தும், பிற நிதிவள ஆதாரங்களிலிருந்தும் பஞ்சாயத்துக்கள் உரிய விகிதத்தைப் பெறுதல் வேண்டும். இதை வழங்குவது தமிழக அரசின் விருப்புரிமையாக இருக்கக்கூடாது. இவை மாநில நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவாகக் காட்டப் படுதல் வேண்டும்.

❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பஞ்சாயத்து தலைவரே மாவட்டத் திட்டக் குழுவிற்குத் தலைவராக இருக்கவேண்டும். மூன்று நிலைப் பஞ்சாயத்துக் களுக்கான உறுப்பினர்களை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இத்துடன் கிராமப் பஞ்சாயத்துக்களின் தலைவர், இடைநிலைப் பஞ்சாயத்து உறுப்பினராக இருக்கலாம். இடைநிலைப் பஞ்சாயத்துக்களின் தலைவர்கள், மாவட்டப் பஞ்சாயத்துக்களின் உறுப்பினர்களாக இருக்கலாம்.

❖ தேர்தல் பணிகளை மேற்பார்வையிட்டு நடத்துதல், கட்டுப்படுத்துதல், வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள சுயேட்சையான, நேர்மையான தேர்தல் ஆணையம் அமைக்கவேண்டும். தற்போதுள்ள தேர்தல் ஆணையம், அரசு கட்டுப்பாட்டில் உள்ளது என்கிற அச்சத்தைப் போக்கவேண்டும்.

❖ ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் வீடுகட்ட அனுமதி, வரி விதிப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, குடியிருப்பு மனைகளுக்கு அனுமதி ஆகியவற்றிக்கு அனுமதி தருவதில் திறந்த வெளிப்படையான அணுகுமுறையை உருவாக்க வேண்டும். இதைச் செய்தால், ஊழலின் ஊற்றுக்கண்ணை அடைக்க வாய்ப்பு ஏற்படும்.

❖ தங்களது பணிகளைச் செயல்படுத்த பஞ்சாயத்துக்களுக்கும், நகராட்சிகளுக்கும் போதுமான நிதி ஆதாரம் தேவை. மாநில அரசிடமிருந்து வரும் மானியங்கள் முக்கிய நிதி ஆதாரமாக இருக்கும். ஆனால், சில குறிப்பிட்ட வரிகளால் கிடைக்கும் வருமானத்தையும் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகளுக்கு மாநில அரசுகள் ஒதுக்க வேண்டும். சில சூழ்நிலையில் உள்ளாட்சி அமைப்புகள் திரட்டிய நிதியைத் தன்னிடமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

எனவே, அருமைத்தலைவர் அமரர் ராஜிவ்காந்தி கண்ட கனவை நிறைவேற்ற, அன்னை சோனியா காந்தி தலைமையில், இளந்தலைவர் ராகுல்காந்தி வழிகாட்டுதலில் மக்களுக்கே அதிகாரம் வழங்கும் உள்ளாட்சியில் நல்லாட்சி அமைந்திட சூளுரை ஏற்போம்.

## வேலைவாய்ப்பு

❖ எல்லாருக்கும் வேலை, ஒவ்வொரு குடும்பத்திலும் கட்டாயம் ஒருவருக்கு வேலை என்பதே எமது நோக்கமாகும். தொழில்துறை, சேவைத்துறை, பொதுத்துறை, கட்டமைப்பு வசதிகள் மூலமாக வேலைவாய்ப்புகளைப் பெருக்குவோம். வேளாண்மை, வேளாண்மையைச் சார்ந்த தொழில்கள் மூலமாக வேலைவாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்வோம்.

❖ சுயவேலை திட்டங்கள் தொடங்க வங்கிக்கடன் வழங்கப்படும். இதன்மூலம் புதிய புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம்.

**பெண்களுக்கு *50* சதவிகிதம் இடஒதுக்கீடு**

- ❖ உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான 33 சதவிகித இடஒதுக்கீட்டைக் கொண்டுவர காங்கிரஸ் அரசு பாடுபட்டு சட்டம் நிறைவேற்றியது. அதன்வாயிலாக, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், கிராமப் பஞ்சாயத்து, மாவட்ட பஞ்சாயத்து போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள இடங்களில் மூன்றில் ஒருபங்கு இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்படுகின்றன.

- ❖ 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின்போது மொத்தம் உள்ள 1 லட்சத்து 32 ஆயிரத்து 456 பதவிக்கு 44 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க மத்திய காங்கிரஸ் அரசு மசோதா கொண்டுவந்தது. ஆனால், இன்று தமிழக அரசே பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 50 சதவிகிதமாகக் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அரசியல் ஆதாயத்தோடு உயர்த்தியுள்ளது. இதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் பாதிக்குப்பாதி பெண்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இந்நிலை நீடிக்க என்றும் உறுதியேற்போம்.

## 9. இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபிறகு, இயற்கை வளங்கள் தனியாருக்குத் தாரைவார்ப்பது தொடர்கதையாக நடந்து வருகிறது. இயற்கை வளங்களைத் தனியாருக்கு வழங்குவதில் வெளிப்படைத்தன்மை இல்லாமல், ஊழலின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. இதன்மூலம் அ.தி.மு.க.வின் கஜானாவை நிரப்புகிற வகையில் கிரானைட், தாதுமணல், மணல் கொள்ளை தங்குதடையின்றி நடைபெற்று வருகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, வேளாண் தொழில் கடுமையாகப் பின்னடைவைச் சந்தித்து வருகிறது. இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை உருவாக்கப்படுவதோடு, தமிழக அரசே நேரடியாக ஈடுபடுகிற வகையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கவேண்டும். இதன்மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்குவதற்குத் தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். கட்டடத் தொழிலுக்கு ஆற்றுமணல் வழங்குவதில் வெளிப்படைத்தன்மை இருக்கவேண்டும்.

மதுரை மாவட்டத்தில் நடந்த கிரானைட் முறைகேடுகள்மூலம் ரூபாய் 1 லட்சத்து 16 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக இதற்கென அமைக்கப்பட்ட விசாரணைக்குழு கடந்த நவம்பர் 23, 2015 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது. மேலும், மனித உயிர்களும் நரபலி கொடுக்கப்பட்டுள்ளன என்று அதிர்ச்சியான தகவலையும் வெளிப்படுத்தியுள்ளது. எனவே, இதுகுறித்து மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் விசாரிக்க சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரைக்க வேண்டுமென விசாரணை அதிகாரி கூறியிருக்கிறார். இதுகுறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க துணைப்புரிவோம்.

தமிழகத்தில் நீர்நிலைகளின் ஆக்கிரமிப்பை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கூட்டணி அமைத்து தங்குதடையின்றிச் செய்து வருகின்றனர். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்குக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஏரி புறம்போக்கு, வரவு கால்வாய் புறம்போக்கு, தண்ணீர் பிடிப்பு புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு போன்றவற்றை ஆக்கிரமிப்பதைத் தடுத்துநிறுத்த தமிழக அரசு தனிச்சட்டம் இயற்ற ஆவன செய்யப்படும்.

மணல் கொள்ளைமூலம் நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் அரசு ஆணை எதுவும் இல்லாமல், சட்டவிரோதமாக மணல் கொள்ளையை அனுமதித்ததைப்போல வேறு எந்த மாநிலத்திலும் அனுமதித்திருக்க மாட்டார்கள். கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் எப்படி அரசு அனுமதி இல்லாமல் ஒருபிடி மணலைக்கூட ஆற்றிலிருந்து எடுக்க முடியாதோ, அத்தகைய நிலையைத் தமிழகத்தில் ஏற்படுத்த ஆவன செய்யப்படும்.

## 10. நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்போம்

நதிநீர்ப் பங்கிடுகளில் காலம்காலமாக நாம் அனுபவித்துவரும் உரிமைகளுக்கு எதிராக அண்டை மாநிலங்களோடு பல்வேறு மோதல்கள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. காவிரி பிரச்சினையில் நடுவர்மன்றம் அளித்த இறுதித்தீர்ப்பைக் கர்நாடக அரசு ஏற்க மறுக்கிறது. இறுதித்தீர்ப்பைச் செயல்படுத்துவதற்குக் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய பா.ஜ.க. அரசு கடந்த 22 மாதங்களாகக் காலம் தாழ்த்தி வருகிறது. தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்ட, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காவிரி நடுவர்மன்றத் தீர்ப்புக்கு விரோதமாக மேகதாதுவில் அணை கட்டுவதற்குக் கர்நாடக அரசு முயற்சி செய்கிறது. இதைத் தடுத்து நிறுத்துகிற வகையில் மத்திய அரசை வலியுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முல்லை பெரியாறு அணை விவகாரத்தில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நிறைவேற்றுவதற்குக் கேரள அரசு மறுத்து வருகிறது. அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தவேண்டும் என்பதற்கு மாறாகப் பல்வேறு நடவடிக்கைகளைக் கேரள அரசு எடுத்து வருகிறது. தமிழக விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கிற வகையில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்திற்குச் சேரவேண்டிய காவிரி நீர், முல்லைபெரியாறு, பாலாறு ஆகிவற்றில் கிடைக்காமல் தமிழகம் வஞ்சிக்கப்பட்டு வருகிறது. தற்போது கிடைத்துள்ள உரிமைகள் அனைத்தும் நீதிமன்ற ஆணைகள் மூலமாகவே கிடைத்துள்ளன. ஆகவே, நதிநீர்ப் பிரச்சினைகளைத் நான்கு தென்னக மாநிலங்களும் கூட்டுறவு முறையில் தீர்த்துக்கொள்வது, மிகவும் சிறப்பாகவும், எல்லாத் தென்னக மாநிலங்களுக்கும் நன்மைப்பயப்பதாகவும் இருக்கும். இதற்காகத் தென்னக மாநிலங்களின் ஒருங்கிணைப்புக்குழு அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும். இதன்மூலமாக நான்கு மாநிலங்களிலுள்ள நீர்ப்பாசன வசதிகளை எல்லா மாநிலங்களும் பயன்பெறும் விதமாக உபயோகப்படுத்த முடியும். இதற்கான முன்முயற்சிகளைத் தொய்வின்றிச் செய்வோம்.

## 11. சமூக நீதியைப் பாதுகாப்போம்

இந்திய அரசமைப்புச் சட்டம் 1950 அமலுக்கு வந்தவுடனே தமிழகத்தில் பின்பற்றி வந்த இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு மிகப்பெரிய பேராபத்து ஏற்பட்டது. இதிலிருந்து பின்தங்கிய சமுதாய மக்களைப் பாதுகாப்பதற்காகப் பெருந்தலைவர் காமராஜரின் தீவிர முயற்சியின் காரணமாக, இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தார். இதன்மூலம் சமூகம், கல்வி நிலைகளில் பின்தங்கிய மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டது. இதன்மூலம் சமூக நீதி காப்பாற்றப்பட்டது.

- தமிழகத்தில் நீண்டகாலமாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் இடஒதுக்கீடுச் சலுகையைப் பெற்று வருகிறார்கள். இதற்குச் சமீபகாலமாக மிகப்பெரிய சவால்கள் ஏற்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 69 சதவிகித இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறது. இதை உறுதிசெய்கிற வகையில் சட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- மத்திய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்குகிற வகையில் 2006இல் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியது. சில துறைகளில் 9 முதல் 12 சதவிகிதம் வரைதான் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதன் பயன் இடஒதுக்கீட்டு அடிப்படையில் முழுமையாகச் சேருகிற வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ **தனியார் துறையில் இடஒதுக்கீடு:** தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் சட்டம் இயற்றவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கோரிக்கை வைத்துள்ளது. கடந்த அக்டோபர் 2006இல் மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது இதுகுறித்து CII, ASSOCHAM, FICCI ஆகிய வர்த்தக அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் தங்களின் உறுப்பு நிறுவனங்களில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்க இந்த அமைப்புகள் ஒப்புக்கொண்டன.

❖ தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்குவதற்கு முறையான சட்டம் இயற்றப்படாததால் இதை நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனியார் துறைகளில் 27 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கவேண்டுமென்று 31.12.1980இல் சமர்ப்பிக்கப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றைச் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ இந்திய அரசியலில் ஜனநாயகத்தைத் தழைக்கச் செய்த பெருமை இந்திய தேசிய காங்கிரசுக்கு மட்டுமே உண்டு. வலிமையான மதச்சார்பின்மைக் கொள்கையை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி எவ்வித சமரசமும் இல்லாமல் நடைமுறைப்படுத்தி நாட்டுமக்களின் நலனைத் தொடர்ந்து பாதுகாக்கும்.

❖ ஜாதி, மத, பேதமற்ற உணர்வில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார உயர்வுக்கு வழிகோலுவதுடன், சமநோக்குப் பார்வையில் சட்டவரையறைகளின்படி அனுமதிக்கப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் சமரசமின்றிக் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து நடைமுறைப்படுத்தும். மேலும், தனியார் துறைகளிலும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் இடஒதுக்கீட்டைப் பகிர்வுப்படுத்துவதற்கான சட்டத்திருத்தம் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

❖ இடஒதுக்கீட்டுக் கொள்கை வகுக்கப்பட்டும், அதனை முறையாகவும், முழுமையாகவும் நடைமுறைப்படுத்தாத நிலையே நீடிக்கிறது. அரசுத் துறைகளில் மாநில அரசு கடைப்பிடிக்கும் இடஒதுக்கீடுமுறை பற்றிய வெள்ளை அறிக்கை அவ்வப்போது வெளியிடப்படும்.

## 12. நீதித்துறையைச் சீரமைப்போம்

### சட்ட ஒழுங்கு காப்போம்

எல்லா மக்களுக்கும் நீதி கிடைக்கும்பொழுதே மக்கள் நலன் முழுமையாகக் காக்கப்படுகிறது. நீதிமன்றங்களில் லட்சக்கணக்கான வழக்குகள் எப்பொழுதுமே நிலுவையில் இருந்துகொண்டிருப்பது, மக்கள் நலன் எப்பொழுதுமே பாதிக்கப்படுகிறது என்பதே உண்மையாகும்.

நீதிமன்றக் கட்டணங்கள்மூலம் வரும் வருவாயில் 90 சதவிகிதம் வேறு துறைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. நூறு சதவிகிதத்தையும் நீதித்துறைக்கே பயன்படுத்தினால், நீதித்துறைக் கட்டமைப்பு, நீதிமன்றங்களின் எண்ணிக்கை, நீதிபதிகளின் எண்ணிக்கை, வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படுகிற வசதிகள் ஆகிய நீதித்துறை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் மறுசீராய்வு செய்ய சிறப்புக்குழு அமைக்கப்படும். இக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, மக்களுக்கு விரைவான நீதி கிடைக்க திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும்.

**காவல்துறை :**

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் காவல்துறையின் பங்கு மிகவும் முக்கியமானது. முதலாவதாக, தமிழ்நாட்டின் மக்கள் தொகைக்கேற்ப காவல்துறையில் பல நிலைகளில் உள்ள அதிகாரிகள் எண்ணிக்கை இருப்பது அவசியம். இதைக் கணிக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, காவல்துறையின் கட்டமைப்பு, காவல்துறை அதிகாரிகள் திறம்பட பணிபுரிவதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்படும். காவல்துறையில் பணிபுரிபவர்களுடைய நியாயமான தேவைகளைக் கண்டறிந்து, இதுவரை வழங்கப்படாத சலுகைகள், வசதிகள் செய்து கொடுக்க திட்டம் வரைந்து செயல்படுத்தப்படும்.

**வல்லுநர் ஆலோசனைக் குழு :**

தமிழ்நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுப்படுத்தவும், முன்னேற்றத்தின் பலன்கள் மக்களுக்கு முழுமையாகச் சென்றடையவும், பொருளாதாரம், நிதி, தொழில், விவசாயத் துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் ஆலோசனைக்குழு அமைக்கப்படும் (Economic Advisery Council). இக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வொரு துறைக்கும் வேண்டிய முன்னேற்றத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தப்படும்.

## 13. பொது சுகாதாரக் கொள்கையைப் புனரமைப்போம்

❖ பொது சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடுகள் படிப்படியாகப் பெருமளவிற்குக் குறைந்துவிட்டது. இதனால் மக்களின் மருத்துவ தேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

❖ மருத்துவர்கள் மற்றும் துணைநிலை மருத்துவப் பணியாளருக்கான (Para Medicals) காலியிடங்கள் தமிழ்நாடு முழுவதும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அந்தப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும்.

❖ மருத்துவத் துறையில் போதிய நிதி இல்லை என்ற காரணத்தைக்காட்டி 10 ஆயிரம் செவிலியர்கள் ஒப்பந்த ஊழியர்களாகத் தற்காலிக நிலையில் மிகக்குறைந்த சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 2 ஆண்டுகளில் பணி நிரந்தரம் செய்யப்படவேண்டிய பலருக்கு 7 ஆண்டுகள் மேலாகியும் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ மக்களின் உடல் நலத்தைக் கெடுக்கும் குடிப்பழக்கத்தை நிறுத்த உடனடியாக மதுவிலக்கு கொண்டுவரப்படும். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி அதை விடமுடியால் இன்னல்படும் மக்களைக் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கக்கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (De-Addiction Centre) மாவட்டந்தோறும் நிறுவப்படும்.

❖ குடிப்பழக்கத்தைத் திடீரென நிறுத்துவதால் உண்டாகக்கூடிய உபாதைகளுக்கு (Withdrawal Symptms) அதற்குண்டான சிறப்பு சிகிச்சை முறைகளுக்கான வசதிகள் செய்யப்படும்.

❖ நமது மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் சமீபகாலமாக மனஅழுத்த நோய் அதிகமாகி தற்கொலைகள் நிகழ்ந்து வருகின்றன. இதற்குக் காரணம், மூளைவளர்ச்சி ஐந்து வயது வரை நடைபெறுகிறது. இந்நேரத்தில் குழந்தைகளை Pre K.G., L.K.G., U.K.G., ஆகிய வகுப்புகளில் மூன்று வயது நிரம்பிய குழந்தைகளைப் படிக்க வைப்பதனால் மனநோய் காரணிகள் உருவாகின்றன. ஆகவே, குழந்தைகள் ஐந்து வருடம் முடிந்தபிறகு நேரடியாக முதல் வகுப்பில் சேர்த்துவிட்டால் மனநோய் பாதிப்பு இருக்காது. மூன்றறை வயது முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளை விளையாட்டுப் பள்ளிகளில் (Play School) சேர்ப்பது ஊக்கப்படுத்தப்படும்.

**மருத்துவத் துறை**

- ❖ மருத்துவத் துறையில் உள்ள காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
- ❖ மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் அதிகரிக்கப்படும்.
- ❖ மருத்துவர்களும் செவிலியர்களுக்கும் பணிச்சுமை குறைக்கப்பட்டு, இன்முகத்துடன் சேவைசெய்ய வழிவகை செய்யப்படும்.
- ❖ மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமான அளவு அதிகரிக்கப்படும்.
- ❖ தமிழகத்தில் ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்குகாண்டு அதிகரித்து வருகிறது. இந்நிலையைப் போக்குகிற வகையில் ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- ❖ கிராமப்புறங்களிலே இன்னும் தேவையான மருத்துவ வசதிகள் இல்லாதநிலை உள்ளது. மருத்துவமனைகளில் போதிய வசதி இல்லாத காரணத்தால், தனியார் மருத்துவமனையை நாடவேண்டிய அவலநிலை உள்ளது. இந்நிலையைப் போக்கிட கிராமப்புறங்களில் அதிக அளவில் நடமாடும் மருத்துவமனைகள் இயக்க ஆவன செய்வோம். அதேபோல 108 ஆம்புலன்ஸ் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த ஆவன செய்வோம்.
- ❖ நெடுஞ்சாலைகளில் ஏற்படுகிற விபத்துகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்காமல் பல உயிரிழப்புகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. இதைக் கருத்தில்கொண்டு நெடுஞ்சாலைகளில் அதிக எண்ணிக்கையில் அவசரச் சிகிச்சை செய்ய போதிய வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகளை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- ❖ மாவட்ட மகப்பேறு மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான சிகிச்சை செய்வதற்குச் சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், போதிய உபகரணங்கள் இல்லாதநிலையில் உயிரிழப்புகள் தொடர்ந்து நடைபெறுகிறது. இதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுத்து, சகல வசதிகளும் மாவட்ட மகப்பேறு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.

## 14. பொது விநியோக திட்டத்தைச் சீரமைப்போம்

காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்போதுள்ள மொத்த நியாயவிலைக் கடைகள் 33,222 ; மொத்தக் குடும்ப அட்டைகள் 1 கோடியே 97 லட்சத்து 82 ஆயிரத்து 593 ; இதில் அரிசி பெறும் மொத்த அட்டைகள் 1 கோடியே 67 லட்சத்து 21 ஆயிரத்து 538.

விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ அரிசிக்குக் கொள்முதல் விலையாக ரூ.23.80 கொடுத்து மத்திய அரசு வாங்குகிறது. இதைத் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாடும் மக்களுக்கு ரூ.5.65 விலைக்கு மத்திய அரசு கொடுக்கிறது. இதனால், ஒரு கிலோ அரிசியில் மத்திய அரசின் மானியம் ரூ.18.15. தற்போதைய உணவுப் பாதுகாப்புச் சட்டப்படி, ஒரு கிலோ அரிசியை ஏற்கெனவே வாங்கிய ரூ.5.65க்குப் பதிலாக ரூ.3 விலைக்குக் குறைத்து வழங்க மத்திய அரசு தயாராக இருந்தது. இதனால் மத்திய அரசின் மானியம் 1 கிலோ அரிசியில் ரூ.18.15இலிருந்து ரூ.20.80க்கு உயர்ந்துள்ளது. இதனால் தமிழக அரசின் மானியச் சுமை குறைந்தது. இதனைப் பயன்படுத்த அ.தி.மு.க. அரசு தயாராக இல்லை.

அன்னை சோனியா காந்தியின் கனவு திட்டமான உணவுப் பாதுகாப்புத் திட்டம், நாடாளுமன்றத்தில் சட்டமாக இயற்றப்பட்டுள்ளது. இதன்படி, 67.5 சதவிகித மக்களுக்கு ஏறத்தாழ 85 கோடி மக்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.3, ஒரு கிலோ கோதுமை ரூ.2 விலையில் பெறுவதற்குச் சட்டபூர்வ உரிமை வழங்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ வீதம் மக்கள் அனைவருக்கும் 73 மில்லியன் டன் அரிசி வழங்கத் திட்டமிடப்பட்டது. இதில் தமிழகத்திற்கு 28 லட்சத்து 54 ஆயிரம் டன் அரிசியை வழங்க மத்திய அரசு தயாராக இருந்தது. இதன்மூலம் தமிழக அரசுக்கு ஏற்கெனவே ஆன மானியச் செலவில் ரூ.797 கோடி குறையும். இவ்வளவு ஆதாயத்தைத் தருகிற உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்ற மாட்டோம் என்று ஜெயலலிதா சொல்வது தமிழக நலனுக்கு எதிரானதாகும். இதனை நிறைவேற்ற ஆவன செய்வோம்.

- ❖ அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகக் குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) விளங்குவதால், அட்டை வேண்டி விண்ணப்பித்த ஒரு வாரக் காலத்திற்குள் விண்ணப்பித்தவரின் வீடுதேடி குடும்ப அட்டை வழங்க ஆவன செய்யப்படும்.
- ❖ ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் இலவச அரிசியுடன், குறைந்தபட்சம் 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.
- ❖ நியாயவிலைக் கடைகளில் எடை குறைவு ஏற்படாதவகையில் பொருள்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.
- ❖ ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதாமாதம் வழங்கவேண்டிய பொருள்களில் குறைவு இல்லாத வகையில் கண்காணிக்கப்படும். அனைத்துப் பொருள்களும் ஒரே நாளில் கிடைக்க ஆவன செய்யப்படும்.

## 15. சமூக நலக் கொள்கையை விரிவாக்குவோம்

***அ. உணவு :***

*அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் ஏழைமக்களுக்கு எல்லா இடங்களுக்கும் சென்றடைவதைக் கண்காணிக்க சிறப்புத்துறை அமைக்கப்படும்.*

***ஆ. சுகாதாரம் :***

*மக்கள்தொகை அதிகரித்து வருவதற்கேற்ப ஆரம்பச் சுகாதார நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட வில்லை. அரசின் இலவச சுகாதார சேவைகள் எல்லா மக்களுக்கும் சென்றடைவதற்கான கொள்கையை வகுத்து செயல்பட வல்லுநர் குழு அமைக்கப்படும். அவர்களின் பரிந்துரைகள் ஆராயப்பட்டு, அரசின் சுகாதார நலச் சேவை மேம்படுத்தப்படும்.*

*இப்பொழுது செயல்படுத்தப்படும் சுகாதாரக் காப்பீடுத் திட்டம், அறுவை சிகிச்சை போன்ற மருத்துவத்திற்குமட்டும் பயன்படுகிறது. லட்சக்கணக்கான மக்கள் சாதாரண சுகவீனத்திற்குச் சிகிச்சை பெருவதற்குப் போதிய வருவாய் இல்லாமல் கடன்வாங்குவதைப் பெரும்பாலாகக் காண்கிறோம். ஆகவே, ஏழை மக்கள் நலமுடன் வாழ எல்லா நோய்களுக்கும் இலவச மருத்துவ வசதி கிடைக்கும்படி புதிய காப்பீடுத் திட்டம் உண்டாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.*

***இ. கல்வி :***

*இலவசக் கல்விக்கு வித்திட்டு, அதனைச் சிறப்பாக வளரச்செய்த காமராஜர் ஆட்சிக்குப்பிறகு, மக்கள் தொகை அதிகரிப்புக்கேற்ப பள்ளிக்கூடங்கள் திறக்கப்படாததாலும், தரமான கல்வி அளிக்கப்படாததாலும், சரியான கல்விக் கொள்கை வகுக்கப்பட்டும் அதனைச் செயல்படுத்ததாலும், லட்சக்கணக்கான குழந்தைகள் தரமான கல்வி கற்றும் வாழ்வில் முன்னேற முடியாமல் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் அரசு காண்பித்த மெத்தனப்போக்கினால், தனியார் பள்ளிகள் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் ஏழை மாணவர்கள் படிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை முழுவதுமாக மாற்றி அமைக்க புதிய கல்விக் கொள்கை வகுக்கப்பட்டு கிராமப்புற, நகர்ப்புற ஏழைமக்களும் தரமான இலவசக் கல்விபெறச் செயல்படுத்தப்படும்.*

**ஈ. போக்குவரத்து :**

இன்றும் பல நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு அரசுப் போக்குவரத்து வசதி இல்லை. பல கிராமங்களில் போக்குவரத்து வசதி இல்லாததால், பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகள் பல கிலோ மீட்டர் நடந்துசென்று பயிலும் அவலநிலையில் இருக்கின்றனர். இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்படி இருப்பது மிகவும் வேதனைக்குரிய, வெட்கப்படவேண்டிய விஷயமாகும். எல்லாக் கிராமங்களுக்கும் அரசுப் போக்குவரத்து வசதியும் அதற்குவேண்டிய சாலை வசதியும் செய்துகொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவோம்.

**உ. குடிநீர் தன்னிறைவு :**

அரசு எல்லாவித குடிநீர்த் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. அப்படியிருந்தும் ஏராளமான கிராமப்புற, நகர்ப்புறவாசிகள் நீர் வசதியில்லாமல் கஷ்டப்படுவதைக் காண்கிறோம். மக்களின் அடிப்படைத் தேவைகளுள் முக்கியமான குடிநீர் தேவையைத் தீர்ப்பது அரசின் கடமையாகும். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் குடிநீர் தடையின்றிப் பெறுவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து, திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

கடந்த காலங்களிலிருந்து சென்னையைச் சுற்றிலும் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆனால், சமீபகாலமாகப் புதிய குடிநீர்த் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப புதிய குடிநீர்த் திட்டங்களைச் சென்னையைச் சுற்றிலும் மற்றும் கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி போன்ற மாவட்டத் தலைநகரங்களில் நிறைவேற்ற உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**ஊ) மானியங்கள் :**

அரசு மானியங்கள் கொடுக்கிறது என்பது, நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துவதற்கும், வறுமையிலும் வேலையில்லாமையிலும் உழன்று கொண்டிருக்கிற மக்களுடைய அத்தியாவசிய தேவைகளைச் சமாளிப்பதற்கும் ஆகும். அரசு நிதி ஆதாரங்களை இவ்விரு நோக்கங்களுக்கு மட்டுமே முதலில் பிரயோகிக்க வேண்டும். இன்றும் ஒவ்வொரு கிராமத்திலும் ஆதரவில்லாமல், சரியான உணவு கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற முதியவர்களைக் (அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள்) காணமுடிகிறது. இந்தநிலை அரசுத் திட்டங்கள் அடித்தட்டு மக்களுக்குப் பயன்தரவில்லை என்பதையே காண்பிக்கிறது.

அரசு மானியங்கள் வறுமையிலிருக்கும் ஏழை மக்களுக்கு நலன் கொடுக்கும்படியாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால், தமிழ்நாட்டில் ஒருவர்கூட உணவில்லாமல் இல்லை என்னும் நிலை மாற்றப்படும்.

## 16. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நலன்

1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்குச் சட்டப்படி ஒதுக்கப்படவேண்டிய மாநில அரசுப் பணிகளில் ஏராளமான பணியிடங்கள் பல காலமாக நிரப்பப்படாமல் உள்ளன. இத்தகைய பின்னடைவு காலி பணியிடங்களை (Backlog of Vacancies) சிறப்புத் தேர்வு மூலமாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
2. கிராமங்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுள் 80 சதவிகிதத்தினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் சுமார் 20 சதவிகித மக்களாக உள்ள இவர்கள், மொத்த விவசாய நிலங்களில் 7.2 சதவிகித நிலங்களைத்தான் சொந்தமாகப் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் அனைவரும் விவசாயக் கூலிகளாகத்தான் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுள் பலர் அரசு நிலங்களில் விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால், இந்த நிலங்களுக்கு பட்டா

கிடைப்பதில்லை. ஆங்கிலேயர் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட 'பஞ்சமி நிலம்' மற்றவர்களால் அபகரிக்கப்பட்டு பறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க மாநில அளவில் ஒரு நில ஆணையம் (Land Commission) அமைக்கப்படும்.

3. தமிழ்நாட்டில் மாநில மனித உரிமை ஆணையம், சிறுபான்மையோர் ஆணையம், பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் போன்ற ஆணையங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்துவருகின்றது. நமது நாட்டில் 12 மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் நல ஆணையங்கள் (State Commission for SC, ST) எற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல தமிழ்நாட்டிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் நல ஆணையம் உடனடியாக அமைக்கப்படும்.

4. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்குத் தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்குவதற்காக ஒரு சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதை நிறைவேற்றி தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5. நாடு சுதந்திரமடைந்து 68 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்திய அரசமைப்பு சட்டப்பிரிவு 17இன்படி, தீண்டாமை எந்த விதத்தில் கடைப்பிடிக்கப்பட்டாலும், அது தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனாலும் தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் 1955ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் சட்டம் (வன்கொடுமைகள் தடுப்பு) சரியாகச் செயல்படுத்தாமல் இருப்பதாகும். இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 10இலிருந்து 12 சதிவிகிதத்தினர்தான் குற்றவாளிகளாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே, தீண்டாமை கொடுமையைத் தடுத்துநிறுத்த, இச்சட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) செயல்படுத்தும் நிலம் வாங்குதல் திட்டம், தனிநபர் நிதியுதவி திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், சுயஉதவிக் குழுக்களுக்கான, குறிப்பாகப் பெண்களுக்கான பொருளாதார நிதியுதவி திட்டம் போன்ற திட்டங்களுக்குப் போதுமான நிதியைக் குறித்த காலத்தில் வழங்கி, அதன் பயன்கள் பயனாளிகளுக்கு முழுமையாகச் சென்றடைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேநேரத்தில், 'தாட்கோ' மானியம் வழங்கியபிறகு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் வழங்க மறுக்கின்றன. இந்நிலையைப் போக்க தாட்கோவே வங்கி தொடங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஊராட்சிமன்றத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு செயல்படமுடியாமல் பல இடையூறுகளைச் சந்திக்கின்ற நிலை தற்போது இருக்கிறது. அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட உரிய பாதுகாப்பு வழங்கப்படும்.

8. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் மாணவர் விடுதிகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் உள்ளன. அடிப்படை வசதிகள் போதிய அளவு செய்யப்படவில்லை. உணவுக்கான செலவு செய்யப்படும் கட்டணம் விலைவாசிக்குத் தகுந்தவாறு உயர்த்திக் கொடுக்கப்படவேண்டும். பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்குத் தனியாக விடுதிகள் அமைக்கப்படும்.

9. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலை உள்ளது. ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளிகளில் 82 சதவிகித மாணவர்கள் வகுப்பறையில் தரையில் உட்கார்ந்து பாடம் படிக்கிற நிலை ; 16 சதவிகித உயர்நிலைப் பள்ளிகளில் மேஜை, நாற்காலிகள் இல்லை; 33 சதவிகிதப் பள்ளிகளில் குடிநீர் வசதி இல்லை; 36 சதவிகிதப் பள்ளிகளில் கழிவறை வசதி இல்லை என அவலப்பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது, அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் ஆதிதிராவிடர் சமுதாயத்திற்கு எதிராக எத்தகைய மனநிலையில் செயல்பட்டார்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. எனவே, ஆதிதிராவிடப் பள்ளிகளில் தற்போது நிலவுகிற அவலநிலையிலிருந்து மீட்டெடுக்கப் போர்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10. கிராமப்புறங்களில் தலித் மக்களுக்குச் சுடுகாடு, மயான வசதிகள் உறுதி செய்யப்படும். இவற்றிற்குச் செல்லும் சாலைகள் குறித்து சில கிராமங்களில் பிரச்சினைகள் உள்ளன. இவற்றை முற்றிலும் கலைக்கிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. நீலகிரி மாவட்டத்திலுள்ள படுகர் இன மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

12. 'நிதிநிலை அறிக்கையில் தலித் பழங்குடி இன மக்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ, அந்த நிதியை வேறு எந்த வகையிலும் செலவழித்தால் தண்டனைக்குரிய குற்றம்' என்று ஆந்திர மாநிலக் காங்கிரஸ் அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளது. தமிழகத்திலும் அத்தகைய சட்டம் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

13. **தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வரும் சிறப்புக் கூறு திட்டம் (Special Component Plan) சரிவர நடைமுறைப்படுத்தாமல் உள்ளது. இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டதோ, அதன்படி பயனாளிகள் முழுப்பயனையும் அடைகிற வகையில் செயல்படுத்த ஆவன செய்யப்படும்.**

14. நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் 36 வகை பழங்குடியினர் உள்ளன. ஏறத்தாழ 8 லட்சம் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் குறைந்தது 4 லட்சம் பேருக்கு (80 ஆயிரம் குடும்பங்கள்) பத்தாண்டுகளுக்கு முன்னரே தலா 3 ஏக்கர் நிலமாவது கிடைத்திருக்க வேண்டும். 2006ஆம் ஆண்டில் பழங்குடிகள் வன உரிமைச் சட்டம் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசால் நிறைவேற்றப்பட்டு, பலவித உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. பழங்குடியினர் வன உரிமைச் சட்டம், அனைத்து சிறு வனப் பொருள்களையும் பழங்குடியினருக்கே உரிமையாக்குகிறது.

சிறு வனப் பொருள்களை வனத்தினுள் சென்று எடுக்கவும், அகற்றவும், வாணிபம் செய்யவும், மதிப்புக் கூட்டுப் பண்டமாக மாற்றவும் பூரண உரிமையை இச்சட்டம் பழங்குடியினருக்கு வழங்கியது. ஆனால், வனக்குழு என்ற பெயரில் பழங்குடியினர் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். இத்தகைய வனக்குழுக்கள் மேற்படி சட்டத்தால் ஒழிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டில் வனக்குழுக்களை ஒழிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2006 சட்டத்தின்படி, பழங்குடி கிராம சபைகளையும், வன உரிமைக் குழுக்களையும் நிலைப்படுத்த வேண்டும். சிறு வனப் பொருள்கள் பழங்குடியினருக்கே சொந்தமாவதை உறுதிபடுத்தவேண்டும். வன உரிமைக் குழுக்களில் எந்த ஒரு அரசு அதிகாரிக்கும் உரிமை இல்லை. பழங்குடியினர் மட்டுமே இந்த வன உரிமைக்குழுக்களில் உறுப்பினராக இருக்கமுடியும்.

பழங்குடியினர் அனுபவத்தில் உள்ள நிலங்களுக்கு பட்டா வழங்க மறுக்கப்பட்டு வருகிறது. குடியிருப்பு உரிமையும் இல்லாத நிலை உள்ளது. எனவே, 2006ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பழங்குடியினர் வன உரிமைச் சட்டத்தின் அனைத்துப் பலன்களையும் தமிழக பழங்குடியினர் முழுமையாகப் பெறுகிற வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### தலித் உரிமைகளைக் காப்போம்

மயிலாடுதுறை அருகில் உள்ள திருநாள்கொண்டசிருசேரி கிராமத்தில் வாழும் தலித் இனத்தினர், தங்களின் சுடுகாட்டுக்குப் பாதை வேண்டும் என்று நாற்பது ஆண்டுகாலமாகப் போராடிவருவது மிகுந்த வேதனைக்குரியது. பொதுப் பாதையில் சடலத்தை எடுத்துச்செல்ல ஆதிக்க ஜாதியினர் அனுமதி மறுப்பதால், தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து சமூக நல்லிணக்கம் சீர்கெட்டு வருகிறது. இதை அரசு நிர்வாகமோ, காவல் துறையினரோ உரிய நடவடிக்கை எடுக்காமல் தலித்துகள் மீதே தாக்குதல் நடத்தியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. காலம்காலமாகத் தமிழக கிராமப்புறங்களில் நிலவிவரும் இந்த இழிவுநிலையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- **தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்கிற தலித் மக்கள் சுடுகாட்டுக்குச் செல்கிற பாதை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.**

- **தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பகுதிகளை சேரி, காலனி என்று இழிவாக அழைப்பதைச் சட்டப்படி தடைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

**பறிக்கப்பட்ட பஞ்சமி நிலங்கள்**

தாழ்த்தப்பட்ட, தலித் இன மக்களுக்கு அரசால் வழங்கப்பட்ட இலவச பஞ்சமி நிலங்கள் காலப்போக்கில் நிபந்தனைகளுக்கு விரோதமாக, அவ்வினத்தைச் சாராதவர்களுக்கு 2.5 லட்சம் ஏக்கர் நிலம் கைமாறியுள்ளது. இதைத் தடுக்க தமிழக அரசின் வருவாய் துறையோ, பதிவாளர் அலுவலகமோ முற்றிலும் தவறிவிட்டது. இதில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பஞ்சமி நிலங்கள் வேறு இனத்தவருக்குப் பதிவாளர் அலுவலகத்தின்மூலம் பதிவு செய்யப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய்க்குப் பகிரங்கமாக விற்கப்பட்டுள்ளது. இத்தகைய விற்பனை செல்லுபடியாகாது என 2010ஆம் ஆண்டில் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் உத்தரவு பிறப்பித்துள்ளார். இத்தீர்ப்புக்குப்பிறகு இதுவரை அ.தி.மு.க. ஆட்சியினர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக, முதலமைச்சர் ஜெயலலிதாவே சிறுதாவூரில் சொகுசு பங்களா கட்ட தலித் மக்களின் பஞ்சமி நிலத்தை அபகரித்திருப்பதைவிடகொடுமை வேறெதுவும் இருக்கமுடியாது.

இந்நிலையில், பஞ்சமி நிலங்களை முதலமைச்சர் ஜெயலலிதா மீட்டுத்தருவார் என்கிற நம்பிக்கை எவருக்கும் இருக்க வாய்ப்பில்லை. எனவே, சட்டவிரோதமாகத் தலித் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட பஞ்சமி நிலங்களைப் பற்றிய முழுவிவரத்தையும் தயாரித்து அதை மீண்டும் தலித் மக்களுக்குக் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 17. மீனவர் பிரச்சினைகளும் தீர்வுகளும்

இந்தியாவின் ஒட்டுமொத்த கடற்கரையில் 13 சதவிகிதக் கடற்கரை தமிழகத்தில் இருக்கிறது. 1076 கிலோ மீட்டர் நீளம்கொண்ட தமிழகக் கடற்கரையில், ஆயிரக்கணக்கான மீனவக் கிராமங்களும், லட்சக்கணக்கான மீனவ மக்களும் காலம்காலமாக வசித்துகொண்டு மீன்பிடித் தொழில் செய்து வருகிறார்கள்.

1. மீனவர் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 1957ஆம் ஆண்டு சேர்த்திருந்தோம். இவ்வளவு ஆண்டுகளாகியும் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காணவில்லை. ஆகவே, மீனவர் சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவேண்டும். தில்லி, உத்தரப்பிரதேசம், கர்நாடகா, மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், கேரளா, மிசோராம், திரிபுரா, மேற்கு வங்காளம் மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் மீனவச் சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். பீகார், ஒரிசா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான் மற்றும் கோவா ஆகிய மாநிலங்களில் மீனவச் சமுதாயத்தினர் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, தமிழகத்திலுள்ள மீனவச் சமுதாயத்தினரைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவேண்டும்.

2. மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்குத் தற்போது ரூபாய் 2 லட்சமாக வழங்கப்பட்டு வருகிற இழப்பீட்டுத் தொகை ரூபாய் 5 லட்சமாக உயர்த்தப்படும்.

3. மீன்பிடி தடைக்காலமான ஏப்ரல் 15 முதல் ஜூன் 1 வரையிலான 45 நாள்களுக்கான நிவாரணத் தொகையாக ரூபாய் 2,000 வழங்கப்படுகிறது. இதை ஒரு நாளைக்கு ரூபாய் 150 வீதம் 45 நாள்களுக்கு ரூபாய் 6,750 வழங்க ஆவன செய்யப்படும்.

4. கடலோரப் பகுதிகளில் இயற்கையாக உள்ள மணற்குன்றுகள், சிறு காடுகள், சதுப்புநிலக் காடுகள், கடலோர நிலங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க இதுவரை எந்தத் திட்டமும் செயலுக்கு வந்ததில்லை. இவற்றைப் பாதுகாப்பதன் மூலமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்பதால், இதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5. மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் மீனவத் துறைக்கெனத் தனி அமைச்சகம் உருவாக்கப்படும் என்று, இராமேஸ்வரத்தில் மீனவர்களைத் திரட்டி நடத்தப்பட்ட கடல் தாமரை மாநாட்டில் சுஷ்மா

சுவராஜ் அறிவித்தார். ஆனால், மத்தியில் ஆட்சிக்கு வந்து இருபது மாதங்களாகியும் இதுவரை மீனவர்களுக்கெனத் தனி அமைச்சகம் உருவாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இக்கோரிக்கையை மீண்டும் வலியுறுத்த காங்கிரஸ் கட்சி விரும்புகிறது.

6. கடலூர் துறைமுகத்திலுள்ள முகத்துவாரத்தைத் தூர்வாருவதோடு கடல் அரிப்பைத் தடுக்கும்வகையில் அங்கு கருங்கல் கொட்டப்படவேண்டும். முகத்துவாரங்கள் முறையாகத் தூர்வாரப்பட்டிருந்தால் கடலூர் மாவட்டம் வெள்ளத்தினால் பேரழிவிற்கு ஆளாகி இருக்காது. மீன்வளத்தைச் சீராகப் பராமரிக்க பாலாறு முதல் தாமிரபரணி வரையிலான அனைத்துத் தமிழக ஆறுகளின் உபரிநீரும் போதுமான அளவு முகத்துவாரங்களில் எந்தத் தடையும் இல்லாமல் கடலில் கலக்கவேண்டும். கடற்கரையில் மீன்பிடித் துறைமுகங்கள், வணிக முனையங்கள், மீன்பிடி தங்குதளங்கள், கடல் அரிப்பு தடுப்புச் சுவர்கள் உள்ளிட்ட அடிப்படை மீன்பிடி கட்டுமானத் தேவைகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. மன்னார் வளைகுடாவிலுள்ள மீன்பிடிப்பகுதிகளில் விசை மீன்பிடிப் படகுகளின் இயக்கத்தைத் தடைசெய்யவேண்டும். தமிழகக் கடல்பகுதிகளில் இரட்டைமடி, சுருக்குமடி வலைகள் பயன்படுத்துவதற்கு உடனடியாகத் தடைவிதிக்க வேண்டும். ஆழ்கடல் மீன் வளங்களைக் கொள்ளையிட்டு, கடல் வளங்களைச் சீரழிந்து வரும் பன்னாட்டு மீன்பிடிக் கப்பல்களின் உரிமங்களைத் திரும்பப் பெற மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தவேண்டும். அதேபோல, பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று கடல் மைல் எல்லைக்குள் விசைப்படகுகள் மீன்பிடிப்பதை முற்றிலும் தடைசெய்ய வேண்டும்.

8. அந்தமான் கடல்பகுதியில் தமிழக விசைப்படகுகள் மீன்பிடிக்க நவீன தொழில் நுட்பமும், வழிகாட்டுதலுடன் பாதுகாப்பும் வழங்க மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

9. தூத்துக்குடி ஸ்டெர்லைட், கடலூர் சிப்காட், எண்ணூர், பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையம் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைத் தடுத்துநிறுத்தி இயற்கையான கடல்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

10. பழவேற்காடு ஏரி, பக்கிங்காம் கால்வாய், மன்னார் கடல் பகுதிகளைச் சுற்றுச்சூழல் சீர்கேடுகளிலிருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். கடல் வளத்தைப் பாதிக்கும் அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

11. ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இதில் காலங்காலமாக மீன்பிடிப்புத் தொழிலில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். இத்தொழிலைத் தொடங்குவதற்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து சலுகை வட்டியில் கடன் வழங்கவேண்டும்.

12. இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்குதலுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாகி வருகிற இராமநாதபுரம், புதுக்கோட்டை, இராமேஸ்வரம், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் அடிப்படைப் பிரச்சினையைப் புரிந்துகொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

13. ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்கப்படுத்தும் வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் உருவாக்கப்படும்.

14. விசைப்படகிற்கு மானிய விலையில் வழங்கப்படும் டீசல் 1500 லிட்டரிலிருந்து 2000 லிட்டராக உயர்த்தி வழங்க ஆவன செய்யப்படும். இதேபோல் கட்டுமரம், நாட்டுப்படகு உள்ளிட்டவைகளுக்கு எரிபொருள் அளவு 300 லிட்டர் என்பது 500 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

15. கடலோரங்களில் அமைந்துள்ள அனைத்து மீனவ கிராமங்களுக்கும் மீன் உலர்த்தும் தளம் அமைக்க ஆவன செய்யப்படும்.

### குளச்சல் வர்த்தகத் துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகால கனவான குளச்சல் வர்த்தகத் துறைமுகத்தை அமைக்கப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு உறுதிசெய்யப்பட்ட பின்னரும் அதனை மாற்றி, குடியிருப்புகள் மிக அதிக நெருக்கமாக உள்ள இனையம் பகுதிக்குக் கொண்டுசெல்ல தற்போதுள்ள மத்திய பா.ஜ.க. அரசு முயற்சி மேற்கொள்கிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான கிராமக் குடியிருப்புகள் அடியோடு அழிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குளச்சல் துறைமுகத்தைத் திட்டமிட்டப்படி குளச்சல் பகுதியிலேயே அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். 8 மீனவக் கிராமங்களில் வசிக்கும் 70 ஆயிரம் மக்கள் விரும்புகிற வகையில் குளச்சல் வர்த்தகத் துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்படும்.

### மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்திருத்தம்

தமிழகத்தில் கடல்மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம் - 1983 தற்போது நடைமுறையில் உள்ளது. இந்நிலையில், மீனவர்களுடன் கலந்தாலோசிக்காமல் அவசர அவசரமாகக் கடந்த பிப்ரவரி 20ஆம் தேதி, சட்டப்பேரவையின் இறுதி நாளில் மீன்பிடி ஒழுங்முறை சட்டத்தில் திருத்தம் செய்து, அதற்கு அவையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. ஆனால், திருத்தங்களில் உள்ள விதிமுறைகள் தங்களது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என மீனவர்கள் அமைப்புகள் கடுமையாக எதிர்க்கின்றன. வருகிற சட்டமன்றத் தேர்தலுக்குப்பிறகு மீனவ அமைப்புகளோடு கலந்துபேசி மீண்டும் மேற்படி சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

## 18. தொழிலாளர் நலன்

❖ அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் 15,000க்குக் குறையாமல் கிடைத்திட ஆவன செய்யப்படும். குடியிருக்க வீடு, குழந்தைகளின் கல்வி உள்ளிட்ட சலுகைகள் வழங்க வகைசெய்யப்படும்.

❖ பாலின பேதமின்றி அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சமவேலைக்குச் சமஊதியம் கிடைக்க ஆவன செய்யப்படும்.

❖ கல்லுடைக்கும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க மருத்துவக் காப்பீடு, வருங்கால வைப்புநிதி, ஓய்வூதியம் வழங்க ஆவன செய்வதுடன், வீட்டுமனை பட்டா, குடியிருக்க வீடு வழங்க ஆவனச் செய்யப்படும்.

❖ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம் சீர்திருத்தம் செய்யப்பட்டு தொழிலாளர்களின் நலன்காக்கும் நற்பணிகளைச் செய்திட மேம்படுத்தப்படும். தொழிலாளர்களுக்குப் பணி பாதுகாப்பு, பணி மேம்பாடு, பணிக்கு ஏற்ற ஊதியம் கிடைத்திட ஆவன செய்யப்படும்.

❖ தொழிலாளர்களின் மருத்துவச் சிகிச்சைகளில் குறையில்லாத வகையில் ஈ.எஸ்.ஐ. சீரமைப்பு செய்யப்படும். ஈ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டில் ஈ.எஸ்.ஐ. மருத்துவத் திட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமையும், 20 சதவிகித இடஒதுக்கீடும் வழங்க ஆவன செய்யப்படும்.

❖ உப்பளத் தொழிலாளர்களுக்கு வேலையில்லா மழைக் காலங்களில் மாதம் ரூ.3,000 வாழ்வூதியமாகவும், வீடற்றோருக்கு இலவச வீடும், நியாயமான தினக்கூலியும் வழங்கிட ஆவன செய்யப்படுவதுடன், உப்புத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்து வரும் தொழிலாளர்கள் நலிவடைந்துவிடாமல், அவர்களைப் பாதுகாக்கும் வகையில் கல்வி, உப்பள வாடகை குறைப்பு, மின் கட்டணச் சலுகை உள்ளிட்ட சலுகைகள் வழங்க ஆவன செய்யப்படும்.

## 19. அமைப்புச்சாரா தொழிலாளர் நலன்

தமிழகத்தில் அமைப்பு ரீதியாகத் தொழிற்சங்கம் வைத்து போராடுகிறவர்களுக்குப் பயன்கள் கிடைப்பதுபோல் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை. அரசும் இவர்களது குரலுக்குச் செவிசாய்ப்பதில்லை. தமிழகத்தில் மூன்று கோடிக்கும் மேற்பட்டோர் அமைப்புச்சாரா தொழிலாளர்களாக உள்ளனர். இதில், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், கைவினை தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள், கைத்தறி மற்றும் பட்டு நெய்யும் தொழிலாளர்கள், கல்லுடைக்கும் தொழிலாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், அச்சுத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல பிரிவினர் அமைப்புச்சாரா தொழிலாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

❖ அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கென அமைக்கப்பட்ட 17 நல வாரியங்களும் ஜெயலலிதா அரசால் முடக்கப்பட்டு செயலிழந்தநிலையில் உள்ளன. இந்த அமைப்புகளைச் செயல்படுத்தி உரிய நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அமைப்புச்சாரா தொழிலாளர்களை நல வாரியத்தில் பதிவு செய்வதில் பல்வேறு சிக்கல்களும் அலைகழிப்புகளும் உள்ளன. இதை எளிமைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

❖ விபத்தில் இறக்கும் அனைத்துத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் ரூபாய் 5 லட்சம் நஷ்டஈடு வழங்கவேண்டும். கொத்தனார், சித்தாள் உள்ளிட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பணியின்போது ஏற்படுகிற விபத்துக்கு இலவச சிகிச்சை ஏற்பாடுகள் செய்யப்படும். பணியிடங்களில் முறையான பாதுகாப்பு அளித்து உயிரிழப்புகள் தடுக்கப்படும்.

❖ ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில், சொந்த வாகனம் வாங்க குறைந்த வட்டியில் கடன் வழங்க ஆவன செய்யப்படும். வாடகை முறைகள் ஒழுங்குபடுத்தப்படும்.

## 20. நெசவாளர் நலன்

❖ விவசாயிகளுக்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் நெசவாளர்கள். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கைத்தறியிலிருந்து விசைத்தறிக்கு மாறுவதற்கு வசதிகள் செய்துதரப்படும். கட்டுப்படியான வகையில் நூல், பட்டு கிடைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ விவசாயிகளுக்கு வழங்குவதைப்போல் நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

❖ நெசவாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களைச் சந்தைப்படுத்த கைத்தறி சந்தை அமைக்கப்படும்.

❖ விவசாயிகளுக்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்படுவதுபோல், நெசவாளர்கள் பயன்பெற 'நெசவாளர் கூட்டுறவு வங்கி' அமைக்கப்படும்.

❖ நெசவாளர்களுக்குத் தரமான நூல் கிடைக்க நூல் கொள்முதல் இணையம் அமைத்து, அதன் வாயிலாகச் சலுகை விலையில் நூல் வழங்க ஆவன செய்யப்படும்.

❖ தமிழக அரசு வழங்குகிற இலவச வேட்டி, சேலைகள் கொள்முதலில் தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு முன்னுரிமை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ அரசு அலுவலர்கள் வாரத்தில் ஒருநாள் கைத்தறி துணி அணிய பரிந்துரை செய்யப்படுத்தப்படும்.

## 21. அரசு ஊழியர் - ஆசிரியர் - ஓய்வூதியர் நலன்

- 01.04.2003 முதல் அ.தி.மு.க. அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்துசெய்துவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

- இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைந்து, நியாயமான ஊதியம் வழங்கப்படும்.

- மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, தமிழக அரசு அலுவலர்களுக்கும் ஊதியம் குறைபாடில்லாமல் வழங்கப்படும்.

- மத்திய அரசுக்கு இணையான மருத்துவப் படி, போக்குவரத்துப் படி, வீட்டு உபயோகப் படி, கல்வி படி மற்றும் குறைந்தபட்ச ஓய்வூதியம், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படும்.

- சத்துணவு, அங்கன்வாடிப் பணியாளர்கள், சமையல் உதவியாளர்கள், குடிநீர்த்தேக்கத் தொட்டி பணியாளர்கள், அரசுத்துறைகளில் பணிபுரியும் தொகுப்பூதியர்கள், குறைந்த காலமுறை ஊதியப் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் சலுகைகள் போன்று வழங்கப்படும்.

- மதுவிலக்கு அமலாக்கத்திற்குப்பிறகு, ‘டாஸ்மாக்’ பணியாளர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களில் கல்வித் தகுதிக்கேற்ப பணி நியமனம் வழங்கப்படும்.

- கூட்டுறவுப் பணியாளர்கள், நியாயவிலைக் கடை பணியாளர்கள் ஆகியோர் அரசு ஊழியர்களாகப் படிப்படியாகப் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

- அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் குறைகளைக் களைய அரசு அலுவலர் நல வாரியம் அமைக்கப்படும். அதே அடிப்படையில் காவலர் நல வாரியம் அமைக்கப்படும்.

- தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் அரசுப் பணியாளர், ஆசிரியர் ஆகியோரின் பணியிட மாறுதல்கள் வெளிப்படைத்தன்மையுடன், லஞ்ச லாவண்யமற்ற வகையில் கவுன்சிலிங் முறையில் பணி மாறுதல் வழங்கப்படும்.

- ஆங்கிலேயர் காலத்தில் வடிவமைக்கப்பட்ட அரசு ஊழியர் நடத்தை விதிகள் மாற்றியமைக்கப்பட்டு, தற்போதைய சூழலுக்கேற்ப புதிய விதிகள் ஏற்படுத்தப்படும்.

- அரசின் பல்வேறு துறைகளில் தற்காலிக அடிப்படையில் தினக்கூலி, தொகுப்பூதியம் பெற்று பணிபுரிந்து வருபவர்களின் பணி நிரந்தரம் செய்யப்படும்.

- அனைத்துத் துறைகளிலும், அனைத்துப் பள்ளிகளிலும் காலியாக உள்ள பதவிகளுக்குப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பணி நியமனம் காலதாமதமின்றி நிறைவேற்றப்படும்.

- ஊழலுக்கும் முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும் விதமாக, அரசு ஊழியர்கள்மீது ஊழல் வழக்கு தொடர அரசின் முன்அனுமதி பெற்றுத்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற அ.தி.மு.க. அரசின் ஆணையை ரத்துசெய்வோம்.

## 22. வணிகர் நலன்

- அரசின் வரி விதிப்பு முறைகள் மற்றும் வணிகம் சார்ந்த அரசின் நிலைபாடுகளை வணிகர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையில், அரசு செலவில் பயிற்சி அளிக்கப்படும். இதன்மூலம் வருமான வரி, சரக்கு சேவை வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி உள்ளிட்ட விவரங்களை வணிகர்கள் அறிந்துகொள்ள முடியும்.
- பதிவுபெற்ற வணிகர் விபத்தில் இறக்க நேர்ந்தால் குடும்ப நல நிதியாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படும்.
- தொடங்கப்படும் வணிகத்தின் மதிப்பிற்கேற்ப கடன்வசதி பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படும்.
- வணிகர் நல வாரியம் சீரமைக்கப்படும். வாரியத்தின் தலைவர் வணிகரே செயல்பட உரிய விதிமுறைகள் வகுக்கப்படும்.
- அரசுக்கும் வணிக நிறுவனத்திற்குமிடையே வெளிப்படையான உள்நோக்கமில்லாத தொடர்புகள் உறுதிப்படுத்தப்படும்.

## 23. மாற்றுத்திறனாளிகள் நலன்

- மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் சீரமைக்கப்படும். மனிதாபிமான அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, தாமதமின்றி நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுக்க ஆவன செய்யப்படும்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 3 சதவிகித இடஒதுக்கீட்டை எவ்விதக் குறைபாடும் இல்லாமல் முழுமையாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- வேலைவாய்ப்பில்லாத மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.1,500 வழங்குவதுடன், அரசு மற்றும் அரசு சார்ந்த இடங்களில் சுயதொழில் செய்ய, வாடகை இல்லாமல் இடம் ஒதுக்கித் தரப்படும்.
- மாற்றுத்திறனாளிகள் திருமணம் செய்துகொள்ள பாலினப் பேதமின்றி இருசாராருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.
- மாற்றுத்திறனாளிகளின் வாரிசுகளுக்கு இலவசக் கல்வி வழங்க ஆவன செய்யப்படும்.
- மாற்றுத்திறனாளி மற்றும் அவருடன் செல்பவர் பேருந்தில் பயணிக்கக் கட்டணமில்லா பயணச் சலுகை வழங்கப்படும்.

## 24. சிறுபான்மையினர் நலன்

- பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், கிறிஸ்து சமுதாயத்தினருக்கு வழங்கப்பட்ட 3.5 சதவிகித இடஒதுக்கீடு தங்களைப் பாதிக்கும் என்று கூறியதால், அவர்களுக்குப் புதிதாக இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை.
- சிறுபான்மையினருக்கு அரசு வேலைவாய்ப்பில் 3.5 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதை 5 சதவிகிதமாக உயர்த்த ஆவன செய்யப்படும்.
- சிறுபான்மை மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் சட்டப்படி பாதுகாத்திட அனைத்துவகை நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.
- சிறுபான்மை மக்களின் இறைவழிபாட்டுப் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் உரிய அமைப்புகள் வாயிலாக உதவிகள் செய்யப்படும்.

- சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த மகளிரின் மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு அவர்கள் செய்யும் சிறு தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்குத் தொழில் மதிப்பின் தன்மையில் ஐம்பது சதவிகிதத் தொகையை வட்டியில்லாக் கடனாக வழங்க ஆவன செய்யப்படும்.
- சிறுபான்மையினரின் மதம் சார்ந்த சொத்துக்களைப் பாதுகாக்கவும், சீரமைக்கவும், பராமரிக்கவும் உரிய உதவிகள் செய்துதரப்படும்.
- சிறுபான்மையினரின் மதரீதியான ஆன்மிகப் பயணங்களுக்கு உரிய உதவிகள் செய்துதரப்படும்.

## 25. மகளிர் நலன்

- மக்கள்தொகையில் சரிசமமாக இருக்கிற பெண் இனத்திற்குச் சமவுரிமையும் சமவாய்ப்பும் வழங்கப்படும்.
- நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவிகித இடங்களை ஒதுக்கீடு செய்வதற்கான சட்டத்திருத்தம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் பெண்களின் பின்தங்கிய நிலையை முற்றிலும் மாற்றுகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரம், பெண் சிசுக்கொலை, உளவியல் சார்ந்த வன்முறை ஆகியவற்றிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட்டு, நல்லதொரு சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- பெண்கள் தொழில் தொடங்க சுயஉதவிக் குழுக்கள் மூலம் ஊக்கப்படுத்தப்படும்.
- மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் ஏழைப் பெண்களின் வாழ்க்கை தரம் உயர சுயஉதவிக் குழுக்கள் மூலம் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சுயஉதவிக் குழுவிற்கும் மத்திய அரசு ரூபாய் 7,500 ; மாநில அரசின் பங்காக ரூபாய் 2,500 ; ஆக ரூபாய் 10,000 சுழல் நிதியாக, இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் முழுமையாகக் கைவிடப்பட்டது.
- பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மூலம் மீன் பண்ணைகள் அமைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
- அரசுப் பணிக்குச் செல்லும் மகளிர் பயன்பெறும் வகையில் பேறுகால விடுப்பை ஒன்பது மாதங்களாக உயர்த்தி வழங்கப்படும்.
- ஆதரவற்ற மகளிர், விதவை, உடல் நலிவுற்றோர், வறுமையில் வாடும் மகளிர் ஆகியோர் பயன்பெறும் வகையில் மாதம் ரூபாய் 2,000 ஓய்வூதியமாக வழங்கப்படும்.
- அரசுப் பணிக்குச் செல்லும் பெண்களுக்குத் தற்போது நடைமுறையில் உள்ள 6 மாத பேறுகால விடுமுறை 9 மாதங்களாக உயர்த்தி வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- பதினொன்று முதல் பதினெட்டு வயதுவரை உள்ள பெண் குழந்தைகள் பெருமளவில் ரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அதனைத் தடுக்கும் வகையில் பள்ளிகளிலே ஆண்டுக்கு இரண்டுமுறை மருத்துவ பரிசோதனை செய்ய முகாம்கள் நடத்த ஆவன செய்யப்படும்.
- அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையைப் போக்கும் வகையில் சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் கடன்தொகை ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்த ஆவன செய்வோம்.

## 26. முதியோர் நலன்

- ஒய்வூதியம் வேண்டி விண்ணப்பம் செய்கிறவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். விண்ணப்பித்த ஒரு மாதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஓய்வூதிய வயது 58ஆக நிர்ணயிக்கப்படும்.
- கிராமப்புறங்களில் முதியோர்களுக்கு மருத்துவச் சிகிச்சை கிடைப்பது அரிதாக இருக்கிறது. நடமாடும் மருத்துவமனைகள் மூலம் முதியோருக்கு இலவச சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- நடைமுறையில் இருக்கும் காப்பீட்டுத் திட்டம் முதியோர்கள் அனைவரும் பெற உறுதிசெய்யப்படும்.
- தற்போது நடைமுறையில் உள்ள 60 வயதிற்கும் மேற்பட்ட முதியோர் ஓய்வூதியம் ரூபாய் 1,000 என்பது மிகமிகக் குறைவானதாகும். இதைப் பெறுவதற்கான விதிமுறைகள் கடுமையாக உள்ளது. இதைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- முதியோர் உதவித்தொகை குறைந்தபட்சம் ரூபாய் 2,000 ஆக உயர்த்தப்படும். முதியோர் உதவித்தொகை பெறுகிற அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை உறுதிசெய்யப்படும்.
- அனைத்து முதியோர்களுக்கும் பேருந்தில் இலவசப் பயணச் சலுகைகள் வழங்கப்படும். தற்போது சென்னையில் மட்டும் பத்து பயணங்களுக்கான அனுமதிச்சீட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதை மாதாமாதம் புதுப்பிக்கப்படவேண்டும் என்கிற நடைமுறை சாத்தியமில்லாத ஒன்றாகும். முதியோர் அனைவருக்கும் அடையாள அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டு நிரந்தரமாக இலவசக் கட்டணச் சலுகை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- முதியோர் உதவித்தொகை ரூ.1,000 வழங்கப்படுகிறது. இது ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்க ஆவன செய்யப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோர் இல்லங்கள் தொடங்க ஆவன செய்வோம். அதில் முதியோருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்துதரப்படும்.

***முதியோர் மதிய உணவுத் திட்டம்***

*தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சரியாக உணவு கிடைக்காமல் இருக்கிற அறுபது வயதிற்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு இலவச மதிய உணவு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலமாகப் பட்டினியாக ஒருவர்கூட இல்லை என்று கூறுமளவுக்குத் தமிழ்நாட்டை மாற்றுவோம்.*

## 27. திருநங்கையர் நலன்

நமது சமூகத்தில் பல நிலைகளில் தொடர்ந்து அவமானங்களைச் சந்தித்து, புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ள மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்கள் - திருநங்கைகள் ஆவார். இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மற்றவர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. திருநங்கைகளுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் ஏட்டளவில்தான் உள்ளதே தவிர, அதை அனுபவிக்க முடியாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

- திருநங்கைகளுக்குத் தகுதி அடிப்படையில் வேலை வழங்கவேண்டும். அரசுப் பணிகளில் 2 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.
- திருநங்கையர்களுக்குச் சுயதொழில் செய்ய நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- அரவாணி நல வாரியம் சார்பில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, சென்னையில் ஐந்து ஆயிரம் பேரும் ; தமிழகம் முழுவதும் ஐம்பது ஆயிரம் பேரும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது முழுமையான

கணக்கெடுப்பு அல்ல. திருநங்கைகளுக்கு உரிய பலன் சென்றடைய முழுமையான கணக்கெடுப்பு நடத்தி அவர்களுக்கான அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ திருநங்கையர்களுக்கு அனைத்து நிலைகளிலும் இலவசக் கல்வி வழங்கிட வேண்டும். அப்போதுதான் அவர்களின் எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைக்கும். யாரையும் சார்ந்து வாழவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பை அரசு ஆவன செய்யப்படும்.

## 28. பால் உற்பத்தியாளர் - நுகர்வோர் நலன்

❖ விவசாயத்திற்கு அடுத்த நிலையில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை வழங்கப்படவில்லை என்கிற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பால் முழுமையும் ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்ய ஆவன செய்வோம். பாலுக்கு நியாயவிலை வழங்கப்படுகிற அதேநேரத்தில், நுகர்வோருக்குச் சலுகை விலையில் பால் விநியோகிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படும்.

## 29. அரசு நிதிக் கொள்கையை மேம்படுத்துவோம்

### அ. வரிக் கொள்கை :

*நாட்டின் மொத்த வருவாய் உயர்ந்த அளவுக்கு, மாநில அளவில் வரி வருவாய் உயர்ந்துவிட்டது எனக் கூறமுடியாது. அரசு தனது பொருளாதாரம் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்த அதற்கு இருக்கும் ஒரே முக்கிய ஆதாரம் வரி வருவாயாகும். இதுதவிர, மத்திய அரசு வரி வருவாயிலிருந்து கிடைக்கும் பங்கும், அரசுக் கடன் பத்திரங்கள் மூலமாகச் சேகரிக்கப்படும் கடன்களும், அரசுத் திட்டம் மற்றும் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் வரிக் கொள்கை தனிநபர் மற்றும் நிறுவனங்களின் வருமானத்திற்கேற்ப வகுக்கப்பட்டு, வரியைக் கட்டுவதற்கான வழிவகை செய்யப்படும்.*

### ஆ. செலவுக் கொள்கை :

*இப்பொழுதுள்ள செலவுக் கொள்கை கோட்பாடுகளை ஆராய்ந்து, விவசாயத் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊன்றுகோலாக இருக்கத்தக்கதாக அரசு செலவுக் கொள்கையாக மாற்றி அமைக்கப்படும். விவசாயத் தொழில் துறை கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கான முதலீடுகள் அதிகப்படுத்தப்படும்.*

### இ. சிக்கன நடவடிக்கை :

*மக்கள் உழைத்து பெறுகின்ற வருவாயிலிருந்து ஒருபகுதியை அரசு வரி வருவாயாகப் பெறுவதினால், வரி வருவாயைச் சரியான கொள்கை நோக்கங்களுக்காக, சரியான அளவு செலவு செய்வது முக்கியமானதாகும். இந்தக் கோட்பாட்டின்படி அரசு செலவினங்களும் செலவுத்தொகையும் இருக்க செலவுக் கொள்கைக் குழு அமைக்கப்பட்டு, அவர்களின் பரிந்துரையை ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

### பட்ஜெட் அறிக்கை

*பட்ஜெட் அறிக்கை என்பது அரசு செயல்படுத்தப்போகும் திட்டங்களை அறிவித்து, பட்ஜெட் ஆண்டின் வரவு செலவுகளைக் கொடுக்கும். அரசானது மக்களின் அரசாகச் செயல்படவேண்டுமானால், சட்டசபையில் தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் அறிக்கை எல்லா மக்களும் புரிந்துகொள்ளும்படி இருக்கவேண்டும். ஆகவே, இப்பொழுதுள்ள பட்ஜெட் அறிக்கை கட்டமைப்பு இந்த நோக்கத்தோடு மாற்றியமைக்கப்படும்.*

*பட்ஜெட் அறிக்கையுடன் நடப்பாண்டில் ஒவ்வொரு துறையிலும் காணப்படும் உற்பத்திப்போக்கைக் காண்பிக்கும் 'செயல் நிறைவேற்ற அறிக்கை'யும் சமர்ப்பிக்கப்படும்.*

## 30. காவல் துறையைச் சீரமைப்போம்

- காவல் துறை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- காவல் துறையில் இருக்கும் வரலாறு காணாத ஊழலை ஒழிப்போம்.
- காவல் நிலையங்களில் மிரட்டி சமரசம் பேசுவது, காவல் நிலையத்திற்குத் தேவையில்லாமல் வரச்சொல்லி மிரட்டுவது போன்றவை ஒழிக்கப்படும். சட்டப்படி புகாரைப் பதிவுசெய்து, சம்பவ இடம் சென்று, விசாரணை செய்து, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வது உறுதி செய்யப்படும். காவல் துறையின் மனித உரிமை மீறல்களை விசாரிக்க தனி விசாரணை ஆணையம் அமைக்கப்படும். போக்குவரத்துக் காவலர்கள் பொதுமக்களிடம் கண்ணியமாக நடந்துகொள்ள அறிவுறுத்தப்படுவர்.
- சிறையில் கைதிகளின் நலன் காக்கப்படும். சிறைக் கூடங்கள் சித்திரவதைக் கூடங்களாக இல்லாமல் சிறைவாசிகளைத் திருத்துவதற்கான பள்ளிக்கூடங்களாக மாற்றப்படும். சிறை மீண்டோர் சமூகத்தில் ஒருங்கிணைந்து வாழவும் திருந்தி வாழவும் பயிற்சி கொடுக்கப்படும்.
- காவலர்களுக்கு உரிய விடுமுறை வழங்கவும், பணி உயர்வுகள் நியாயமாகக் கிடைக்கவும், பயணப்படிகள் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- குற்ற வழக்குகளில் அரசு தரப்பிற்கு ஏற்படும் தோல்விகள் பற்றி ஆராயப்படும். காவல்துறை தரப்பில் ஏற்படும் தவறுகள் தடுக்கப்படும்.
- காவல் அலுவலர்கள் மன அழுத்தம் இல்லாமல் பணியாற்றும் வகையில் நிர்வாகச் சீரமைப்பு செய்யப்படும்.

## 31. இந்துசமய அறநிலையத் துறையை மேம்படுத்துவோம்

- அறநிலையத் துறை வசம் உள்ள அனைத்துக் கோயில்களும் மிகுந்த கவனத்துடனும் சுகாதாரத்துடனும் பராமரிக்கப்படும்.
- கோயில்களில் 'பார்க்கிங்' கட்டணக் கொள்ளைகள் தடுத்து நிறுத்தப்படும்.
- திருக்கோயில்களில் தரிசனத்திற்குக் கட்டணம் பெறும்முறை ரத்து செய்யப்படும். கடவுள்முன் அனைவரும் சமமாக இறைவனைத் தரிசிக்க உகந்த சூழ்நிலை ஏற்படுத்தப்படும்.
- திருக்கோயில்களில் செய்யப்படும் அன்னதானம் இன்னும் சிறப்பாகவும், அனைத்து பக்தர்களும் காத்திருக்காமல் உணவு உண்டுசெல்லும் வகையில் மேம்படுத்தப்படும்.
- திருக்கோயில் சொத்துக்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் தகுந்த செயற்பாடுகள் வெளிப்படையாகவும், உள்நோக்கமில்லாமலும் செய்யப்படும்.
- திருத்தலத் தூய்மைக்கும், பழுதில்லாத ஆன்மிகச் செயல்பாடுகளுக்கும் உரிய முறையில் உத்தரவாதம் அளிக்கப்படும்.
- அனைத்து வகையான திருக்கோயில்கள், திருக்கோயில் தொடர்பான அமைப்புகள் ஆகியவற்றின் அசையும் அசையா சொத்துக்களையும், அச்சொத்தின் மீதான வரி, வாடகை, குத்தகை முறைகள் உள்ளிட்டவற்றை ஒழுங்குபடுத்த ஆலோசனை குழுக்கள் அமைத்து சீரமைக்கப்படும்.
- திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், காலி இடங்கள் கணக்கெடுத்து ஒழுங்குபடுத்தப்படும். ஆக்கிரமிப்புகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 32. போக்குவரத்துத் துறையில் சீர்திருத்தம் செய்வோம்

- பழைய ஓட்டை உடைசல் பேருந்துகள் நீக்கப்பட்டு புதிய பேருந்துகள் வாங்கப்படும்.
- போக்குவரத்துத் துறையில் உள்ள பணி நியமனங்களில் உள்ள ஊழல்கள் களையப்பட்டு வெளிப்படையான தேர்வு முறையில் ஓட்டுநர், நடத்துநர், இதரப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.
- அரசுப் பேருந்து நிறுவனங்களில் உள்ள ஊழல்களைக் களைந்து அவற்றினை லாபகரமாக நடத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.
- பேருந்துகள் கொள்முதலில் உள்நோக்கமில்லாத வெளிப்படைத்தன்மை கையாளப்படும்.
- பேருந்து தொடர்பில்லாத கிராமங்களே இல்லையெனும் அளவுக்கு குக்கிராமங்களுக்கும் சிற்றுந்துகள் (மினி பஸ்கள்) விட ஆவன செய்யப்படும்.
- ஓட்டுநர், நடத்துநர் போன்ற போக்குவரத்துப் பணியாளர்கள் உற்சாகமாகப் பணிபுரிந்து லாபமீட்டும் நிலைக்கேற்ப ஊக்க ஊதியம் வழங்க ஆவன செய்வோம்.

## 33. நுகர்வோர் நீதிமன்றங்களைச் செம்மைப்படுத்துவோம்

நுகர்வோர் பாதுகாப்பு சட்டப்படி, நியாயமற்ற வணிக நடைமுறைகளிலிருந்தும், மக்களுக்குப் பயன்பெறும் சேவைகளின் குறைபாடுகளிலிருந்தும் நுகர்வோருக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இச்சட்டம், நுகர்வோர் உரிமைகளை நிலைநாட்டவும், மாவட்ட அளவில் நுகர்வோர் நீதிமன்றங்களையும், மாநில அளவில் மாநில நுகர்வோர் நீதிமன்றத்தையும், தேசிய அளவில் தேசிய நுகர்வோர் நீதிமன்றத்தையும் அமைப்பதற்கு வழிவகை செய்கிறது. இதன்படி தமிழகத்தில் மாவட்ட- மாநில நுகர்வோர் நீதிமன்றங்கள், நுகர்வோர் புகார்களை மூன்று மாதத்திற்குள் தீர்த்துவிடவேண்டும். ஆனால், நடைமுறையில் தீர்வுகாணப்படுவதில் தேவையற்ற காலதாமதமாகி நுகர்வோர் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தி, நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- நுகர்வோர் நலன் காக்கப்படும். நுகர்வோர் நீதிமன்றக் காலியிடங்கள் உடனே நிரப்பப்படும்.
- திரையரங்குகளில் நியாயமற்ற கட்டணங்கள் வசூலிப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.
- பெட்ரோல் பங்க்குகளில் அளவுகள் சரியாக இருப்பது உறுதி செய்யப்படும்.
- ஆம்னி பேருந்துகள் போன்ற வரையறை செய்யப்படாத சேவைகளில் ஏற்படும் குறைபாடுகள், முறையற்ற கட்டண வசூல் போன்றவை தடுத்து நிறுத்தப்படும்.
- தொலைதூரப் பேருந்துகள் நின்றுசெல்ல தரமான, மலிவான விலை உணவகங்கள் அமைக்கப்படும்.

## 34. சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துவோம்

- உணவகங்கள், விடுதிகள் போன்றவற்றில் தனியார் முதலீடு அதிகரிக்க வழிவகை செய்யப்படும்.
- அனைத்து நீர்நிலைகளிலும் பராமரிக்கப்பட்ட பூங்காவுடன் சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும். தரமான தனியார் உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- சுற்றுலா மையங்களில் சரியான விலைக்குத் தரமான உணவுப் பொருள்கள் கிடைக்கிறதா என்பதைக் கண்காணிக்கப்படும்.
- தமிழ்நாட்டிலுள்ள திருத்தலச் சுற்றுலா இடங்களையும், ஊட்டி, கொடைக்கானல் போன்ற இயற்கைச்சூழல் சுற்றுலா இடங்களையும் மேம்படச் செய்து, சுற்றுலா செல்பவர்கள் தங்கவும், உண்டு உறங்கவும் இடவசதிகள் ஏற்படுத்தவும், கழிப்பிட வசதிகள் போதிய அளவு ஏற்படுத்தவும் ஆவன செய்யப்படும்.
- கடலூர் மாவட்டத்தில் சிறப்புக் காடு அமைந்துள்ள 'பிச்சாவரம்' இடத்தைச் சிறப்பு சுற்றுலாத்தலமாக மேம்படுத்த ஆவன செய்யப்படும்.

## 35. சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பேணிக் காப்போம்

- ஜவுளி, தோல் சார்ந்த தொழில்கள், சாயப்பட்டறைகள், தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரைப் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திரிகரிக்கப்பட்ட நீராய்க் கடலுக்குள் கலக்கும் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
- சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படும் ஒலி, ஒளி மற்றும் இதரவகை நிலைகளைக் கவனத்துடன் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதுடன், சாலையோரங்களில் மரங்கள் உருவாக்கவும், பொது இடங்களிலும் அரசுக்குச் சொந்தமான இடங்களிலும் தனியாருக்குச் சொந்தமான இடங்களிலும் மரக்கன்றுகள் நட்டுப் பசுமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் செயல்படும் ஆலைகள் மறுஆய்வுக்கு உட்படுத்தப்படும்.
- நிலத்தடிநீர் உறிஞ்சப்படும் நிலை தடுக்கப்படும். மழைநீர் சேகரிப்பு ஊக்கப்படுத்தப்படும்.
- நாடு கடந்து வீசப்படும் நாசகாரக் கழிவுகளைத் தடுப்பதுடன், காரணமானவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 36. கூவம் சீரமைப்புத் திட்டம்

- கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றைச் சீரமைப்பது நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல், சென்னைவாசிகளின் கனவாகவே இருந்து வருகிறது. அதனை நிறைவேற்ற ஆவன செய்யப்படும்.
- லண்டன் மாநகரை அழகுபடுத்தி வரும் தேம்ஸ் நதியைப்போல கூவத்தையும் அழகுப்படுத்த வேண்டும் என்பது சென்னை மாநகர வாசிகளின் விருப்பமாகும். அவர்கள் விருப்பம் நிறைவேற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- கடந்த ஆட்சிக் காலத்தில் சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டு ரூபாய் 468 கோடியில் கூவம் சீரமைப்புத் திட்டம் தயார் செய்யப்பட்டது. தொடர்ந்து வந்த அ.தி.மு.க. அரசின் 2014-15 நிதிநிலை அறிக்கையில் கூறியபடி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், திட்டம் இன்னமும் நிறைவேறாமல் உள்ளது. இதைச் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 37. மெட்ரோ ரயில் திட்டத்தை விரிவுபடுத்துவோம்

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஆட்சிசெய்த காலத்தில் ரூபாய் 14,000 கோடி முதலீட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டன.

சென்னை மாநகரின் மக்கள்தொகை 75 லட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தொலைநோக்குப் பார்வையோடு அன்று எடுக்கப்பட்ட முயற்சி இன்றைக்குப் பலன் தருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கோயம்பேட்டிலிருந்து ஆலந்தூர் வரை 10 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தில் மெட்ரோ ரயில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தைத் தொடக்கத்தில் கடுமையாக எதிர்த்த ஜெயலலிதா, மெட்ரோ ரயிலுக்குப் பதிலாக மோனோ ரயில் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாகக் கூறி பல தடைகளை ஏற்படுத்தியதை எவரும் மறந்திருக்க முடியாது.

தொழில் நுட்ப ரீதியாக மெட்ரோ ரயிலைவிட மோனா ரயில்தான் சிறந்தது என்று சொல்லி, மெட்ரோ ரயில் திட்டத்தை முடிக்கியவர்தான் ஜெயலலிதா.

ஜெயலலிதா ஆட்சி அமைந்தபோதும் மோனோ ரயில் திட்டத்திற்காக வெற்று அறிவிப்பைச் செய்ததோடு அதை நிறைவேற்ற கடுகளவுகூட அவர் முயற்சி மேற்க்கொண்டதில்லை. ஆனால் வேறுவழியின்றி மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்ற முனைந்தார்.

தமிழகத்தின் நலன்சார்ந்து சென்னை மாநகர மக்களின் கூட்ட நெரிசலைத் தவிர்க்க மத்திய காங்கிரஸ் அரசு இத்திட்டத்திற்கான முதலீடான ரூபாய் 14,865 கோடியில் ரூபாய் 3,672 கோடி நிதியை (25 சதவிகிதம்) ஒதுக்கியதோடு, தமிழக அரசு ரூபாய் 2,423 கோடி (16.5 சதவிகிதம்) ஒதுக்கியது. மீதி ரூபாய் 8,590 கோடியை ஜப்பான் வங்கிமூலம் கடன் உதவி பெறுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் மத்திய காங்கிரஸ் அரசுதான் செய்தது.

இன்று காணொலி காட்சி மூலம் இத்திட்டத்தைத் தொடக்கிவைத்த ஜெயலலிதா, மெட்ரோ ரயில் திட்டத்தை தமது அரசின் சாதனையாகத் தம்பட்டம் அடித்துக்கொள்வதற்கு எந்த உரிமையும் இல்லை.

மெட்ரோ ரயில் திட்டம் கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 38. மரபு சாரா எரிசக்தியை ஊக்கப்படுத்துவோம்

- ❖ சூரிய மின்சக்தி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தெளிவான கொள்கை வகுக்கப்படும்.
- ❖ சூரியஒளி மின்சக்தியை எல்லா கிராமங்களிலும் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- ❖ சுயஉதவிக் குழுக்கள் மூலம் சூரியஒளி மின்சக்தியைத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன்மூலம் புவி வெப்பமாவது குறைக்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்.
- ❖ சூரிய மின்சக்தி கொள்முதல் செய்வதில் விலை நிர்ணயம் செய்தல் உள்ளிட்ட அனைத்தும் வெளிப்படையான முறையில் நிர்ணயிக்கப்படும். இதில் ஒளிவுமறைவுக்கு இடமிருக்காது.
- ❖ காற்றாலை மின் உற்பத்தியாளருக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மின்சாரத்தை முழுமையாகப் பெறும் வகையில் மின் பாதைகள் மேம்படுத்தப்படும்.

## 39. காஞ்சிபுரம் பட்டுப் பூங்கா

காஞ்சிபுரம் நெசவாளர்களின் கைத்தறிப்பட்டுச் சேலைகள் மற்றும் பட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விரிவான சந்தைப்படுத்தும் நோக்கத்திலும், கீழ்கதிர்பூர் கிராமத்தில் 75 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 266 கோடி மதிப்பில் பட்டுப் பூங்கா அமைக்க கடந்த மத்திய காங்கிரஸ் அரசு நிதி ஒதுக்கி அனுமதி அளித்தது. இப்பூங்கா விரைவில் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 40. நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு மணிமண்டபம்

தமிழ்த் திரைப்படத் துறையில் முந்நூறுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்து சாதனை படைத்த நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு தமிழக அரசின் சார்பில் மணிமண்டபம் அமைக்க 2002ஆம் ஆண்டில் இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இதுவரை மணிமண்டபம் கட்டுவதற்கான அறிவிப்பு செயலுக்குவராமல் இருப்பது மிகுந்த வேதனைக்குரியது. எனவே, சிவாஜிக்கு மணிமண்டபம் கட்டுவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்தநாளான அக்டோபர் 1ஆம் தேதியைக் கலையெழுச்சி நாளாகத் தமிழக அரசின் சார்பாகக் கொண்டாட ஆவன செய்யப்படும்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்குச் சென்னை காமராஜர் சாலையில் காந்தியடிகள் சிலைக்கு அருகில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இது போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகக் கருதி தொடுக்கப்பட்ட வழக்கில் சிலையை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

இதையொட்டி, நடிகர் திலகம் சிவாஜி கலையுலகில் நிகழ்த்திய வரலாறு காணாத சாதனைகளுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் காந்தியடிகள் சிலைக்கும், பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கும் இடையில் அவரது சிலையை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதையொட்டி சிவாஜி சமூக நலப்பேரவை எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்போம்.

## 41. சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வோம்

ஆந்திரம், மகாராஷ்டிரம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இதைச் செய்தால் மட்டுமே சட்டப்பேரவை நிகழ்வுகளை அனைத்து மக்களும், குறிப்பாகக் குக்கிராமத்திலுள்ள பாமர மக்களும் அறிந்து விழிப்புணர்வு பெறமுடியும். எனவே, மற்ற மாநிலங்களைப்போல தமிழகத்திலும் சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 42. திரையரங்குகளில் கட்டணக் கொள்ளையைத் தடுத்திடுவோம்

தமிழ்நாடு சினிமா திரையரங்குகள் சட்டம் 1955, மற்றும் ஒழுங்குமுறை சட்டம் 1957இன்படி, தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில், மாநகராட்சிப் பகுதியில் குளுகுளு வசதிகள் செய்யப்பட்ட அரங்குகளில் 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையிலும், மற்ற அரங்குகளுக்கு 7 ரூபாய் முதல் 30 ரூபாய் வரைமட்டுமே கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால், திரையரங்கு உரிமையாளர்கள் 120 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கின்றனர்.

'மல்டிபிளக்ஸ்' அரங்குகளில் கட்டணக் கொள்ளை கட்டுக்கடங்காமல் நடந்து வருகிறது. இதன்மூலம் ஒரு காட்சிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வீதம் ஆறு காட்சிகளுக்கு 9 லட்சம் ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இது சட்ட விரோதமானதாகும். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆதாரத்துடன் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரையரங்கு நிர்வாகிகளுக்கு அரசியல்வாதிகள், காவல்துறையினர், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோரிடம் உள்ள நெருக்கத்தின் காரணமாக நடைபெறுகிற கட்டணக் கொள்ளையைத் தடுக்கமுடியாதநிலை உள்ளது. எனவே, படத் தயாரிப்பாளர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் ஆகியோருடன் கலந்துபேசி சட்டப்படி நியாயமான கட்டணம் வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 43. தமிழ் வளர்ச்சி

1956ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்காலத்தில் தமிழை ஆட்சிமொழியாக ஆக்கும் வகையில் சட்டம்கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகியும் முழுமையான ஆட்சிமொழியாகத் தமிழ் இருக்கிறதா என்று கேட்டால், மிகுந்த வேதனையைத்தான் ஏற்படுத்துகிறது.

❖ தமிழ்நாட்டின் அனைத்து அரசுத்துறைகளும் தமிழை ஆட்சிமொழியாக முழுமையாக ஆக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகக் கட்டாயம் கற்கவேண்டும் என்று தமிழக அரசு 2008இல் பிறப்பித்த ஆணை எவ்விதப் பயனையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. இதற்கு எதிராகச் சிலர் நீதிமன்றம் சென்றாலும், தமிழைக் கட்டாயம் கற்கவேண்டும் என்கிற வகையில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ இந்திய ஆட்சிமொழி சட்டத்தின்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகத் தமிழை ஏற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ வரலாற்றுச் சிறப்புமிக்க மாமல்லபுரத்தில் சிற்பக்கலை வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், சிற்பக்கலைப் பூங்கா அமைக்கப்படும். சிற்பக்கலை பயிற்சி அளிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

❖ **தமிழுக்கு ஓர் இருக்கை :** உலகத்தில் சிறந்த பல்கலைக்கழகமாக 380 ஆண்டுகளாக இயங்கிவரும் 'ஹார்வேர்ட்' பல்கலைக்கழகத்தில் தமிழுக்கென்று ஓர் இருக்கை (Chair) உருவாக்கப்பட வேண்டும் என்பது தமிழர்களின் நீண்டகால கனவாகும். அந்தக் கனவை நனவாக்க ஆறு மில்லியன் டாலர், அதாவது இந்திய மதிப்பில் சுமார் 40 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் எனக் கூறப்படுகிறது.

❖ மூன்று கோடி பேர் பேசும் 'உக்ரைன்' மொழிக்கும், ஒன்றரை கோடி பேர் பேசும் 'செல்டிக்' மொழிக்கும், மற்றும் ஹீப்புரு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுக்கும் இருக்கைகள் இருக்கின்றன. ஆனால், ஏழு கோடி பேர் பேசும் தமிழுக்கு இருக்கை இல்லை என்பது மிகுந்த வேதனைக்குரியதாகும்.

❖ உலகளாவிய அறிவுத்தளத்தில் தமிழை நிலைநிறுத்திப் பெருமைப்படுத்த 'ஹார்வேர்ட்' பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஓர் இருக்கை உருவாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 44. நதிகளை இணைப்போம்

தேசிய நதிகளான கங்கை, காவிரி இணைப்பு சாத்தியமில்லாத நிலையில், தென்னக நதிகளை இணைப்பதற்குச் சாத்தியமான சூழலை உருவாக்குவோம்.

தமிழகத்தில் உள்ள நதிகளை இணைத்து, விவசாயிகள் பயன்படுகிற வகையில் நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்க தொலைநோக்குப் பார்வையோடு முதலீடுகளைச் செய்து உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### அத்திக்கடவு - அவிநாசி திட்டம் :

❖ பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது, 1957ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாரப்பக்கவுண்டர், அவிநாசி சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் அத்திக்கடவு-அவநாசி திட்டத்தை சட்டமன்றத்தில் வலியுறுத்தியபோது, முதலமைச்சர் காமராஜர்

அதற்கு ஒப்புதல் அளித்தார். ரூபாய் 132 கோடி முதலீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான முயற்சிகளைத் தொடங்கினார். ஆனால், காமராஜர் ஆட்சிக்குப்பிறகு இத்திட்டம் கனவாகிவிட்டது.

❖ நீலகிரி மாவட்டத்தில் உள்ள மேற்குத்தொடர்ச்சி மலையில் மழைக் காலங்களில் ஊட்டி, குன்னூர் போன்ற பல பகுதிகளிலிருந்து மழை நீர் பெருக்கெடுத்து ஓடி, காரமடைக்கு மேலேயுள்ள மலைப்பகுதிகளில் இருக்கும் பில்லூர் அணைக்கு வந்து சேரும். பில்லூர் அணை இருக்கும் பகுதிதான் அத்திக்கடவு என்று அழைக்கப்படுகிறது. இந்த பில்லூர் அணையிலிருந்து உபரிநீர் வெளியேறும் காலங்களில் ஏறத்தாழ 30 டி.எம்.சி. தண்ணீர் கடலில் போய் கலக்கிறது.

❖ காமராஜர் போட்ட திட்டத்தின்படி, அத்திக்கடவிலிருந்து கால்வாய் தோண்டப்பட்டு கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகளில் தண்ணீரை நிரப்பினால், இந்த மாவட்டம் முழுவதும் ஒருபக்கம் விவசாயத்திற்குப் பயன்படுத்தினாலும், மறுபக்கம் நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துவிடும் என்பது இதன் நிதர்சனமான உண்மையாகும். கொங்கு மண்டலத்தில் இப்போது நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிக்கும்கீழ் போய்விட்டதைத் தடுத்து நிறுத்த இத்திட்டம் நிறைவேறினால் தண்ணீர் மட்டத்தை 100 அடிக்குக்கீழ் பார்க்க முடியும்.

❖ அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி கூறாத கட்சிகளே இல்லை. ஆனால், 2011ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 1,862 கோடி முதலீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதற்கு நிதியுதவி கோரி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அனுப்பப்பட்டது.

❖ அத்திக்கடவு - அவிநாசி திட்டத்திற்கான பணிகளைத் தொடங்க ரூபாய் 3 கோடியே 27 லட்சத்துக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகத் தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சர் ஒ.பன்னீர்செல்வம் கூறினார்.

❖ திருப்பூர் மாவட்டத்தின் வறட்சிப்பகுதியாகக் கருதப்படுகிற அவிநாசியின் ஒரு பகுதியில் பவானி ஆறு செல்கிறது. ஆனால், அதன் பயன் பிற பகுதிகளுக்குக் கிடைப்பதில்லை. எனவே, பவானி ஆற்றின் உபரிநிரை அவிநாசி, அண்ணூர், திருப்பூர், பல்லடம் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகளுக்கு நீர் வழங்கவேண்டுமென அப்பகுதியினர் கோரிக்கை விடுத்தனர்.

❖ பில்லூர் அணையிலிருந்து அத்திக்கடவு என்ற இடத்தில் ஒரு கால்வாய் அமைத்து அத்திக்கடவு - அவிநாசி கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கான தொழில் நுட்ப வல்லுநர் குழுவின் பரிந்துரை 2011ஆம் ஆண்டு ஏற்க்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

❖ மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்ட வழிகாட்டுதலின்படி, ரூபாய் 1,862 கோடிக்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதுதொடர்பாக நிதி வேண்டி மத்திய அரசுக்கு 2013ஆம் ஆண்டு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டது. ஆனால், இத்திட்டத்திற்கான நிதி வெள்ள மேலாண்மை திட்டப்படி வழங்க முடியாது என்றும், பவானி பாசனக் கட்டுமானங்களை நவீனப்படுத்தி, பாசனத் திட்டமாகச் செயல்படுத்த மத்திய நீர் குழுமம் 2013இல் அறிவுறுத்தியது.

❖ காலிங்கராயன் வாய்க்காலை ரூபாய் 91 கோடி மதிப்பீட்டிலும், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால் தலைப்பகுதிகளில் ரூபாய் 40.55 கோடியிலும் சரிசெய்யப்பட்டு பவானி பாசனக் கட்டுமானம் 2014இல் நவீனப்படுத்தப்பட்டது. இந்தச்சூழலில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனத் தற்போதைய இடைக்கால பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வு மற்றும் ஆவணங்கள் தயாரிக்க, பல்வேறு நிறுவனங்களின் ஒப்புதலைப் பெற ஒரு ஆலோசனை நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் செலவீனங்களுக்காக ரூபாய் 3 கோடியே 27 லட்சத்துக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி, பிப்ரவரி 18ஆம் தேதி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

## செண்பகவள்ளி அருவி நீர்த்தேக்கத் திட்டம் :

❖ திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி தாலுகா, இராயகிரி மலைப்பகுதியில் செண்பகவள்ளி அருவி உற்பத்தியாகிறது. காமராஜர் ஆட்சிக்காலத்தில் செண்பகவள்ளி அணை நீர்த்தேக்கத்திற்கு ரூபாய் 1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்பின் எந்தப் பணியும் நடைபெறாமல் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. செண்பகவள்ளி அருவி தமிழக எல்லையில் உற்பத்தியாகி கேரள எல்லைக்குள் சென்று கடலில் கலக்கிறது. இதைப் பயன்படுத்த தடுப்பணை கட்டினால் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும். அதேபோல் இன்னொரு நீர்ப்பாதை திட்டத்தின்மூலம் மேலும் 10 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிற நிலை ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் பயனடைவதற்குச் செண்பகவள்ளி அருவி நீர்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## எலுமிச்சை ஆறு அணை திட்டம் :

❖ திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, சேரன்மாதேவி ஒன்றியப் பகுதியிலுள்ள எலுமிச்சை ஆறு அணை பாசனத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் பொட்டல், மூலச்சி, மலையான்குளம், செங்குளம் பகுதியில் சுமார் 3500 ஏக்கர் நிலம் நேரடி பாசனம் பெற வாய்ப்பு ஏற்படும். இதிலிருந்து வெளிவரும் உபரிநீர் மணிமுத்தாறு பிரதான கால்வாய் பாசனத்திற்குப் பயன்படும்.

❖ ஜம்பு நதி, ராம நதி, மேட்டுக்கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் 8000 ஏக்கர் நிலம் பயன்பெறும். மணிமுத்தாறு அணை பூங்கா காமராஜர் காலத்தில் நெல்லை மாவட்ட மக்களின் பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப்பட்டது. தற்போது பராமரிக்கப்படாமல் கவனிப்பின்றிக் கிடக்கிறது. இதைப் பராமரித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும். தாமிரபரணி ஆற்றின் குறுக்கில் புதிய தடுப்பணைகள் கட்டப்பட்டு அந்தப் பகுதியில் நீராதாரங்கள் வலுப்படுத்தப்படும்.

## நொய்யல் நதியை மீட்பு திட்டம் :

❖ கோவையின் முக்கிய அடையாளங்களுள் ஒன்று நொய்யல். மிகச்சிறப்பு வாய்ந்த நீர் மேலாண்மை கொண்ட நொய்யல் நதி, 160 கிலோ மீட்டரில் சுமார் 152 கிலோ மீட்டர் சாக்கடையாக ஓடுவது மிகுந்த வேதனைக்குரியதாகும். செல்வபுரம், தெலுங்குபாளையம், செட்டி வீதி பகுதிகளிலுள்ள தொழிற்சாலை கழிவுகள், சாயப்பட்டறை, சலவை பட்டறையின் கழிவுகள் தினசரி இரவு நேரங்களில் நேரடியாக நொய்யலில் விடப்படுகிறது. அதேபோல் திருப்பூர் சாயப்பட்டறை, சலவை பட்டறை, பனியன் நிறுவனங்களின் கழிவுகள் இதில் கலக்கிறது. நொய்யல் நதி மாசுபடுவதைத் தடுக்க இதுவரை தமிழக அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

❖ நொய்யல் நதியில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து கழிவு மற்றும் ரசாயன தண்ணீரை வெளியேற்றினால் மட்டுமே நதியைக் காக்க முடியும். அதற்கு உரிய கொள்கை முடிவைத் தமிழக அரசு எடுக்கவேண்டும்.

❖ தாமிரபரணி, நம்பியாறு, கருமேனியாறு, வெள்ளைநீர் கால்வாய்த் திட்டத்திற்குக் காலவரையறை நிர்ணயம் செய்து நிறைவேற்றப்படும்.

❖ பம்பா, அச்சன்கோயில், வைப்பாறு இணைப்புத் திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படும்.

## தாமிரபரணி நீர்த்திட்டம் :

❖ தாமிரபரணியிலிருந்து ஆண்டுதோறும் மழைக் காலங்களில் கூடுதலாகச் சுமார் 13 டி.எம்.சி. நீர் கடலில் போய்க் கலக்கும். அதனை வெள்ள நீர்க் கால்வாய் மூலம் நாங்குநேரி, இராதாபுரம்,

சாத்தான்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்குத் தண்ணீர் அளிக்கும் திட்டமாக உபயோகப்படுத்தலாம். அதன்படி, தூத்துக்குடியின் எம்.எல்.தேரியில் நீரை நிரப்பவேண்டும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் இரு மாவட்டங்களிலும் 23,000 ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறும். சுமார் 5334 கிணறுகள் நிலத்தடி நீர் பெறும்.

❖ இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 390 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 2006ஆம் ஆண்டில் ரூபாய் 169 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான்கு கட்டங்களாக இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி இரண்டு கால்வாய்கள் வெட்டப்பட்டு பணிகள் முடிந்து நான்காண்டுகள் ஆகின்றன. இதற்காக ஒரு துரும்பையும் அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் அசைக்கவில்லை.

❖ ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் திட்டத்தை நிறைவேற்ற நிதி ஒதுக்கப்படுகிறது. கடைசியாக 2013-14ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூபாய் 156.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் பணிகள் நடைபெறவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையிடம் அனுமதிபெற வேண்டும் என்கிறார்கள். ஆனால், அப்படி அனுமதி பெறாமலா இரண்டு கட்ட பணிகளை முடித்தீர்கள் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் குரல் எழுப்புகின்றனர்.

❖ ஒருபக்கம் வெள்ளம் பெருக்கெடுத்து கடலுக்குள் ஓடுகிறது ; மறுபக்கம் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மக்கள் தவிக்கிறார்கள், பயிர்கள் கருகுகின்றன, நிலத்தடி நீர் உவர்ப்பாக மாறிவிட்டது. அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் முடக்கி வைக்கப்பட்டுள்ள இந்த ஆறுகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 45. வேலைவாய்ப்பைப் பெருக்குவோம்

❖ 2015 ஆகஸ்ட் வரை தமிழகம் முழுவதும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 92 லட்சத்தைத் தாண்டி இருக்கிறது. இதில் பெண்கள் 44 லட்சம் பேர் ; பட்டதாரி ஆசிரியர்கள் 3 லட்சத்து 95 ஆயிரம் பேர் ; பொறியியல் பட்டதாரிகள் 2 லட்சம் பேர் ; அறிவியல் பட்டதாரிகள் 3.25 லட்சம் ; கலைப்பிரிவு பட்டதாரிகள் 4.30 லட்சம் பேர் ; வணிகவியல் பட்டதாரிகள் 3.25 லட்சம் பேர் எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

❖ அ.தி.மு.க. ஆட்சி அமையும்போது 2011இல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 67 லட்சம் பேர் பதிவு செய்திருந்தனர். இதில் கடந்த ஐந்தாண்டுகளில் மேலும் 25 லட்சம் பேர் அதிகரித்துள்ளனர். ஆண்டுதோறும் 20 ஆயிரம் பேர் எனக் கடந்த நான்காண்டுகளில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் ஓய்வுபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்குவேன் என்று கூறிய ஜெயலலிதா ஆட்சியில், ஏறத்தாழ ஒரு கோடி பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து காத்திருக்கவேண்டிய அவலநிலை உள்ளது. இதுதான் ஜெயலலிதா அரசின் சாதனையா?

❖ தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்த அனைவருக்கும் ஐந்தாண்டுகளுக்குள் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படுகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ அரசுத் துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியே வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் தனிப்பட்ட திறன் எதுவும் இல்லாமல் இருக்கிறார்கள். இந்நிலையைப் போக்க அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.
- படித்த பட்டதாரிகள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்கள் சுயதொழில் தொடங்க வங்கிகள் மூலமாகக் கடன் வழங்கப்படும். இதன்மூலம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படும்.
- வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து வேலை கிடைக்காத பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் ரூபாய் 1,000 ; பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூபாய் 500 ; பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு ரூபாய் 300 ; பத்தாம் வகுப்புக்கும் கீழ் படித்தவர்களுக்கு மாதம் ரூபாய் 200 உதவித்தொகை வழங்க ஆவன செய்யப்படும்.

## 46. இலங்கைத் தமிழர் உரிமை காத்திடுவோம்

- *இலங்கைத் தமிழர்களின் நாற்பது ஆண்டுகால பிரச்சினையைத் தீர்க்க பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தியும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவும் இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஏற்படுத்தினார்கள். இந்த உடன்பாட்டின் அடிப்படையில், இலங்கை நாடாளுமன்றத்தில் 13வது அரசமைப்புச் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இந்த அடிப்படையில்தான் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இதன்மூலம்தான் இலங்கைத் தமிழர்களுக்குச் சமவுரிமை, சமவாய்ப்பு கிடைக்கும்.*
- *இலங்கையில் 2009இல் நடைபெற்ற போருக்குப்பிறகு, வடக்கு மாகாணத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி சி.வி.விக்னேஷ்வரன் தலைமையில் அமைந்துள்ளது. இதன்மூலம் அங்கே ஜனநாயகம் செயல்பட தொடங்கியிருக்கிறது. அங்கே வாழ்கிற மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண அரசும், சமீபத்தில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்கள்.*
- *இலங்கைத் தமிழர்களுக்காகக் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இந்தியாவின் வீட்டுவசதி திட்டத்தின்மூலம் இலங்கையில் 50 ஆயிரம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு தமிழர்கள் குடியமர்த்தப்பட்டு உள்ளார்கள். அங்கே புதிய மருத்துவமனைகள், சாம்பூர் மின் நிலையம், 118 கிலோ மீட்டர் கொண்ட தென்பகுதி ரயில்வே திட்டம், 252 கிலோ மீட்டர் கொண்ட வடப்பகுதி ரயில்வே திட்டம், காங்கேசன் துறைமுகம் அமைத்தல், பலாலி விமான நிலையம் புனரமைப்பு எனப் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு நிறைவேற்றி இருக்கிறது. மேலும், புதிய கல்விக்கூடங்கள், விவசாயத்திற்கு டிராக்டர், இடுபொருள்கள், மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகள், உபகரணங்கள், வீட்டுவசதி ஆகியவை செய்துதரப்பட்டுள்ளன.*
- *இலங்கையில் வாழ்கிற இந்தியத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம் தமிழர்கள் என ஏறத்தாழ 50 லட்சம் பேர் அங்கே தங்கள் வாழ்வாதாரத்தை நம்பியுள்ளார்கள். அவர்களது உரிமைகள் காப்பாற்றப்படவேண்டும் என்பதில் இந்திய அரசு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*
- *இலங்கையில் தமிழர்களின் பிரதிநிதிகளாக இருக்கிற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசை வலியுறுத்துகிற வகையில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கிற வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*
- *இலங்கை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாண அரசுக்கு அதிக அதிகாரங்களை வழங்க இலங்கை அரசை வலியுறுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

## 47. தகவல் அறியும் ஆணையத்தைச் சீரமைப்போம்

அரசு நிர்வாகம் குறித்து அனைத்துத் தகவல்களையும் ஒவ்வொரு குடிமகனும் அறிந்துகொள்ளவே தகவல் அறியும் உரிமைச் சட்டம் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசால் 2005இல் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் அமைக்கப்பட்ட தமிழக தகவல் அறியும் ஆணையம் அ.தி.மு.க. அரசின் கைப்பாவையாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையைப் போக்கி தகவல் அறியும் ஆணையத்தைச் சீரமைக்க ஆவன செய்வோம்.

## 48. சேதுசமுத்திரத் திட்டம் ; சென்னை - மதுரவாயல் திட்டம்

❖ தமிழக மக்களின் நீண்டகால கனவான சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் ரூபாய் 2,427 கோடி முதலீட்டில் செயல்படுத்த 2005இல் அடிக்கல் நாட்டப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்தது. அதில் திடீரென மதச்சாயம் பூசப்பட்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டுச்சதியில் திட்டம் முடக்கப்பட்டுள்ளது.

❖ சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் இடையே 19 கிலோ மீட்டர் உயர்மட்ட சாலைப் பணிகளுக்குப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் ஜனவரி 2009இல் அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்காக ரூபாய் 1,800 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது. செப்டம்பர் 2010இல் பணிகள் தொடங்கப்பட்டு ரூபாய் 700 கோடி செலவழித்தபிறகு, திடீரென அ.தி.மு.க. ஆட்சியில் பொருந்தாத காரணங்களைக் கூறி திட்டம் நிறுத்தப்பட்டது. இதற்கான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

❖ சேதுசமுத்திரத் திட்டம், சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் இடையே உயர்மட்ட சாலைப் பணிகளை மீண்டும் தொடங்கி நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 49. இயற்கை பேரிடர் மேலாண்மையை உறுதி செய்வோம்

❖ ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தை 2005இல் நிறைவேற்றி, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் முதலமைச்சர் தலைமையில் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கவேண்டும் என்று அந்தச் சட்டம் வழிவகை செய்தது.

❖ தமிழக அரசின் செயலற்றத்தன்மையால் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைப்பதில் காலதாமதம் செய்யப்பட்டது. கடும் விமர்சனத்திற்குப் பிறகே முதலமைச்சர் தலைமையில் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது. வெள்ளப்பெருக்கு ஏற்படுகிற வரை கூட்டப்படாத பேரிடர் மேலாண்மை ஆணையம் தனது பணிகளைச் செய்வதில் முழுதோல்வி அடைந்தது. பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பாகப் பேரிடர் மேலாண்மையைச் செய்யவேண்டிய தமிழக அரசு, செய்யத் தவறியதன் காரணமாக இத்தகைய பேரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

❖ இனிவரும் காலங்களில் இத்தகைய பாதிப்புகள் ஏற்படாத வகையில் தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை ஆணையம் சிறப்பாகச் செயல்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாநில அளவில் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைப்பதோடு மாவட்ட, வட்டார அளவிலும் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை கமிஷன்**

❖ தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை செயல்படாத காரணத்தால், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து முன்னறிவிப்பின்றி நீர் திறந்துவிடப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக நூற்றுக்கணக்கான உயிர்கள் அடித்துச் செல்லப்பட்டன, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள உடைமைகள் வெள்ளத்தால் உருக்குலைந்தன. தொழிற்சாலைகள் கடும் நஷ்டத்திற்கு ஆளாகவேண்டியநிலை ஏற்பட்டது. இதற்குத் தமிழக ஆட்சியாளர்கள்தான் பொறுப்பாகும். இதுகுறித்து விசாரணை செய்ய ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை கமிஷன் அமைத்து குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 50. கூட்டுறவு தேர்தல்

- கூட்டுறவே நாட்டுயர்வு என்கிற வகையில் கூட்டுறவு அமைப்பு முறைகளைத் தமிழகத்தில் சீரமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- அரசியல்வாதிகளின் தலையீட்டிலிருந்து கூட்டுறவு அமைப்புகள் முற்றிலும் விடுவிக்கப்படும்.
- சுயேட்சையான, வெளிப்படையான பாரபட்சமற்ற முறையில் தேர்தலை நடத்த புதிய அமைப்பு உருவாக்கப்படும்.
- கூட்டுறவு தேர்தலுக்காகப் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, புதிய அமைப்பின் மூலமாக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படும்.

## 51. பொது நூலகத்துறையைச் சீரமைப்போம்

- 1948இல் உருவாக்கப்பட்ட பொது நூலகச் சட்டம், இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நூலகக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. நூலகத்துறையை அத்துறையைச் சார்ந்தவர்களே நிர்வகிக்கிற நடைமுறைகள் நீண்டகாலமாக இருந்தது. ஆனால், கடந்த சில வருடங்களாக இந்த நடைமுறை ரத்து செய்யப்பட்டு, கல்வித்துறை அதிகாரிகளின் மூலமாகப் பொது நூலகத்துறை நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எனவே, பொது நூலகத்துறை வெளிப்படையான நிர்வாகத்தோடு செயல்பட கல்வித்துறையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, நூலகத் துறையைச் சார்ந்த அதிகாரிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும்.
- தமிழகப் பொது நூலகத் துறையில் மாவட்ட நூலக அலுவலர் பணியிடங்கள் 22 மாவட்டங்களில் காலியாக உள்ளன. தமிழகத்தில் 32 மாவட்டங்களில் 32 மாவட்ட மைய நூலகங்கள், 4012 கிளை நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்கள் மற்றும் பகுதி நேர நூலகங்கள் உள்ளன.
- 2007ஆம் ஆண்டுக்குப் பிறகு, நூலகத் துறையில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. நூலகத் துறை இயக்குநர், இணை இயக்குநர், துணை இயக்குநர் பதவிகளும் காலியாக உள்ளன. இப்பணிகளைக் கூடுதல் பொறுப்பாகக் கல்வித்துறையைச் சேர்ந்தவர்களே கவனிக்கின்றனர்.
- நூலகத் துறை இயக்குநராக ஐ.ஏ.எஸ். அந்தஸ்த்தில் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். தற்போது பள்ளிக் கல்வித்துறை இயக்குநரே கூடுதல் பொறுப்பாக, நூலகத்துறை இயக்குநராக இருக்கிறார்.
- நூலகத் துறை வருவாய் வாய்ப்புள்ள துறையாகும். உள்ளாட்சித் துறைகள் மக்களிடம் வசூலிப்பதில் 10 சதவிகித செஸ் வரி நூலகத் துறைக்குக் கிடைகிறது. குறிப்பாகச் சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 6 கோடி, கோவை மாநகராட்சிக்கு ரூபாய் 3 கோடி வருவாயும் நூலகத்துறைக்கு ஆண்டுதோறும் கிடைக்கிறது. இந்த வரி வருவாயைச் சரியான முறையில் பயன்படுத்தாததால் இத்துறை செயல்பாடில்லாமல் முடிங்கிக் கிடக்கிறது.
- கடந்த காலங்களில் இந்தியாவிலேயே தலைசிறந்து விளங்கிய தமிழக நூலகத்துறை இழந்த நற்பெயரை மீண்டும் அடைய உரிய நடவடிக்கைகளை எடுத்து, அதன் செயல்பாடுகளில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவோம்.
- காலிப் பணி இடங்கள் நிரப்பப்படும்.
- செய்தித்தாள்களும், மாத, வார இதழ்களும் அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி வாங்கப்படும்.
- தரமான மொழிபெயர்ப்பு நூல்களுக்கு ஆதரவு கொடுக்கவும், தரமான தமிழ் நூல்களை வாங்கியும் பதிப்புத் துறைக்குப் புத்துயிர் கொடுக்கப்படும். நியாயமான, வெளிப்படையான முறையில் பதிப்பாளர்களிடமிருந்து புத்தகங்கள் கொள்முதல் செய்யப்படும்.
- அனைத்து நூலகங்களிலும் உலகளாவிய செய்திகளை அறிந்திட, நவீன செய்தித் தொடர்புகள் பெற்றிட ஆவன செய்யப்படும். சமூக வளை தள வசதிகள் உள்ளிட்டவைகளில் WIFI வசதிகள் அமைக்கப்படும்.

## 52. தமிழகத்தில் மீண்டும் மேலவை அமைப்போம்

❖ தமிழகத்தில் மேலவையின் பணிகள் இந்தியாவுக்கே முன்னோடியாகத் திகழ்ந்து வந்தது.

❖ சட்டமன்றத்தில் நடைபெறுகிற சூடான விவாதங்களைத் தணிக்கிற வகையில் மேலவையில் விவாதங்கள் நடப்பதுண்டு.

❖ தேர்தல் அரசியலில் ஈடுபட வாய்ப்பில்லாத அறிஞர் பெருமக்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சிறுபான்மை சமுதாயத்தினர் பிரதிநிதித்துவம் பெறுவதற்காகத்தான் மேலவை உருவாக்கப்பட்டது. அந்த நோக்கத்தைச் சிதைத்து, சீரழித்த பெருமை அ.தி.மு.க. ஆட்சியாளருக்கு உண்டு.

❖ 2006இல் மேலவை மீண்டும் அமைக்கும் முயற்சிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் முட்டுக்கட்டை போட்டதால் மேலவையை அமைக்க முடியவில்லை. அது தற்போது நிலுவையில் உள்ளது. அந்த முட்டுக்கட்டையை நீக்கி மேலவையை மீண்டும் கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ மேலவையை மீண்டும் கொண்டுவரும்போது, பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு, குறிப்பாக திருநங்கைகள் மற்றும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கி, பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

## 53. பத்திரிகையாளர் நலன்

❖ பத்திரிகை தொழில் என்பது காலம், நேரம் பார்க்காமல் கடுமையாக உழைக்கக் கூடியதாக மாறிவருகிறது. பத்திரிகையாளர்களுக்குப் பணி பாதுகாப்பு வழங்கப்படாத நிலை உள்ளது. இவர்களது பிரச்சினையைத் தீர்க்க பல குழுக்கள் அமைக்கப்பட்டாலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை.

❖ பத்திரிகையாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு, ஓய்வூதியம், குடியிருப்பு வசதிகள், குடும்ப நல நிதியை உயர்த்துவது ஆகியவற்றை வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

❖ பத்திரிகையாளர் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வுகாண புதிய அமைப்பை ஏற்படுத்த ஆவன செய்வோம்.

## 54. திரைப்படத் துறையைச் சீர்செய்வோம்

திரைப்படத் துறையைப் பாதுகாக்கிற வகையில் குறைந்த பட்ஜெட் படங்களுக்குச் சலுகைகள், உபகரணங்கள் வாங்குவதில் வரிச் சலுகைகள், பாரபட்சமற்ற வெளிப்படைத்தன்மையுடன் கூடிய கேளிக்கை வரிச் சலுகைகள், வெளிப்புற படப்பிடிப்பு அனுமதியில் தளர்வு, தணிக்கைத்துறையில் தகுதிவாய்ந்தவர்களை நியமித்து சார்பற்ற நிலையைக் கடைப்பிடித்தல், திரையரங்கு கட்டண விகிதத்தை முறைப்படுத்த கண்காணிப்பகம், திருட்டு சி.டி.யை ஒடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 55. கிராமியக் கலை - ஜல்லிகட்டு

கிராமியக் கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசின் மக்கள் நலன்சார்ந்த திட்டங்களை விளக்கும் வகையில் நிகழ்ச்சிகள் அமைக்கப் பயன்படுத்தப்படுவார்கள். நலிந்த கிராமியக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம், பயணச்சலுகை, மருத்துவச் செலவு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பா.ஜ.க. அரசின் தவறான அணுகுமுறையால் தடைவிதிக்கப்பட்ட ஜல்லிகட்டு விளையாட்டை மீண்டும் நடத்த தீவிர முயற்சிகளை மேற்கொள்வோம்.